வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959


Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu வாரமலர்




Email : news@eelanadu.lk | மலர் : 06 | 10.08.2025 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 222 | பக்கங்கள் : 16





# முகாமுக்கு அழைத்து தாக்குதல்; இளம் குடும்பஸ்தர் உயிரிழப்பு!

## முத்துஐயன்கட்டில் சிப்பாய்கள் மூவர் கைது

- மற்றோர் இளைஞர் படுகாயம்
- குளத்திலிருந்து சடலம் மீட்கப்பட்டது
- கொந்தளிப்பு நிலையில் கிராம மக்கள்

- ச. தவசீலன் -

முல்லைத்தீவு, ஓகஸ்ட் 10

ஐந்து இளைஞர்களை முகாமுக்கு வருமாறு அழைத்த இராணுவத்தினர் அவர்கள்மீது நடத்திய கொடூர தாக்குதலில் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார். உயிரிழந்தவரின் சடலம் நேற்றுக் காலை முத்துஐயன்கட்டு குளத்திலிருந்து மீட்கப்பட்டது.



இதேசமயம், இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்திவரும் விசேட பொலிஸ் குழு 3 இராணுவத்தினரை கைது செய்துள்ளது.

முல்லைத்தீவு - முத்துஐயன்கட்டு - ஜீவ நகர் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் எதிர்மன்னசிங்கம் கபில்ராஜ்

15

# 12 அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் சந்திப்பு!

## ஜீ.எல்.பீரிஸின் இல்லத்தில் நடந்தது

கொழும்பு, ஓக. 10

முன்னாள் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் மற்றும் 12 அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு இடையே இரகசிய சந்திப்பொன்று நடத்தப்பட்டுள்ளது.

நாரஹேன்பிட்டி கிருல வீதியிலுள்ள முன்னாள் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸின் இல்லத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

அரசாங்கத்தின் செயற்பாடுகள், தற்போதைய அரசியல், பொருளாதார நிலைமைகள், அமெரிக்க வரி விதிப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து இதன் போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான ரவூப் ஹக்கீம், மனோ கணேசன், தயாசிறி

15

# தலைமறைவாகியுள்ள அத்துரலிய ரத்ன தேரர்

## சல்லடை போட்டு தேடும் அதிகாரிகள்

கொழும்பு, ஓக. 10

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் நிலையில், அந்த முயற்சிகள் தொடர்ந்தும் தோல்வியடைந்து வருகின்றன.

அவர் கொழும்பு மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் தங்கியிருப்பதாக அறியப்படும் சுமார் 10 இடங்களில் கொழும்பு குற்றப்பிரிவு அதிகாரிகள் சோதனை செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் பல விகாரைகள் மற்றும் வீடுகள்

15

# புலமைப்பரிசில் பரீட்சை இன்று

கொழும்பு, ஓக. 10

2025 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை இன்று நடைபெறும் எனப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாடு முழுவதும் 2 ஆயிரத்து 787 பரீட்சை நிலையங்களில் பரீட்சை நடைபெறவுள்ளது. அதற்கான ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

இது குறித்து பொது மக்களுக்கு

15

# இலங்கையர்களால் அதிகம் தாக்கப்படும் இந்தியர்கள்!

புதுடில்லி, ஓக. 10

வெளிநாடுகளில் இந்திய நாட்டவர்கள் தாக்குதலுக்கு உள்ளாகும் எண்ணிக்கை வெகுவாக குறைவடைந்துள்ள போதிலும், இலங்கையில் அதிகரித்தே காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சை மேற்கோள் காட்டி இந்திய ஊடகங்கள் இந்த செய்தியை வெளியிட்டுள்ளன.

இதன்படி, 2025ஆம் ஆண்டு இதுவரையான காலப்பகுதியில், இலங்கை உள்ளிட்ட வெளிநாடுகளில் இந்திய நாட்டவர்கள் மீதான தாக்குதல் 50 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதேநேரம், 2023 ஆம் ஆண்டில், குறித்த

15

# தமிழ்க் கட்சிகள் இணக்கமின்றேல் தமிழ்த் தேசியம் முற்றாக அழியும்!

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எச்சரிக்கை

- த.பிரதீபன் -



யாழ்ப்பாணம், ஓக. 10

ஐ.நாவுக்கு கடிதம் அனுப்பும் விவகாரத்தில் தமிழரசுக் கட்சியே பொய்யுரைத்தாக குற்றம் சாட்டியுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ்க் கட்சிகளிடையே இப்போது இணக்கப்பாட்டை ஏற்படுத்த தவறினால் தமிழ்த் தேசியம் முற்றாக அழியும் எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கொக்குவிலில் உள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவல கத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பின்போது அதன் தலைவரும்

15

# புதிய அரசமைப்பு குறித்து ஜனாதிபதி அநுர மௌனம்!

## ஐக்கிய மக்கள் சக்தி விசனம்

கொழும்பு, ஓக. 10

"நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை அநுரகுமார திஸாநாயக்கவும் அனுபவிக்க ஆரம்பித்துள்ளார் போலும். அதனால்தான் அவரது பாராளுமன்ற உரையில் புதிய அரசமைப்பு பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை." - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

"புதிய அரசியல் கலாசாரத்தை ஏற்படுத்துவதற்காக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கம், தேர்தல் முறைமை மாற்றம் உள்ளடங்கலாக புதிய அரசியலமைப்பு விரைவில் இயற்றப்படும் தேசிய

15

# மாகாணசபைத் தேர்தலை முடிந்தால் நடத்தி காட்டுக!

## மொட்டு கட்சி அரசுக்கு சவால்

கொழும்பு, ஓக. 10

முடிந்தால் மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு, பொதுஜன பெரமுன கட்சி சவால் விடுத்துள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அக்கட்சியின் உறுப்பினர் ஜானக வக்கும்புர,

உள்ளூராட்சிச்சபைத் தேர்தல் முடிந்துவிட்டது. எனினும், மாகாண சபைத் தேர்தல் இன்னும் நடத்தப்படவில்லை. அது நடத்தப்பட வேண்டும்.

15

# பழைய முறையில் மாகாண தேர்தல் நடத்துவதற்கு முழுமையான ஆதரவு!

## திஸ்ஸ அத்தநாயக்க அறிவிப்பு

கொழும்பு, ஓக. 10

மாகாண சபைத் தேர்தலை பழைய முறைமையில் நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்தால் அதற்கு முழுமையான ஒத்துழைப்பினை வழங்குவதற்கு நாம் தயார். முடிந்தளவு விரைவாக தேர்தலை நடத்தி மக்கள் ஆட்சிக்கு இடமளிக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்துவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

மாகாணசபைத் தேர்தல் குறித்து வினவிய போது இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

பழைய முறைமையிலேனும் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட்டால் அதனை நாம் வர வேற்கின்றோம். மாகாணசபைத் தேர்தல்

15

உண்மைகள் புனிதமானவை, கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ முகாமுக்குள் தாக்குதல் நீதியான விசாரணை இடம்பெறும்

## ஜெகதீஸ்வரன் எம். பி. தெரிவிப்பு

வவுனியா, ஒக. 10

முல்லைத்தீவு முத்தையன் கட்டு இராணுவ முகாமுக்குள் சென்ற இளைஞர்கள் தாக்கப் பட்டமை மற்றும் மரணம டைந்தமை தொடர்பில் நீதி யான விசாரணை நடத்தப்படும் என தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு, முத்தையன் கட்டு இராணுவ முகாமுக்குள் சென்ற இளைஞர்கள் மீது தாக் குதல் நடத்தப்பட்டதாகவும் தப்பியோடிய இளைஞர்களில் ஒருவர் மரணமடைந்ததாகவும் தெரிவிக்கப்படும் சம்பவம் தொடர்பில் நேற்றுக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ் வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு, முத்தையன் கட்டு இராணுவ முகாமுக்குள் 7 இளைஞர்கள் சென்றதாகவும் அவர்கள் இராணுவத்தினரால் விரட்டப்பட்டதாகவும் தாக்கு தல் நடத்தப்பட்டதாகவும் பொது மக்கள் தெரிவித்துள்ள துடன் தப்பியோடிய ஒருவர் குளத்திலிருந்து சடலமாக மீட் கப்பட்டார். இந்தச் சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட வர்களுடன் தொலைபேசி ஊடாக உரையாடியதுடன் அவர்களது கருத்துக்களையும் கேட்டறிந்து கொண்டேன்.

இது தொடர்பில் வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் மற்றும் முல்லைத்தீவு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், பிர தேச செயலாளர் ஆகியோரு டன் தொலைபேசியில் பேசியிருந்தேன். பொலிஸார் இது தொடர்பில் நீதியான வகையில் விசாரணைகளை முன்னெடுப்பதாக தெரிவித் துள்ளனர். அத்துடன் எமது உயர் மட்ட அமைச்சர்களுக் கும் இது தொடர்பில் தெரி யப்படுத்தியுள்ளேன். அவர்க ளும் இது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளனர்.

ஆகவே, இந்தச் சம்பவம் தொடர்பில் எமது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் விசாரணை களை மேற்கொண்டு உண்மைத் தன்மையை வெளிப்படுத்தி, பாதிக்கப்பட்ட குடும்ப பங்க ளுக்கு நீதி பெற்றுக் கொடுக் கப்படும்."- என்றார். (எ-10)



## வட்டு. இந்துக் கல்லூரியில் சிவலிங்கம் பிரதிஷ்டை

யாழ்ப்பாணம், ஒக. 10

சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்வதற்கான கட்டடத் துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் நடை பெற்றது.

பாடசாலையில் ஆன்மீக சிந்தனையை வளர்க்கும் நோக் கில் சிவலிங்கம் ஒன்றுக்கான கோரிக்கையை பாடசாலையின் இந்து மாமன்றத்தினர் முன் வைத்த வேளை சிவபூமி அறக் கட்டளையினரால் சிவலிங்கம் ஒன்று வழங்கப்பட்டது.

அந்த சிவலிங்கத்தை பிர திஷ்டை செய்வதற்கான கட் டடத்தை அமைப்பதற்கான நிதியை தென்னாடு சைவ மகா சபையினர் வழங்கினர். அந்தவகையில் தமிழ் முறைப் படி மந்திரங்கள் உச்சரித்து, பூஜை வழிபாடுகளின் பின்னர் சிவலிங்க பீடத்துக்கான அடிக் கல் நாட்டி வைக்கப்பட்டது.

பாடசாலையின் பதில் அதிபர் வதனி தில்லைச் செல்வனின் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த நிகழ்வில் இந்து மாமன்ற பொறுப்பாசிரியர் யோ. கேதீஸ ன், வலயத்தின் பிரதிநிதிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், தென்னாடு சைவ மகா சபையின் பிரதிநிதிகள் மற்றும் பழைய மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டு கட்டடத்துக்கான அடிக கல்லை நாட்டினர். (எ-05)

# வவுனியா பல்கலை அருகே அரச காணிகள் அபகரிப்பு!

## அதனை கையகப்படுத்தி பிரதேச செயலகத்திடம் வழங்குமாறு வவுனியா நீதிமன்ற நீதவான் உத்தரவு

வவுனியா, ஒக. 09

வவுனியாவில் பல்கலைக்கழ கத்துக்கு அருகே 4 ஏக்கர் அரச காணி தனியாரினால் அபகரிக் கப்பட்ட நிலையில் அக்கா ணியை கையப்படுத்தி பிரதேச செயலகத்துக்கு வழங்குமாறு வவுனியா மாவட்ட நீதிமன்ற நீத வான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

**2024ஆம் ஆண்டு இறுதி** யில் தனியாரினால் குறித்த அரச காணி அபகரிக்கப்பட்ட மையுடன் தொடர்ச்சியாக ஏனைய தனிநபர்களினாலும் காணி தொடர்ச்சியாக ஆக்கிர மிக்கப்பட்டன.

இதனையடுத்து இவ்வருடம் ஆரம்பத்தில் பிரதேச செயலகத் தினால் அரச காணியிலிருந்து வெளியேறுமாறு முதலாவது வெளியேற்றல் கட்டளையும் பிறப்பிக்கப்பட்டது.

மேலும் அவ் வெளியேற்றல் கட்டளையை ஏற்றுக்கொள்ளா மையினால் வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் மேற்கொள்ளப்பட்டது.

இவ் வழக்கை பிரதேச செய லாளர் இந்திரராசா பிரதாபன் மற்றும் காணி உத்தியோகத்தர் வசந்தன் , காணிக்கிளை அதிகா ரிகள் அரச காணிகளுக்கான ஆவணங்களை வழங்கி வாதாடி வந்தனர்.

இந்நிலையில் வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றில் குறித்த அரச காணியிலுள்ளவர் களை வெளியேற்றி காணியை பிரதேச செயலகத்துக்கு கைய ளிக்குமாறு நீதவான் உத்தரவு பிறப்பித்தார்.

நீதிமன்ற பதிவாளரின் தலை மையில் தனியாரினால் ஆக்கிர மிக்கப்பட்ட இடத்துக்கு சென்ற கிராம சேவையாளர் நிலான், குடியேற்ற உத்தியோ கத்தர் பண்டார , நீதிமன்ற மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் அடங்கிய குழுவினர் அரச காணியிலுள்ள வர்களை வெளியேறுமாறு தெரிவித்தமையுடன் கட்டடங் களை இடித்து காணியினை பிரதேச செயலக கட்டுப்பாட் டுக்குள் கொண்டு வருமாறும் இக் காணி பிரதேச செயலக காணி என தெரிவித்து காணியி லிருந்து ஒரு பிடி மண்ணை நீதி மன்றப் பதிவாளர் கையில் எடுத்து குடியேற்ற உத்தியோ கத்தர் மற்றும் கிராம சேவையா ளர் ஆகியோரின் கையில் ஒப் படைத்தார். (அ-10)

# நல்லை ஆதீனத்தில் இன்று தெய்வீக கலை அர்ச்சனை

யாழ்ப்பாணம், ஒக. 10

இந்து சமய கலாசார அலு வல்கள் திணைக்களம் நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தான வரு டாந்த மஹோற்சவத்தை முன் னிட்டு நல்லை திருஞானசம்பந் தர் ஆதீன கலா மண்டபத்தில் கடந்த 29 ஆம் திகதி செவ் வாய்க்கிழமை தொடக்கம் எதிர் வரும் 22 ஆம் திகதி வெள்ளிக் கிழமை வரை தினமும் காலை 10. 00 மணிக்கு "தெய்வீகக் கலை அர்ச்சனை" நிகழ்வை நடத்தி வருகிறது. அந்த வகையில் இன்று ஞாயிற்றுக் கிழமை இணுவில் தமிழ்ச் சங்க பஜனைக்குழுவினரின் பஜனை நிகழ்வு நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் கலந்து கொள் ளுமாறு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய. அநிருத்தனன் அறிவித்துள்ளார். (எ)

# இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியின் 135ஆவது ஆண்டு நடைபவனி நேற்று




வவுனியா, ஒக. 10

வவுனியாவின் முன்னணி தேசிய பாடசாலையான இறம் பைக்குளம் மகளிர் கல்லூரியின் 135ஆவது ஆண்டினை கொண் டாடும் முகமாக நேற்றுக்காலை வவுனியா நகரில் நடைபவனி நடைபெற்றது.

வவுனியாவில் கல்வி மற்றும் இணைப்பாட விதானச் செயல் பாடுகளில் பல்வேறு சாதனை களைப் படைத்து வரும் இறம் பைக்குளம் மகளிர் கல்லூரி 135 ஆவது ஆண்டினை கொண் டாடி வருகின்றது. இரண்டாயி ரத்துக்கும் மேற்பட்ட மாணவி கள் கல்வி கற்கும் இந்தக் கல்லூ ரியின் ஆண்டு விழாவுக்கு வலுச் சேர்க்கும் முகமாக கல்லூரியின் மாணவிகள், பழைய மாணவி கள், ஆசிரியர்கள், பெற் றோர்கள் மேள தாள வாத்தி யங்கள் மற்றும் இசை மழை யுடன் நடைபவனி ஒன்றை மேற்கொண்டனர்.

பாடசாலை முன்பாக ஆரம் பித்த இந்த நடைபவனியானது இரண்டாம் குறுக்குத் தெரு ஊடாக கண்டி வீதியை அடைந்து அங்கிருந்து மணிக் கூட்டு கோபுரச் சந்தியை அடைந்து பசார் வீதி ஊடாகச் சென்று ஹொரவப்பொத் தானை வீதி ஊடாக பாட சாலை முன்றலை சென்றடைந் தது.

குறித்த நடைபவனி காரண மாக நேற்றுக்காலை வவுனியா நகரமே பரபரப்பாக காணப் பட்டது. (எ-10)

# சிக்கலில் மாட்டிக்கொள்ள நாங்கள் விரும்பவில்லை!

## ஞாயிற்றுக்கிழமைகளில் கடைகள் பூட்டுவது தொடர்பில் உப தலைவர்

வவுனியா, ஒக. 10

சட்டத்தில் இல்லாத ஒரு விடயத்தை வலுக்கட்டாயமாக செய்யுமாறு கூறி சிக்கலில் மாட்டிக் கொள்ள விரும்ப வில்லை என வவுனியா வர்த்த கர் சங்கத்தின் உப தலைவர் எம். கே. ஆரிப் தெரிவித்தார்.

வவுனியாவில் வர்த்தக நிலை யங்களை ஞாயிற்றுக்கிழமை களில் மூடுமாறு வவுனியா மாநகர சபை வேண்டுகோள் விடுத்துள்ள நிலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற வர்த்தக சங்கத்தின் மாதாந்த கூட்டத் தில் இது குறித்து விவாதிக்கப் பட்டுள்ளது.

இதன் பின்னர் ஊடகங்க ளுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப் பிட்டார். "வவுனியா வர்த்தகர்களின் நலன் கருதியும் அங்கு பணியாற் றும் ஊழியர்களின் நலன் கருதி யும் வற்புறுத்தல் இல்லாது கடைகளை பூட்டி ஊழியர்க ளுக்கு விடுமுறை வழங்கியதை கடந்த காலங்களில் நாங்கள் பார்த்திருக்கின்றோம்.

ஆனால், இப்போது வந் துள்ள மாநகர சபை அதனை நன்றாகவே செய்வதற்கு தீர்மா னித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் நாங்கள் வர்த்தகர் சங்கம் என்ற ரீதியில் பல வர்த்தகர்களிடம் மறைமுகமாக கேட்டபோது கடைகளை பூட்டுவதனால் ஏற்படும் சாதக - பாதகம் தொடர்பில் பலர் கருத்துக் களை வெளியிட்டனர்.

இந்த நிலையில் எல்லாவற் றுக்கும் பொதுவாக சட்டத்தை பார்த்தால் தொழில் ஸ்தாப னத்தை பலவந்தமாகவோ அல்லது அன்பாகவோ பூட்ட சொல்லுகின்ற சட்டம் அல்லது அதிகாரம் எங்களுக்கு இல்லை.

ஆகவே, நட்பு ரீதியான ஓர் இணக்கப்பாட்டினை செயல் படுத்தவே நாங்கள் விரும்பு கிறோம். மாநகர சபை எடுக் கின்ற முயற்சிக்கு ஒத்துழைப் பாக இருக்க வேண்டும் என்பது எங்களுடைய விருப்பம். இது தொடர்பில் மற்றவர்களிடம் கேட்கின்ற போது பல்வேறு கருத்துக்கள் வருவதன் காரண மாக பொதுச் சபையை கூட்டி ஒரு கருத்துக் கணிப்பின் ஊடா கவோ அல்லது வாக்கெடுப்பின் ஊடாகவோ ஒரு நிலைப்பாட் டினை எடுத்து பெரும்பான்மை யினுடைய நிலைப்பாட்டின் அடிப்படையில் அதற்கு இணங் கிப் போகின்ற நிலைமை எமக்கு இருக்கிறது"- என்றார். (எ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்புக்கூறலில் ஐ.நாவின் அணுகுமுறையில் அதிருப்தி!

## உயர்ஸ்தானிகருக்கு அரியநேத்திரன் கடிதம்

கொழும்பு, ஓக. 10

**இலங்கையின் பொறுப்புக் கூறல் விடயத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அணுகுமுறை தொடர்பில் தீவிர கரிசனையை வெளிப்படுத்தி கடந்த ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு - கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி தமிழ்ப் பொதுவேட்பாளராகப் போட்டியிட்ட பா. அரியநேத்திரன், ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டர்க்குக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.**

அந்தக் கடிதத்தில் ஐ. நா. உயர்ஸ்தானிகர் அலுவலகத்துக்கு வழங்கப்பட்டுள்ள ஆணையின் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான தன்மை, பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதில் தொடரும் பேரவையின் தாமதம், சுயாதீனமானதும் நியாயமானதும் செயல்திறன்மிக்கதுமான செயன்முறையொன்றை ஸ்தாபிப்பதற்குப் பதிலாக இலங்கை அரசாங்கத்தில் தங்கியிருத்தல் என்பன தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கையில் இடம்பெற்ற இனவழிப்பு உள்ளிட்ட குற்றங்கள் தொடர்பில் பொறுப்புக்கூறல் உறுதிப்படுத்தப்பட வேண்டும். ஐக்கிய நாடுகள் கட்டமைப்புக்குள் நடைமுறைச்சாத்தியமான வேறு வழிமுறைகளைப் பரிந்துரைத்தல், உயர்ஸ்தானிகர் அலுவலகத்தால் முன்னெடுக்கப்பட்டுவரும் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயல்திட்டத்தை முற்றுமுழுதாக சர்வதேச மயப்படுத்தி விரிவுபடுத்தல், சுயாதீனமானதும் பக்கச்சார்பற்றதுமான பொறிமுறையொன்றைப் பரிந்துரைத்தல் ஆகிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (எ)

# தேசிய பூங்காவில் நீண்ட வரிசை

பொலநறுவை, ஓக. 10

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் கவனத்தை ஈர்த்த பொலநறுவை, கவுடுல்ல தேசிய பூங்காவைப் பார்வையிட ஏராளமான மக்கள் வந்திருந்தாலும் பிரவேசச்சீட்டு வழங்குவதற்கு முறையான திட்டம் இல்லாததால் நீண்ட வரிசைகள் உருவாகியுள்ளன.

இதற்கு அதிகாரிகள் உடனடி தீர்வை வழங்கி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் எந்த சிரமமும் இல்லாமல் பூங்காவைப் பார்வையிட அனுமதிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதிகரித்து வரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை மற்றும் ஓகஸ்ட் விடுமுறை காலம் காரணமாக கவுடுல்ல தேசிய பூங்கா சுற்றுலாப் பயணிகளால் நிரம்பியுள்ளது.

சுற்றுலாப் பயணிகள் பிரவேசச்சீட்டு பெற்று பூங்காவைப் பார்வையிட பல மணிநேரமாக நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டியுள்ளது.

இந்த தாமதம் விலங்குகளைப் பார்ப்பதற்கான வாய்ப்புகளை இழக்கச் செய்வதாக சுற்றுலாப் பயணிகளும் சுற்றுலா வழிகாட்டிகளும் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

பிரவேசச்சீட்டுகள் வழங்க குறைந்த எண்ணிக்கையிலான அதிகாரிகள் மட்டுமே இருப்பதால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. (எ)

# ஒலிபெருக்கிகள் பயன்படுத்தத்தடை குருமுதல்வருக்கு அரச அதிபர் நன்றி

யாழ்ப்பாணம், ஓக. 10

கத்தோலிக்க தேவாலயங்களில் திருநாட்களின் போது வீதிகளில் ஒலிபெருக்கிகள் பயன்படுத்தத் தடை என யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி ப. யோ. ஜெபரட்ணம் அடிகளார் அறிவித்துள்ளார். இவ் முன்மாதிரியான செயல்பாடுகள் குறித்து அடிகளாருக்கு தனது நன்றி கலந்த பாராட்டுக்களை யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்துள்ளார். (எ)

# புதிய கல்வி சீர்திருத்தம் தொடர்பில் ஆஸி ஆளுநருக்கு பிரதமர் விளக்கம்

கொழும்பு, ஓக. 10

அனைவராலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உயர்தரக் கல்வி முறைமையைக் கொண்டிருப்பதற்காக அமுல்படுத்தப்படவிருக்கும் புதிய கல்விச் சீர்திருத்தம் தொடர்பில் அவுஸ்ரேலிய ஆளுநர் நாயகத்துக்கு பிரதமர் விளக்கமளித்தார்.

இலங்கைக்கு வருகைதந்துள்ள அவுஸ்திரேலிய ஆளுநர் நாயகம் சமந்தா ஜோய் மோஸ்டினுக்கும் பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கும் இடையிலான சந்திப்பு அலரிமாளிகையில் நடைபெற்றது.

அவுஸ்திரேலியாவின் கல்வி முறைமை குறித்து ஆளுநர் நாயகம் பிரதமருக்குத் தெளிவுபடுத்தியதுடன், இத்துறையில் மிக நெருக்கமாக இணைந்து செயல்படுவதற்கான தமது ஆர்வத்தையும் வெளிப்படுத்தினார்.

இரு தரப்பினரும் பாலின சமத்துவத்துக்கான தமது நடைமுறைகளை பிரதிபலிக்கும் வகையில் அரசியலில் பெண்களின் பங்கேற்பையும் தலைமைத்துவத்தையும் அதிகரிப்பதன் முக்கியத்துவம் குறித்தும் பயனுள்ள கருத்துகளைப் பரிமாறிக் கொண்டனர்.

இலங்கையின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு அவுஸ்திரேலியா தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்கும் என உறுதியளித்த ஆளுநர் நாயகம், பல துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் கலந்துரையாடினார். (எ)

# தெய்வீக திருக்கூட்டத்தொடர் பதின்மூன்றாம் நாள் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக. 10

நல்லூர் கந்தன் உற்சவகாலப் பெருந்திருவிழாவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் முன்னெடுக்கும் தெய்வீகத் திருக்கூட்டத் தொடரின் 13ஆம் நாள் நிகழ்வு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 04.00 மணி நடைபெறும்.

வேதாந்த மடம் சிறீ சிவகுருநாத பீட 8 ஆவது குருபீடாதிபதி சிறீ வேதவித்தியாசாகரர் சுவாமிகள் திருமுன்னிலை வகிக்க

யாழ். பல்கலைக்கழகச் சமஸ்கிருதத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் பிரம்மசிறீ சுப்பிரமணிய சாஸ்திரிகள் நவநீதகிருஷ்ணன் தலைமையில் இந்தத் திருக்கூட்ட நிகழ்வு நடைபெறும்.

இதில், காரைநகர் பிரதேச செயலாளர் நவரத்தினம் ரஞ்சனா பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

குளோபல் பீஸ் லைவ் பௌண்டேசன் நிறுவுநர் மற்றும் தலைவர் வி. நிரஞ்சன் சிறப்பு விருந்தினராகவும் கௌரவ விருந்தினர்களாக காரைநகர், பாலாவோடை சிறீ முத்துமாரி அம்மன் ஆலய நிர்வாகி சங்கரப்பிள்ளை பாலச்சந்திரனும் காரைநகர் கல்வந்தாழ்வு சிறீ முருகன் ஆலய பரிபாலன சபை செயலாளர் தர்மலிங்கம் வசந்தகுமாரும் காரைநகர் பிட்டியெல்லை கலியங் கண்டி கண்ணகை அம்மன் ஆலயத் தலைவர் பேரம்பலம் தேவபாஸ்கரனும் காரைநகர் சிவகாமி அம்பிகா சமேத சிறீ சிதம்பரேஸ்வரர் ஆலய நிர்வாகம் சார்பாக நித்தியானந்தன் கஜேந்திரனும் கலந்துகொள்வர்.

கலை நிகழ்வுகளை காரைநகர் பிரதேச செயலகப் பிரிவின் சிவகாமி அம்பிகா சமேத சிறீ சிதம்பரேஸ்வரர் அறநெறிப் பாடசாலை, பாலாவோடை சிறீ முத்துமாரி அம்மன் அறநெறிப் பாடசாலை, திக்கரை இந்து அறநெறிப் பாடசாலை, கல்வந்தாழ்வு சிறீ முருகன் அறநெறிப் பாடசாலை மற்றும் பிட்டியெல்லை கலியங்கண்டி கண்ணகை அம்மன் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் வழங்குவர்.

வரவேற்புரையை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள காரைநகர்ப் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் து. ஞானேஸ்வரி நிகழ்த்துவார்.

சிறப்பு நிகழ்வுகளாக ஓய்வுநிலைப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் குமாரசாமி சண்முகநாதனின் "ஈழ நல்லூர் கந்தசுவாமி கோவில் வரலாற்று உண்மையும் ஞானப்பொருள் விளக்கமும்" என்ற நூல் வெளியீடும் யாழ்ப்பாணம் கீதவாகினி இசைக்கல்லூரி மாணவி ருக்ஸாஜினி குருபரனின் இசைக் கச்சேரி நிகழ்வும் கொழும்பு தேஜஸ்வராலயா கலைக்கூட இளம் இசைச் சுடர் தேஜஸ்வினி பிரணவனின் திருப்புகழ் சமர்ப்பணம் நிகழ்வும் நடைபெறும்.

மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வைத் தொடர்ந்து நன்றியுரையை சிவகாமி அம்பிகா சமேத சிறீ சிதம்பரேஸ்வரர் அறநெறிப் பாடசாலை பொறுப்பாசிரியர் திருமதி மகிழினி கோடீஸ்வரன் வழங்கவுள்ளார்.

இந்த நிகழ்வைக் கண்டுகளிக்க அனைவரையும் வருமாறு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய.அநிருத்தனன் அழைப்பு விடுத்துள்ளார். (எ)

# பெரும்போக செய்கை பாதிப்பு 1484 மில்லியன் ரூபாய் நட்டஈடு

## கமநலக் காப்புறுதி சபை தகவல்

கொழும்பு, ஓக. 10


2024 மற்றும் 2025 ஆம் ஆண்டு பெரும்போக விவசாயத்தில் நெல், சோளம், பெரிய வெங்காயம், மிளகாய், சோயா, உருளைக்கிழங்கு ஆகிய பயிர்ச் செய்கைகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்கு இந்த ஆண்டு1484 மில்லியன் ரூபாய் நட்டஈடு வழங்கப்பட்டுள்ளதாக கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதி சபை தெரிவித்துள்ளது.

கமநலக் காப்புறுதி சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

விவசாயிகள் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபடுவதை ஊக்கப்படுத்தும் நோக்கில் இலவசமாக பயிர்ச்செய்கை காப்புறுதி திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் நெல், சோளம், பெரிய வெங்காயம், உருளைக்கிழங்கு, மிளகாய், சோயா உள்ளிட்ட பயிர்ச் செய்கைகள் 87,690 ஏக்கர் நிலப் பரப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த பயிர்ச்செய்கையில் ஈடுபட்ட 74,958 விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்க 1484 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

வறட்சி, வெள்ளப்பெருக்கு மற்றும் காட்டு யானைகளால் பயிர்ச்செய்கைகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்கு இந்த நட்டஈடு வழங்கப்பட்டுள்ளது. ஓர் ஏக்கர் நில பயிர்ச்செய்கைக்கு குறைந்தபட்சம் ஓர் இலட்சம் ரூபாய் வரையில் நட்டஈடு வழங்கப்பட்டுள்ளது. (எ)



யாழ்ப்பாணம், அச்சுவேலி பத்தமேனி வடபத்திர காளி அம்மன் ஆலயத்தின் வருடாந்த தேர்த் திருவிழா நேற்று முன்தினம் நடைபெற்றது. பக்தர்கள் புடைசூழ பத்திரகாளி அம்மாள் தேரேறி வீதிவலம் வந்து அடியவர்களுக்கு அருள்பாலித்தார். [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 309 கொள்கலன்களின் உரிமையாளர்கள் யார்?

## ஜனாதிபதி பட்டியலை வெளியிட வேண்டும்

கொழும்பு, ஓக. 10

அரசாங்கம் வெளிப்படைத் தன்மையுடன் ஆட்சி செய்வதாக இருந்தால் சுங்கத்தில் இருந்து விடுவிக்கப்பட்டிருந்த 309 கொள்கலன்களின் உரிமையாளர்கள் பெயர் பட்டியலை ஜனாதிபதி வெளியிட வேண்டும். ஆனால், அரசாங்கம் வெளிப்படைத்தன்மையை கைவிட்டே ஆட்சி செய்து வருகின்றது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி பாராளுமன்றத்தில் தெரிவித்த கருத்துக்கள், அவர் எதிர்க்கட்சியில் இருக்கும்போது தெரிவித்த கருத்துக்களுக்கு முற்றிலும் மாற்றமானவை.

நாங்கள் அன்று கூறிய திறந்த பொருளாதார கொள்கையை ஜனாதிபதி தற்போது ஏற்றுக்கொண்டுள்ளார். அதனை நாங்கள் வரவேற்கிறோம்.

ஆனால், அவரிடம் ஏற்பட வேண்டிய மாற்றம், பொய் சொல்வதை நிறுத்தி உண்மை பேச வேண்டும். பாராளுமன்றத்தில் அவர் தெரிவித்த விடயங்களில் அதிகமானவை பொய்யாகும்.

சுங்கத்தில் இருந்து 309 கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டிருந்த விடயத்தை சாதாரணமாகவே ஜனாதிபதி கருதுகிறார். அப்படியென்றால், அது தொடர்பான விசாரணை அறிக்கையை ஜனாதிபதி ஏன் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்காமல் இருக்கிறார்.

309 கொள்கலன்களில் சிவப்பு ஸ்ரிக்கர் ஒட்டப்பட்ட 150 கொள்கலன்களை ஏன் விடுவித்தார்கள். இதற்கு முன்னரும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்திருந்தார். இதற்கு முன்னர் இவ்வாறான விடயங்கள் இடம்பெற்றதால் தான் மக்கள் இந்த அரசாங்கத்துக்கு வாக்களித்தார்கள். மாறாக கடந்த கால அரசாங்கங்கள் செய்த அதே செயலை செய்வதற்கு அல்ல.

தற்போது துறைமுகத்தில் 400 உப்பு கொள்கலன்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. உப்பு இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்ட திகதிக்கு பின்னர் கொள்கலன்களில் ஏற்றப்பட்டவை என கருதியே இந்த கொள்கலன்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக சுங்க அதிகாரிகள் தெரிவித்திருந்தனர். ஆனால், அந்த 400 கொள்கலன்களில் 6 கொள்கலன்கள் விடுக்கப்பட்டுள்ளன. அந்த கொள்கலன்கள் யாருடையது என்ற பெயர் பட்டியலை ஜனாதிபதி முடியுமானால் வெளிப்படுத்தட்டும்- என்றார்.(எ)

# வடக்கில் உள்ள இனப்படுகொலை இராணுவத்தை அகற்ற வேண்டும்

## முத்தையன்கட்டு சம்பவம் குறித்து கருத்து

முல்லைத்தீவு, ஓக. 10

வடக்கில் உள்ள இனப்படுகொலை இராணுவத்தை அகற்ற வேண்டும் என்ற கோரிக்கையை கணக்கில் எடுக்காமல் இருப்பதன் விளைவுதான் முல்லைத்தீவு - முத்தையன்கட்டு சம்பவம் என மக்கள் போராட்ட முன்னணியின் உறுப்பினர் ராஜ்குமார் ரஜீவ்காந் தெரிவித்தார்.

முல்லைத்தீவில் உள்ள முத்தையன்கட்டுப் பகுதியில் உள்ள இராணுவ முகாம் ஒன்றுக்கு தகரம் தருவதாக அழைக்கப்பட்ட இளைஞர்கள் மீது இராணுவத்தினர் தாக்குதல் நடத்தியதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இதில் நால்வர் தப்பியதாகவும் ஒருவரைக் காணவில்லை எனவும் ஊர் மக்கள் கூறினர்.

இந்த நிலையில் காணாமல் போயிருந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று அதிகாலை சடலமாக மீட்கப்பட்டார்.

இந்தக் கொலையை இராணுவம் தான் செய்ததாக மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். தமிழ் மக்களை ஆண்டாண்டு காலமாக கொன்ற இராணுவத்தின் கொலைவெறி இன்னும் அடங்குவதாகவில்லை.

வடக்கு - கிழக்கில் இருந்து இனப்படுகொலை இராணுவத்தை அகற்று என்ற எம் கோரிக்கையை கணக்கில் எடுக்காமல் இருப்பதன் விளைவு தான் இவை. இது ஒரு பாரதூரமான விடயம். அந்த இடத்து இளைஞர்களுக்கான பாதுகாப்பை உடனடியாக அரசு உறுதிப்படுத்துவதுடன் கொலைகாரர்கள் எனக் கூறப்படும் இராணுவத்தை உடனடியாக அகற்ற வேண்டும்"- என்றும் கூறினார். (எ)

# ஹோட்டல் நீச்சல் தடாகத்தில் சிறுவன் மூழ்கி உயிரிழப்பு

இரத்தினபுரி, ஓக. 10

இரத்தினபுரி மாவட்டம் ஓபநாயக்கவில் உள்ள ஹோட்டல் ஒன்றின் நீச்சல் தடாகத்தில் மூழ்கி 12 வயது சிறுவன் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக ஓபநாயக்க பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த சிறுவன் இம்புல்தென்னவைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர் தனது பெற்றோருடன் ஹோட்டலுக்கு வந்து, நண்பர்களுடன் நீச்சல தடாகத்தில் விளையாடிக் கொண்டிருந்த போது நீரில் மூழ்கி உயிரிழந்ததாக விசாரணையில் தெரியவந்தது.

இந்தச் சம்பவம் குறித்து ஓபநாயக்க பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# வான் மீது ரயில் மோதி கோர விபத்து

அளுத்கம, ஓக. 10

அளுத்கம பகுதியில் உள்ள ரயில் கடவையில் சிறிய ரக வான் ஒன்று ரயிலுடன் மோதி நேற்றுக் காலை விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்து அளுத்கம ரயில் நிலையத்துக்கு அருகிலுள்ள சீலானந்த வீதியில் உள்ள ரயில் கடவையில் இடம்பெற்றது.

மருதானையிலிருந்து மாத்தறை நோக்கிச் சென்ற ரயிலுடன் வான் மோதியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் வானை செலுத்திய பெண் ஒருவர் காயமடைந்து உடனடியாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

விபத்து தொடர்பில் அளுத்கம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# பிரதமர் ஹரிணிக்கு எதிரான விமர்சனம் பாரதூரமானது

கொழும்பு, ஓக. 10

அரசாங்கத்துக்கு எதிராக எதிர்க்கட்சிகள் சதித்திட்டம் மேற்கொள்வதாக தெரிவிப்பதில் எந்த அடிப்படையும் இல்லை. அரசாங்கத்துக்குள்ளேயே சதித்திட்டங்கள் இடம்பெறுகின்றன. அமைச்சர் வசந்த சமரசிங்க பிரதமர் ஹரிணிக்கு எதிராக தெரிவித்திருந்த கருத்து பாரதூரமானதாகுமென முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சமன் ரத்னபிரிய தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்துக்கு எதிராக அரசுக்குள்ளும் வெளியிலும் சதித்திட்டங்கள் இடம்பெறுவதாக ஜனாதிபதி தெரிவித்திருந்தார். சதித்திட்டங்களுக்கு முகம்கொடுக்கக்கூடிய பலம் ஜனாதிபதிக்கு இருக்க வேண்டும். அதேநேரம் மக்கள் ஆணையில் தெரிவான ஜனாதிபதி என்றவகையில் அந்த சதித்திட்டங்களை வெளிப்படுத்துவது நாட்டுக்கு முக்கியமாகும். எதிர்க்கட்சிகள் அரசாங்கத்துக்கு எதிராக சதித்திட்டம் மேற்கொள்வதாக தெரிவிப்பது அடிப்படையற்றதாகும். எங்களைப் பொறுத்தவரை அரசாங்கத்துக்கு எதிரான எதிர்க்கட்சிகளின் நடவடிக்கைகள் போதாது. அதனால், எதிர்க்கட்சிகளிடமிருந்து அரசாங்கத்துக்கு எதிரான சதித்திட்டம் இல்லை என்பது தெளிவாகிறது.- என்றார். (எ)

# ஹெரோயின், ஐஸ் போதையுடன் ஒருவர் பொலிஸாரிடம் சிக்கினார்

கம்பஹா, ஓக. 10

கம்பஹாவில் மினுவாங்கொடை பொலிஸ் பிரிவின் உன்னருவ பகுதியில் ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப் பொருட்களுடன் சந்தேக நபர் ஒருவர் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கோனஹேன பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் குழுவுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 01. 66 கிலோ கிராம் ஹெரோயின் மற்றும் 308 கிராம் ஐஸ் உள்ளிட்ட போதைப்பொருட்கள் என்பன அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர் மினுவாங்கொடை பகுதியைச் சேர்ந்த 37 வயதுடையவர் ஆவார்.

இது தொடர்பில் மினுவாங்கொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# தீ விபத்தில் 7 வயது சிறுவன் உயிரிழப்பு!

இரத்தினபுரி, ஓக. 10

இரத்தினபுரி - பலாங்கொடை மஹவத்த பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் சிறுவன் ஒருவர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தீ விபத்து நேற்றுச் சனிக்கிழமை அதிகாலை இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தீ விபத்தின் போது வீட்டிலிருந்த 7 வயது சிறுவன் ஒருவர் தீக்காயங்களுடன் பலாங்கொடை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# கொழும்பு துறைமுகத்தில் கொள்கலன் விழுந்து விபத்து

## சாரதி உயிரிழப்பு, ஒருவர் கைது

கொழும்பு, ஓக. 10

கொழும்பு துறைமுக கொள்கலன் முனையத்தில் பிரைம் மூவர் வாகனத்தில் கொள்கலன் ஒன்றை ஏற்ற முயற்சிக்கும்போது அது மற்றொரு கொள்கலனுடன் மோதி வாகனத்தின் மீது விழுந்ததில் ஏற்பட்ட விபத்தில் சாரதி ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் சாரதி பலத்த காயமடைந்து கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்ததாக கொழும்பு துறைமுக பொலிஸார் தெரி வித்தனர்.

தெடிகமவைச் சேர்ந்த 36 வயது சாரதியே இவ்வாறு உயிரிழந்தார். கொள்கலனை இயக்கிய இயந்திர இயக்குநரை பொலிஸார் கைது செய்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கொழும்பு துறைமுக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)


# இலங்கை பொருட்களுக்கு ஆஸியில் சந்தை வாய்ப்பு

## அந்நாட்டு ஆளுநரிடம் கோரினார் சஜித்

கொழும்பு, ஓக. 10

இலங்கையின் ஏற்றுமதி சார்ந்த பொருட்களுக்கு அவுஸ்திரேலியாவில் அதிக சந்தை வாய்ப்புகளைப் பெற்றுத் தருமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கைக்கு வருகை தந்துள்ள அவுஸ்திரேலிய ஆளுநர் நாயகம் சமந்தா ஜோய் மோஸ்டின் மற்றும் சஜித் பிரேமதாஸ இடையிலான விசேட சந்திப்பு கொழும்பிலுள்ள அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நடைபெற்றது.



அவுஸ்திரேலியவுக்கும் இலங்கைக்கும் இடையிலே நிலவி வரும் நீண்டகால நட்புறவை மேலும் வலுப்படுத்துவதில் கவனம் செலுத்தி இங்கு சுமுகமான உரையாடலில் ஈடுபட்ட சஜித் பிரேமதாஸ, நமது நாடு எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்கத் தேவையான ஆதரவைப் பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் இலங்கையின் ஏற்றுமதி சார்ந்த பொருட்களுக்கு அவுஸ்திரேலியாவில் அதிக சந்தை வாய்ப்புகளைப் பெற்றுத் தருமாறும் சஜித் இதன் போது கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
10.08.2025 ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம், ஆடி 25

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# பொது பல சேனாவின் குரல்

நீண்ட காலம் அமைதியாக இருந்த பொது பல சேனாவின் தலைவர் கலகொட அத்தே ஞானசார தேரர், மீண்டும் ஊடகங்களின் முன்னால் பிரசன்னமாகியிருக்கின்றார். பள்ளிவாசலில் இஸ்லாமிய அடிப்படைவாதம் போதிப்பதாக அவர் குற்றம்சாட்டியிருக்கின்றார். 2014இல் தாங்கள் இவ்வாறு கூறியபோது அதனை எவரும் கண்டுகொள்ளவில்லை, மாறாக தாங்கள் அடிப்படைவாதம் பேசுவதாகக் கூறினார்கள். ஆனால், நாங்கள் கூறியது உண்மை என்பதை ஈஸ்டர் தாக்குதல் நிரூபித்தது. அதே போன்றுதான் இப்போதும் நிலைமைகள் தொடர்பில் எச்சரிக்கின்றோம், இதனை கருத்தில் கொள்ளாவிட்டால் எதிர்காலத்தில் நிலைமை மோசமடையும் என்றும் அவர் எச்சரித்திருக்கின்றார்.

சமீப காலமாக முஸ்லிம் அரசியல்வாதிகளும் முஸ்லிம் அமைப்புகளும் நாட்டுக்குள் இஸ்ரேலியர்கள் ஊடுருவுவதாக பிரசாரங்களை முன்னெடுத்துவருகின்றனர். குறிப்பாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இஸ்ரேலுக்கு ஆதரவான கொள்கை நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதாக எதிரணியில் இருக்கின்ற முஸ்லிம் அரசியல்வாதிகள் தொடர்ந்து பேசிவருகின்றனர். ஆனால், அரசாங்கமோ பெரிதாக இவற்றைக் கண்டுகொள்ளவில்லை.

இஸ்ரேல் உல்லாசப் பயணிகளின் பாதுகாப்பு தொடர்பிலேயே அரசாங்கம் கவனம் செலுத்திவருகின்றது. விமான நிலையத்தில் பிரத்தியேக ஏற்பாடுகளை மேற்கொண்டிருக்கின்றது. இவற்றின் அடிப்படையிலேயே அரசாங்கத்தை எதிரணி முஸ்லிம் அரசியல்வாதிகள் விமர்சித்து வருகின்றனர்.

முஸ்லிம் அரசியல்வாதிகளின் வாதங்களை உற்று நோக்கினால் தங்களுக்கு பிடிக்காதவர்கள் எவரும் நாட்டுக்குள் பிரவேசிக்க முடியாது என்னும் வகையிலேயே அவர்களுடைய பிரசாரங்கள் காணப்படுகின்றன. ஓர் இஸ்ரேலியரின் பார்வையில் இது என்ன முஸ்லிம் நாடா என்று சிந்திக்குமளவிற்கே முஸ்லிம் அரசியல்வாதிகளின் பிரசாரங்கள் காணப்படுகின்றன. இவ்வாறானதொரு பின்னணியிலேயே ஞானசார தேரர் வெளியில் வந்து, இஸ்லாமிய அடிப்படைவாதம் தொடர்பில் குரல் எழுப்பியிருக்கின்றார்.

பொதுபல சேனா மிகவும் வெளிப்படையாக இஸ்லாமிய அமைப்புக்களை இலக்கு வைத்து செயல்பட்ட வரலாற்றைக் கொண்டது. ராஜபக்ஷக்களின் காலத்தில் பலமாக வேரூன்றிய பொது பல சேனா கோட்டாபயவின் வீழ்ச்சியைத் தொடர்ந்து உறங்கு நிலைக்குச் சென்றது. அண்மைக்காலத்தில் முஸ்லிம் அரசியல் மற்றும் அமைப்புக்கள் அதிகம் யூதர்கள் தொடர்பில் பேசிவருகின்ற நிலையில் அவர் மீண்டும் அரங்கிற்கு வந்திருப்பது தற்செயலான ஒன்றாக இருப்பதற்கான வாய்ப்பு மிகவும் குறைவானது.

ஈஸ்டர் தற்கொலை தாக்குதலின் பின்னர், இலங்கையானது, இஸ்லாமிய அடிப்படைவாத நிகழ்சி நிரலுக்குள் வீழ்ந்துவிட்டது. இது மிகவும் தெட்டத் தெளிவான ஒன்றாகும். பின்னர் அறுகம் குடா சுற்றுலா மையம் மீதான தாக்குதல் திட்டமும் அமெரிக்க அறிக்கையில் இடம்பெற்றிருக்கின்றது. இவ்வாறான விடயங்கள் இஸ்லாமிய அடிப்படைவாத வலையமைப்புக்குள் இலங்கை சிக்குவதற்கான அதிக வாய்ப்புக்களை காண்பிக்கின்றது.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் இஸ்ரேல் தொடர்பான சர்ச்சை தொடர்கின்றது. இந்தப் பின்புலத்தில்தான் பொது பல சேனா மீளவும் முகம் காண்பிக்கின்றது. இலங்கையை ஒரு முஸ்லிம் நாடு போன்று காண்பிக்க முற்பட்டால் நாங்கள் அமைதியாக இருக்கப் போவதில்லை என்பதுதான் இதற்கு பின்னாலுள்ள தெளிவான செய்தியாகும்.

# 2029இல் ஆட்சி எம் வசம்!

## பொதுஜன பெரமுன நம்பிக்கை

கொழும்பு, ஒக. 09

பொதுஜன பெரமுனவில் இருந்து பிரிந்துச் சென்றவர்கள் வெகுவிரைவில் மீண்டும் கட்சியில் ஒன்றிணைவார்கள்.கட்சியின் பிரதான பதவிகள் மறுசீரமைக்கப்படும். 2029 ஆம் ஆண்டு நாங்களே ஆட்சியை கைப்பற்றுவோமென பொதுஜன பெரமுனவின் ஊடகப் பேச்சாளர் சஞ்ஜீவ எதிரிமான்ன தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் குறித்து வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தல் காலத்தின் போது பல்வேறு காரணிகளால் பொதுஜன பெரமுனவில் இருந்து விலகிச் சென்ற சிரேஷ்ட உறுப்பினர்கள் கட்சியில் மீண்டும் ஒன்றிணைவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர்.

கட்சியில் இருந்து விலகிச் சென்ன முன்னிலை சிரேஷ்ட உறுப்பினர்களுக்கும், கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பு கடந்த வாரம் நடைபெற்றது. இதன்போது பல்வேறு விடயங்கள் குறித்து விரிவாக பேசப்பட்டது.

பொதுஜன பெரமுனவில் இருந்து பிரிந்துச் சென்றவர்கள் வெகுவிரைவில் மீண்டும் கட்சியில் ஒன்றிணைவார்கள். கட்சியின் பிரதான பதவிகள் மறுசீரமைக்கப்படும்.

பாராளுமன்ற உறுப்பினர் நாமலை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் செயற்படுகிறது. 2029 ஆம் ஆண்டு பொதுஜன பெரமுனவே ஆட்சியதிகாரத்தை கைப்பற்றும் அதற்கான நடவடிக்கைகளை தற்போது மேற்கொண்டுள்ளோம் - என்றார்.

# இனபேதமின்மை கோசம் மூலம் சமஷ்டியை மறைக்க முடியாது!

## வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்பு குழு

வவுனியா, ஒக. 09

வடக்கு கிழக்கு தமிழ்மக்கள் எழுபது ஆண்டுகளுக்கு மேலாக முன்வைத்து வரும் சமஷ்டி முறையிலான அரசியல் அதிகாரப்பகிர்வுக்கான கோரிக்கையை "இன மத பேதமின்மை" எனும் கோஷத்தின் பின்னால் மறைக்கமுடியாது என வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்பு குழு தெரிவித்துள்ளது.



நிலையான அரசியல் தீர்வுக்கான நூறு நாட்கள் செயல்முனையின் மூன்றாம் வருடத்தை முன்னிட்டு வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவால் வவுனியா-யாழ்வீதியில் நேற்றுமுன்தினம் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த அவர்கள்-

1948 இற்குப் பின்னரான இலங்கையின் 75வருடகால அரசியல் வரலாற்றில், இனத்துவ அரசியலே மேலோங்கி காணப்படுகிறது.

ஏனைய தேசிய இனங்களான வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள், முஸ்லிம் மக்கள், மலையகத் தமிழ் மக்கள் ஆகியோருக்கு அரச அதிகாரத்தில் உரிய பங்கு வழங்கப்படவில்லை. அரசியல் அதிகாரம் உரிய முறையில் பகிர்ந்துகொள்ளப்படவில்லை. மாறாக மொழிரீதியான, மத ரீதியான அடக்கு முறைகள் மேலோங்கின.

இந்த அடக்குமுறைகள் அனைத்தையும் வைத்துக்கொண்டு "இன மத பேதமின்மை" குறித்து அரசு கதைப்பது நேர்மையின்மையாகும்.

அந்தவகையில் வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் எழுபது ஆண்டுகளுக்கு மேலாக முன்வைத்து வரும் சமஷ்டி முறையிலான அரசியல் அதிகாரப் பகிர்வுக்கான கோரிக்கையை "இன மத பேதமின்மை" எனும் கோஷத்தின் பின்னால் மறைக்கவோ மறுதலிக்கவோ முடியாது.

மேலும், 2015ஆம் ஆண்டு, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம் 30ஃ1 இல் இலங்கை அரசு இணைப்பங்காளராக இருந்து கையொப்பம் இட்டுள்ளது. இத்தீர்மானத்தின் ஏற்பாடு 20 ஆனது அரசியல் அதிகாரப் பரவலுக்கான இலங்கையின் கடப்பாட்டை கூறுகிறது.

ஆகவே, இனவாதத்தில் சார்ந்திருந்த பழைய அரசுகளைப் போல் இல்லாது தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது, நிலையானதும் கௌரவமானதும் உரிமைகளுடன் கூடிய சமஷ்டி முறையிலான அரசியல் அதிகாரப் பகிர்வை உறுதிப்படுத்தும் தீர்வுத் திட்டத்தை உடன் முன்னெடுக்கக் கோருகிறோம். சமஷ்டி அரசியல் தீர்வு என்பது நாட்டைப் பிரிப்பது அல்ல. அது மிகவும் உயரிய ஜனநாயக அரசியல் அமைப்பின் வெளிப்பாடாகும்-என்றனர்.

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூச்சுக் காற்றும் அடையாளம் ஆகலாம்!

ராதாகிருஷ்ணன்



மனிதர்களின் தனித் தன்மையை அறிந்து கொள்வதற்கும், குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களை அடையாளம் காண்பதற்கும் விரல்ரேகைப் பதிவுகளும், விழித்திரை, கருவிழிப் பதிவுகளும் முக்கியப் பங்காற்றுகின்றன. உலகில் வாழும் மனிதர்களில், ஒருவரின் கைரேகை மற்றொருவருக்குப் பொருந்தாது.

இதற்கு முன்பு வாழ்ந்த நம் முன்னோர்களின் கைரேகைகளும் சரி, இனிமேல் பிறக்கப் போகிற குழந்தைகளின் கைரேகைகளும் சரி ஒன்றுக்கொன்று பொருந்தாது. கைரேகைகள்தான் மனிதனின் தனித்துவத்தை அடையாளம் காட்டும் கருவியாக இன்றளவும் உள்ளது. 'கைரேகை என்பது இறைவன் மனிதர்களுக்கு அளித்த முத்திரை' என வர்ணிக்கின்றனர் தடயவியல் நிபுணர்கள்.

கைரேகைகளைப் போலவே, நம் கருவிழியில் உள்ள கோடுகளின் வடிவமும் தனித்துவமானவை, மனிதனுக்கு மனிதன் வேறுபடுகின்றன. மிகவும் நுட்பமான முறையில் ஒருவரின் தனித்துவ அடையாளத்தைக் கண்டறிய விழித்திரை, கருவிழிப் பதிவுகளும் பயன்படுத்தப்படுகின்றன.

அமெரிக்காவிலிருந்து வெளியாகும் 'கரன்ட் பயாலஜி' எனும் அறிவியல் இதழில் அண்மையில் வெளியிடப்பட்ட ஆய்வு அறிக்கையில், ஒவ்வொரு மனிதனுக்கும், கைரேகைகளைப் போலவே தனித்துவமான சுவாச முறை உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலமும் ஒரு நபரின் தனித்துவத்தை அடையாளம் கண்டுகொள்ளலாம். அதாவது, நாம் வெளியிடும் மூச்சுக்கு தடயங்கள் காட்டும் பண்பு இருப்பதாக சுவாசம் குறித்தான ஆய்வு விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். நாம் வெளியிடும் மூச்சுக் காற்று, உடலின் பல்வேறு நடவடிக்கைகளுடன் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளது.

மேலும், ஒரு மனிதன் வெளியிடும் சுவாசம் மூலம், அவரது மனநிலை, பதற்றம், தனித்துவம், மாறுபட்ட சிந்தனை, அவர் கைக்கொண்டுள்ள இதரப் பண்புகளை எளிதில் அடையாளம் காண முடியும் என்றும் அந்த ஆய்வறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது. மனிதர்களின் சுவாசம் குறித்து ஆராய்ந்த விஞ்ஞானிகளின் குழு, மனிதனின் சுவாசத்தை அறியக் கூடிய பிரத்யேகமான கருவியைப் பயன்படுத்தி, மூக்கின் வழியே வெளியாகும் காற்றின் வடிவங்களை பகுப்பாய்வு செய்தது.

அதனடிப்படையில், தனி நபர்களை அடையாளம் காணும் அளவுக்கு, விரிவான தனித்துவமான வடிவத்தை ஒவ்வொரு மனிதன் வெளியிடும் சுவாசம் கொண்டிருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. ஒரு மனிதன் சுவாசிப்பது என்பது ஓர் எளிய செயலாகத் தோன்றினாலும், அது நம் மூளையின் வலையமைப்பால் நிர்வகிக்கப்படுகிறது.

இஸ்ரேலில் இயங்கி வரும் வெய்ஸ்மான் ஆல்ஃபாஷன் ஆராய்ச்சிக் குழுவைச் சேர்ந்த விஞ்ஞானிகள், சுவாசத்தை உள்ளிழுக்கும் போது மூளை எவ்வாறு வெவ்வேறு வாசனைகளை உணர்ந்து கொள்கிறது என்பதை தற்போது ஆய்வு செய்து வருகிறார்கள். அதன் ஒரு பகுதியாக, மனித சுவாசத்தின் 'மூச்சு அச்சு' (பீரித் பிரின்ட்) குறித்தும் ஆராய்ந்துள்ளனர்.

ஒருவரின் சுவாச முறையை வைத்து அவரை அடையாளம் காண முடியும் என்பதை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்தது மட்டுமல்லாமல் அந்த முறைகள் மூலம் ஒரு நபரைப் பற்றிய மனநிலைகளையும் ஆராய்ந்துள்ளனர். ஒரு நபரின் சுவாசம் அவரின் உடல்நிறை குறியீட்டெண் (பாடி மாஸ் இன்டெக்ஸ்) உடன் தொடர்புடையது என அவர்கள் கண்டறிந்துள்ளனர்.

ஒரு தனி நபரின் சுவாச முறையை, அவரின் ஒரு தனித்துவமான அடையாளமாகப் பயன்படுத்துவது எவ்வாறு என்பது தொடர்பான ஆராய்ச்சி சுவாசம் குறித்து ஆராயும் விஞ்ஞானிகளால் கடந்த பல ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஒரு மனிதனின் சுவாசம் மனிதனுக்கு மனிதன் மாறுபடும் இந்த 'சுவாச அச்சு' முறை உடல் மற்றும் மன நோய்களைப் புரிந்து கொள்வதற்கும், சிகிச்சையளிப்பதற்கும் புதிய வழிகளை ஊக்குவிக்கக்கூடும்.

இப்போது, அடுத்தகட்டமாக இந்த ஆராய்ச்சியை நோயறிதலுக்கு எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதைக் கண்டறிவோம். குறிப்பிட்ட சுவாச முறைகள் பல்வேறு நோய்களைக் கணிக்கவும்கூடும். எதிர்காலத்தில் சுவாச முறைகளை மாற்றி அமைப்பதன் மூலம் நோய்களுக்கும் சிகிச்சையளிக்க முடியும் என்கிறார் வெய்ஸ்மான் ஆல்ஃபாஷன் ஆராய்ச்சிக் குழுவில் மனிதனின் மூளை குறித்த ஆராய்ச்சி விஞ்ஞானி டிம்னா சொரோகா.

'மனிதனின் சுவாசம் எல்லா வகையிலும் அளவிடப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டு வருகிறது. இதை மூளையின் ஒரு வாசிப்பாக நாங்கள் கருதுகிறோம்.' என்கிறார் வெய்ஸ்மான் ஆல்ஃபாஷன் ஆராய்ச்சிக் குழுவின் நரம்பியல் விஞ்ஞானி நோயம் சோபல். ●

# இந்தவார ராசிபலன் 10.08.2025 - 16.08.2025

ஞாயிற்றுக்கிழமை
விசுவாவசு வருடம் - ஆடி 25
நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : துவிதியை

## மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் வீட்டில் பெண்களின் அழகும், பொலிவும், அறிவுத் திறனும் கூடும். நல்லவர்களுடன் ஏற்படும் பழக்கத்தால் நல்லதே நடக்கும். மாணவர்களுக்கு கல்வியில் தடைகள் ஏற்படும். உயர் அதிகாரிகள் ஆதரவால் பணியில் இருந்து வந்த அலைச்சல்கள் குறையும்.. புதிய நண்பர்களால் நன்மை ஏற்படும். மாணவர்களின் கவனச் சிதறல்கள் காரணமாக படிப்பில் ஆர்வம் குறையும். சிலருக்கு எதிர்பாராத இடமாற்றங்களும் பயணத்தில் துன்பமும் ஏற்படும்.

## ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் வீட்டில் நடைபெற இருந்த சுப காரியங்கள் அனைத்தும், தடை, தாமதங்களுக்குப் பிறகு, சிறப்புற, சிம்பிளாக நடக்கும். வியாபாரத்தில் புதிய விரிவாக்கத் திட்டங்களை ஒத்திப் போடுவது நல்லது. வெளியூர்ப் பயணங்கள் எதிர்பாராத போக்குவரத்து பிரச்சனைகள் ஏற்படலாம். தாய்வழி உறவுகளால் எவ்வித உதவியும் இருக்காது. சிலருக்குக் காரியத் தடைகள், கால தாமதங்கள் காரணமாக பின்னடைவுகள் ஏற்படும்

## மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் வீட்டில், இருப்பதால், சிலருக்கு, பூஜை வழிபாடுகள் மூலம் மனக்கவலைகள் குறையும். திக்கற்றவர்களுக்கு தெய்வமே துணை, என, தத்துவம் பேச நேரும். அடிப்படை விஷயங்களில் அதிக கவனம் செலுத்தினால், நீங்கள் போட்ட திட்டங்கள் அனைத்தும் குழப்பமோ, சிக்கல்களோ இன்றி கச்சிதமாக முடிவடையும். சிலருக்குப் பணமுடைகள் ஏற்படலாம். தொழிலில் எதிர்பார்த்தபடி ஆதாயங்கள் இருக்காது. பயணத்தின் போது எச்சரிக்கை தேவை.

## கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் புதிய முயற்சிகள் மற்றும் முதலீடுகளைத் தவிர்ப்பது நல்லது. வீண் செலவுகள் அதிகரிக்கும். பின்வரும் நாட்களில் புதிய முயற்சிகள், தன வரவு அதிகரிக்க சிறிது, தாமதப்படலாம். அந்த நேரங்களில், தங்கள் சேமிப்பு, கைகொடுக்கும். கேளிக்கைகளில் ஈடுபடுதல், இனிய பயணங்கள் போவது, என எல்லாம் கனவாகவே இருக்கும். வியாபாரிகளுக்கு வியாபாரம் ஏற்ற இறக்கமாக இருக்கும். எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

## சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் வீட்டில் நிச்சயித்த சுப காரிய நிகழ்ச்சிகள் தடை, தாமதத்திற்கு பிறகு, நடக்கும். அதன் காரணமாக சந்தோஷம் பொங்கும். சிலருக்கு, பெண்களால் இலாபம் ஏற்படும். பொருளாதார நிலையைப் பொறுத்தவரை சிரமமான காலம். அதன் காரணமாக சேமிப்புகளில் இருக்கும் பணத்தில் கை வைக்க வேண்டிய நிலை ஏற்படும். பழைய பொருட்களை விற்பனை செய்யும் வியாபாரிகள் நல்ல வருமானத்தை அடைவார்கள்.

## கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் பண விஷயத்தைப் பொறுத்தவரை திருப்திகரமான வாரமாக இருக்காது. அனைவரும் வீட்டிலேயே இருப்பதால், குடும்ப சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும். கணவன் மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். ஞானிகள் மற்றும் பெரியோர்களின் ஆசியால் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். நண்பர்கள் மற்றும் சகோதரரால் உங்கள் பிரச்சனைகளுக்கு ஒரு முடிவு வரும். தொழில் வாய்ப்புகள் குறையும். அரசுப் பதவியில் உள்ளவர்கள் தயவால் அனுகூலமான [illegible]

## துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் தூர தேச பயணங்கள் ஒத்திப் போடுவது நல்லது. சிலருக்கு, பணி விஷயமாக எதிர்பார்த்த நல்ல தகவல்கள் வரும். பக்தி மார்க்கத்தில் செல்ல மனைவியின் பூரண ஒத்துழைப்பு கிடைக் கும். புதிய கொள்முதல் மூலம் தொழிலில் அதிகமான வருவாய் பெருக்கம் ஏற்படும். வாடிக்கையாளரிடம் நட்புப் பாராட்டும் வியாபாரிகளுக்கு அதிக இலாபம் கிடைக்கும். பெரிய மனிதர்களின் நட்பால் ஆதாயம் பெறுவீர்கள். வெற்றி பெறும் நாள்.

## விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் நீங்கள் வீட்டிலேயே இருப்பதால், முக்கிய விருந்துகளில் கலந்து கொண்டு, மகிழ்ச்சி அடைவது போல், ஆரவாரத்துடன் பொழுதை கழிப்பீர்கள். எல்லா வகையிலும் சிறப்பான பலன்களைத் எதிர்பார்க்க முடியாது. சிலருக்கு உடல் பாதிப்புகள் ஏற்படலாம். அரசியல்வாதிகளிடம் மற்றும் அரசாங்கத்திடமும் எதிர்பார்த்த அனுகூலங்கள் அனைத்தும் தாமதமாக கிடைக்கும். புகழும் கூடும்.

## தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் வீட்டில் இருந்து, மிகுந்த உற்சாகத்துடன் பக்தி மார்க்கத்தில் ஈடுபடுவீர்கள். முதலீடுகளை ஒத்திப் போடுவது நல்லது. நீண்ட நாட்களுக்குப் பின்னர், இதுவரை இருந்து வந்த கெடுபிடிகள் ஓரளவு குறையும். பணிபுரியும் பெண்களுக்கு பணிச்சுமை கூடும். மருத்து வப் பணியாளர்கள் சேவை பாராட்டு பெறும். சிலருக்கு தற்போது இருக்கும் வேலையை காட்டிலும் நல்ல வேலைக்குப் போகும் வாய்ப்புகள் இருந்தாலும், தாமதப்படும்.

## மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் சிலர், இல்லத்திலேயே இருப்பதால், மகிழ்ச்சிகரமான கொண்டாட்டங்களால் மகிழ்ச்சி பொங்கும். பணவரவு ஓரளவு, உங்கள் வாழ்க்கையில் நீங்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் எச்சரிக்கை தேவை. தனிமைப்படுத்தல் அவசியம். தவறும் பட்சத்தில் நோய்நொடி ஏற்பட வாய்ப்புண்டு. சிலர், வெற்றியின் மகிழ்ச்சி தனை அனுபவிப்பார்கள். கருத்தோடு படித்தால் நல்ல மதிப்பெண்கள் பெறலாம். ஆயினும், தேர்வுகள் தள்ளி போகலாம்.

## கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் நெருங்கிய உறவுகளை அனுசரித்து சென்றால் அவர்களின் உதவிகள் கேட்காமலே கிடைக்கும். அப்போதுதான் உங்கள் கஜானாவும் பணத்தால் நிரம்பும். அன்பாகத் தட்டிக் கொடுத்து வேலை வாங்கினால் உங்களுக்குக் கீழ் பணிபுரிபவர்கள் வேலையில் கை கொடுப்பர். அதன் காரணமாக உற்பத்தி பெருகி, இலாபமும் அதிகரிக்கும். மற்றவர்களிடம் பேசும் போது எச்சரிக்கையுடன் பேசவும்.

## மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் உறவினர்களுடன் வீண் வாக்குவாதம் செய்யாதிருப்பது நல்லது. பூமி அல்லது வாகனம் வாங்கும் யோகம் இருந்தாலும் தள்ளிப் போடுவது நல்லது. பணிபுரியும் பெண்கள் தங்கள் உயர் அதிகாரிகள் ஆதரவால் முன்னேற்றம் காண்பர். பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். சீரான பொருளாதார உயர்வு இருக்காது. எப் போதும் மனதில் ஒரு கலக்கம் இருக்கும். குடும்பத்தாருக்கும் அவர்கள் ஆசைகள் , விருப் பங்கள் நிறைவேறுவதால் [illegible] இருப்பர். அனுபவ பூர்வமான அறிவுத்திறன் கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணசபை தேர்தல்களை விரைவாக நடத்துமாறு தென்னிலங்கை அரசியல்வாதிகள் விடுத்த கோரிக்கை!



வீரகத்தி தனபாலசிங்கம்

சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவரான முன்னாள் பாராளுமன்ற சபாநாயகர் கரு ஜெயசூரிய மற்றும் தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி ஜெகான் பெரேரா போன்ற சிவில் சமூக தலைவர்களே மாகாணசபை தேர்தல்களை விரைவாக நடத்த வேண்டும் என்று அடிக்கடி அரசாங்கத்தை வலியுறுத்தி வந்தனர். தென்னிலங்கையில் அரசியல்வாதிகள் பெரும்பாலும் அவ்வாறு கோருவதில்லை. மாகாணசபைகளை ஒழித்துவிடுமாறு தொடர்ச்சியாக கோரிக்கை விடுக்கும் அரசியல்வாதிகளும் இருக்கிறார்கள்.

ஆனால், திடீரென்று தென்னிலங்கை அரசியல்வாதிகள் குழுவொன்று மாகாண சபை தேர்தல்களை அரசாங்கம் உடனடியாக நடத்த வேண்டும் என்று கடந்த வாரம் கோரிக்கை முன்வைத்ததை காணக்கூடியதாக இருந்தது. மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை தன்னிச்சையாக செலவிடுவதாக ஆளுநர்கள் மீதும் மாகாணசபை தேர்தல்களை தாமதிப்பதாக அரசாங்கத்தின் மீதும் அவர்கள் குற்றஞ்சாட்டினர்.





கொழும்பில் கடந்த திங்கட்கிழமை செய்தியாளர்கள் மகாநாட்டில் உரையாற்றிய குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர, 'ஆளுநர்கள் தற்போது தன்னிச்சையாக தீர்மானங்களை எடுப்பதுடன் தங்களது விருப்பத்தின் பிரகாரம் மாகாணசபைகளின் நிதியை செலவிடுகிறார்கள். உதாரணமாக, வடமேல் மாகாண ஆளுநர் உகந்த மேற்பார்வையின்றி 300 கோடி ரூபாவை செலவிட்டிருக்கிறார்" என்று கூறினார்.

மாகாணங்களின் நியாயாதிக்கத்தின் கீழ் வருகின்ற பாடசாலைகள் புறக்கணிக்கப்படுவது குறித்து பிரச்சினை கிளப்பிய ஜெயசேகர, ஐம்பதுக்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளை மூடிவிடுவதற்கு அரசாங்கம் திட்டமிடுவதாகவும் குறிப்பிட்டார்.

அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தின் கீழ் அதிகாரப்பரவலாக்கம் செய்யப்பட்ட விடயதானமாக கல்வி இருப்பதால் பாடசாலைகளை மூடுவது போன்ற தீர்மானங்களை ஒருதலைப்பட்சமாக எடுக்கமுடியாது என்று சுட்டிக்காட்டிய அவர், தேர்தல்களை உடனடியாக நடத்தி மாகாண சபைகளை இயங்கவைத்தால் அவை பிராந்தியப் பிரச்சினைகளை தீர்த்து வைக்கக்கூடிய களமாக அமையும் என்று கூறினார். பாராளுமன்றத்தில் ஒரு எளிமையான திருத்தத்தை நிறைவேற்றுவதன் மூலம் மாகாணசபை தேர்தல்களை விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் மாகாணசபை தேர்தல்களை நடத்த முடியும் அல்லது எல்லை நிர்ணயத்தை பாராளுமன்றம் அங்கீகரிப்பதன் மூலம் புதிய முறையின் கீழ் அந்த தேர்தல்களை நடத்த முடியும் என்பது ஜெயசேகரவின் நிலைப்பாடாக இருக்கிறது.

புதியதொரு அரசியலமைப்பை அறிமுகப்படுத்தும் முயற்சியின் மூலமாக அரசாங்கம் மாகாணசபை தேர்தல்களுக்கான தேவையை அலட்சியம் செய்யக்கூடும் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் தொலவத்த கூறிய அதேவேளை, முன்னாள் அமைச்சரான பாராளுமன்ற உறுப்பினர் புத்திக்க பத்திரன அரசியலமைப்பு ரீதியான கடப்பாடுகளின் பிரகாரம் மாகாண சபை தேர்தல்களை நடத்த வேண்டும் என்று தொடர்ச்சியாக வலியுறுத்திவரும் இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் வேண்டுகோளை அரசாங்கம் மதித்துச் செயற்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இந்த தென்னிலங்கை அரசியல்வாதிகளுக்கு மாகாணசபை தேர்தல்கள் குறித்தும் பிராந்திய பிரச்சினைகளை தீர்த்துவைப்பதற்கு மாகாணசபைகளின் அவசியம் குறித்தும் திடீரென்று அக்கறை வந்ததற்கு அரசியல் காரணங்கள் இருப்பதாக அர்த்தம் கற்பிப்பதை விடுத்து அவர்களது கருத்துக்களை வரவேற்க வேண்டியது இன்றைய கட்டத்தில் முக்கியமானதாகும். எட்டு வருடங்களாக மாகாணசபை தேர்தல்கள் நடத்தப்படாமல் இருந்துவருகின்ற போதிலும், மாகாணசபைகள் செயலிழந்து கிடப்பது குறித்து தென்னிலங்கையிலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் பெரும்பாலான அரசியல்வாதிகள் வெவ்வேறு காரணங்களுக்காக கவலைப்படுவதாக இல்லை. அத்தகைய ஒரு பொறுப்பற்ற அலட்சியப் போக்கில் மாற்றம் ஒன்று ஏற்பட வேண்டியது அவசியமானதாகும்.

மாகாணசபை தேர்தல்களை விரைவாக நடத்துமாறு அரசாங்கத்திடம் கடந்த வாரம் கோரிக்கை விடுத்த தயாசிறி ஜெயசேகரவும் மற்றைய இருவரும் மாகாண சபைகள் தொடர்பில் தங்களது அரசியல் கட்சிகளின் உத்தியோகபூர்வமான நிலைப்பாடுகளைப் பிரதிபலிக்கிறார்களா என்பது தெளிவாகத் தெரியவில்லை. ஆனால், ஜனாதிபதியினால் நேரடியாக நியமிக்கப்படும் ஆளுநர்களின் கீழ் மாகாணங்கள் தொடர்ச்சியாக நிருவகிக்கப்படுவதனால் ஏற்படுகின்ற பிரச்சினைகளை வெளிக்கொண்டு வருவதில் அவர்கள் காட்டும் அக்கறையை வரவேற்க வேண்டும்.

தேர்தல்களில் மக்களினால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளிடம் மாகாணசபைகளின் நிருவாகத்தை கையளிக்காமல் பல வருடங்களாக ஆளுநர்களின் பொறுப்பில் விடுவது உண்மையில் அதிகாரப்பரவலாக்கல் கோட்பாட்டையே கொச்சைப் படுத்துவதாகும். மாகாணசபைகள் பல வருடங்களாக இயங்கவில்லை என்பதால் எதுவும் கெட்டுப்போகவில்லை என்று கூறும் அரசியல்வாதிகளும் இருக்கிறார்கள். அவர்கள் அடிப்படையில் அதிகாரப் பரவலாக்கத்துக்கு எதிரான நிலைப்பாடுகளைக் கொண்டவர்கள்.

> **மாகாணசபை தேர்தல்களை நடத்துவதில் அவசரம் காட்டுவதற்கு அரசாங்கம் தயாராக இல்லை என்ற பரவலான ஒரு அபிப்பிராயமும் இருக்கிறது. எது எவ்வாறிருந்தாலும், மாகாணசபை தேர்தல்களை விரைவாக நடத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது முற்று முழுதாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் பொறுப்பேயாகும்.**

2017 ஆம் ஆண்டில் மாகாணசபை தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டதற்கு பிறகு இலங்கை நான்கு ஜனாதிபதிகளையும் மூன்று அரசாங்கங்களையும் கண்டிருக்கிறது. அந்த தேர்தல்கள் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டதற்கான பொறுப்பை அரசாங்கங்களும் எதிர்க்கட்சிகளும் கூட்டாக ஏற்றுக் கொள்ளவேண்டும்.

மாகாணசபைகளில் பெண்களுக்கு 30 சதவீதமான ஆசனங்களை ஒதுக்கீடு செய்வதற்காக கொண்டு வரப்பட்ட மாகாணசபைகள் தேர்தல்கள் திருத்தச் சட்டமூலத்திற்குள் (பாராளுமன்றத்தில் குழுநிலை விவாதத்தின் போது) மாகாணசபை தேர்தல் முறையை மாற்றும் நோக்கில் இடையில் சொருகப்பட்ட சில பிரிவுகள் காரணமாகவே தேர்தல்களை நடத்த முடியாமல் இருக்கிறது. உயர்நீதிமன்றத்தினால் பரிசீலிக்கப்பட்டதை விடவும் பெருமளவுக்கு வேறுபட்ட சட்டமூலமே பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது என்பதே உண்மையாகும்.

சிறிசேன - ரணில் தலைமையிலான அரசாங்க காலத்தில் (2015 - 2019) அந்த திருத்தச் சட்டத்தை பாராளுமன்றத்தில் இன்றைய ஆளும் கூட்டணியான தேசிய மக்கள் சக்தியின் தலைமைத்துவ கட்சியான ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.)மற்றும் தமிழ் உட்பட சகல கட்சிகளும் ஆதரித்தன.

தற்போது உள்ளூராட்சி தேர்தல்களில் கடைப்பிடிக்கப்படுவதைப் போன்று (விகிதாசாரப் பிரதிநிதித் துவ முறையையும் பழைய தொகுதி அடிப்படையிலான முறையையும் உள்ளடக்கிய) கலப்பு முறையின் கீழ் மாகாணசபை தேர்தல்களை நடத் துவதற்காக எல்லை நிர்ணயக்குழு சமர்ப்பித்த அறிக் கையை பாராளுமன்றம் நிராகரித்த காரணத்தினாலேயே இன்று வரை தேர்தல்களை நடத்த முடியாமல் இருக்கிறது. புதியதொரு எல்லை நிர்ணய அறிக்கையை பாரா ளுமன்றம் அங்கீரித்தால் மாத் திரமே தேர்தல்களை நடத் தக்கூடியதாக இருக்கும். அதனால் அவ்வாறு செய்வது மீண்டும் தாமதத்தை ஏற்ப டுத்தும் ஒரு செயற்பாடா கவே அமையும். அதனால், முன்னையதைப் போன்றே முழுமையாக விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் மாகாணசபை தேர்தல்களை நடத்துவதே தற்போதைக்கு நடைமுறைச் சாத்தியமானதாக இருக்கும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக்காலத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தனிநபர் பிரேரணையாக கொண்டுவந்த திருத்தச் சட்டமூலத்தை அன்று பாராளுமன்றம் நிறைவேற்றியிருந்தால் மாகாணசபை தேர்தல்களை ஏற்கெனவே நடத்தக்கூடியதாக இருந்திருக்கும். ஆனால், கடந்த ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பதற்கு இலங்கை தமிழரசு கட்சி தீர்மானித்த காரணத்தினால் தனது பதவிக்காலத்தின் இறுதிக்கட்டத்தில் சுமந்திரனின் சட்டமூலம் நிறைவேறுவதற்கு இருந்த வாய்ப்பை விக்கிரமசிங்க குழப்பியடித்தார். அந்த சட்டமூலத்தை நிறைவேற்றிய பிறகு ஜனாதிபதி தேர்தலில் யாரை ஆதரிப்பது என்ற தீர்மானத்தை எடுப்பது குறித்து சிந்திக்கக்கூடிய அளவுக்கு தமிழரசு கட்சியிடம் அரசியல் தந்திரோபாயம் இருக்கவில்லை.

சுமந்திரன் கொண்டு வந்ததைப் போன்றே மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் தனிநபர் பிரேரணையாக சட்டமூலம் ஒன்றை இப்போது சமர்ப்பித்திருக்கிறார். அதை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதன் மூலம் மாகாணசபை தேர்தல்களை விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் விரைவாக நடத்துவதற்கு வழிவகுக்க முடியும். அரசாங்கமே அத்தகைய சட்டமூலம் ஒன்றைக் கொண்டு வந்து நிறைவேற்றும் என்று சபையில் அரசாங்கத் தரப்பில் ஒரு தடவை உறுதியளிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

மாகாணசபை தேர்தல்களை விரைவாக நடத்த வேண்டும் என்ற உண்மையான அரசியல் விருப்பம் அரசாங்கத்துக்கு இருந்தால், பாராளுமன்றத்தில் சாணக்கியனின் சட்டமூலத்துக்கு ஆதரவை வழங்கலாம் அல்லது அரசாங்கம் தானே ஒரு திருத்தச் சட்டமூலத்தை கொண்டு வந்து நிறைவேற்ற முடியும். அடுத்த வருட முற்பகுதியில் மாகாணசபை தேர்தல்கள் நடத்தப்படும் என்று அமைச்சர் பிமால் இரத்நாயக்க அண்மையில் அறிவித்த அதேவேளை அந்த தேர்தல்களை நடத்துவதில் இருக்கும் சட்டச்சிக்கல்களுக்கு தீர்வைக் காண்பது முற்றுமுழுதாக பாராளுமன்றத்தின் பொறுப்பு என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்திருக்கிறது.

மாகாணசபை தேர்தல்களை நடத்துவதில் அவசரம் காட்டுவதற்கு அரசாங்கம் தயாராக இல்லை என்ற பரவலான ஒரு அபிப்பிராயமும் இருக்கிறது. எது எவ்வாறிருந்தாலும், மாகாணசபை தேர்தல்களை விரைவாக நடத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது முற்று முழுதாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் பொறுப்பேயாகும். அதை தட்டிக்கழிப்பதற்கு உருப்படியான எந்த காரணத்தையும் அரசாங்கத்தினால் கூறமுடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொள்கை வகுக்கும் செயன்முறைகளில் கேட்கமுடியாமல் இருக்கும் குரல்கள்!



கலாநிதி ஜெகான் பெரேரா

அமெரிக்காவின் வர்த்தக அமைச்சில் இருந்து கிடைத்திருக்கும் செய்தி எதிர்பார்க்கப்பட்டதை விடவும் சிறப்பானதாக இருக்கிறது. 2025 ஏப்ரலில் அமெரிக்க அரசாங்கம் 44 சதவீத வரியை திடீரென விதித்தபோது அதிர்ச்சியடைந்த இலங்கையர்கள் அந்த வரி 20 சதவீதமாகக் குறைக்கப்பட்டதை அறிந்து நிம்மதியடைந்தனர். உலகில் தனது பிரதான போட்டி நாடாக அமெரிக்கா நோக்கும் சீனாவுடன் வலிமையான வர்த்தக மற்றும் அரசியல் உறவுகளை கொண்டிருக்கிறது என்ற காரணத்துக்காக தண்டிக்கப்பட்டிருக்கக் கூடிய ஒரு நாட்டைப் பொறுத்தவரை, இந்த வரிக்குறைப்பு முக்கியமான ஒரு சலுகையாகும்.

மாற்றியமைக்கப்பட்ட வரி இப்போது இந்தியா, பங்களாதேஷ் மற்றும் பாகிஸ்தான் போன்ற ஏனைய ஆசிய போட்டி நாடுகளுக்கு பெருமளவுக்கு நெருக்கமாக இலங்கையை கொண்டுவந்து விட்டிருக்கிறது. அமெரிக்காவின் அதே கொள்கைகளின் கீழ் இந்த நாடுகளின் ஏற்றுமதிகளும் கணிசமானளவுக்கு குறைந்த கட்டண வீதங்களை எதிர்நோக்கின. இலங்கையின் உயர்மட்ட தூதுக்குழுவொன்று வாஷிங்டனுக்கு மேற்கொண்ட விஜயத்தையும் அமெரிக்க வர்த்தக பிரதிநிதி ஜமீசன் கிறீருடன் ஜனாதிபதி அநுரா குமார திசாநாயக்க ஜூலையில் நடத்திய இணையவழி பேச்சுவார்த்தையையும் தொடர்ந்து வரிகளில் கடுமையான குறைப்புச் செய்யப்பட்டிருக்கிறது.

அமெரிக்காவுக்கு பதிலளிப்பதற்கு அரசாங்கம் மிகவும் நீண்டநாட்கள் காலந்தாழ்த்தி விட்டது என்றும் பேச்சுக்களை நடத்துவதற்கு சிறந்த தூதுக்குழுவை பயன்படுத்தவில்லை என்றும் விமர்சகர்கள் வாதிட்டார்கள். ஆனால், விளைவுகள் உண்மை நிலையை வெளிக்காட்டி நிற்கின்றன. முன்விழிப்புடனான இராஜதந்திரம் மற்றும் மோதல் போக்கு இல்லாத அணுகுமுறையின் மூலமாக தூதுக்குழுவினர் இலங்கையின் ஏற்றுமதிகளுக்கு முக்கியமான வர்த்தக சலுகையைப் பெறுவதில் வெற்றி கண்டிருக்க்கிறார்கள்.

எதிர்பாராத இந்த வெற்றி பொது உறவுகளில் கிடைத்த ஒரு வெற்றி என்பதுடன் நெருக்கடிமிகுந்த உலகளாவிய நிலைவரங்களின் கீழ் பொருளாதாரத்தைக் கையாளுவதில் அதற்கு இருக்கும் ஆற்றலில் நம்பிக்கையை மேம்படுத்துவதுவதற்கான வாய்ப்பும் இருக்கிறது.


உண்மையில், நம்பிக்கையில் ஏற்பட்ட இந்த மேம்பாட்டை கொழும்பு பங்குப் பரிவர்த்தனை பிரதிலித்திருக்கிறது. வரிக்குறைப்பு உறுதிப்படுத்தப்படுவதற்கு முன்னதாகவே கூட பங்குப் பரிவர்த்தை நிலைவரம் புதிய ஒரு உயர்மட்டத்தில் காணப்பட்டது. பங்குச் சந்தையில் காணப்படும் இந்த எழுச்சி வர்த்தக உயர்குழாமும் உயர்மட்ட முதலீட்டாளர்களும் தங்களது நலன்களைப் பாதுகாக்கின்ற தீர்மானங்களை அரசாங்கம் எடுக்கிறது என்று நம்புகிறார்கள் என்பதை உணர்த்தி நிற்கிறது. என்றாலும், இந்த நம்பிக்கையுணர்வு இன்னமும் பரந்தளவில் மக்களின் வாழ்க்கையில் மேம்பாடுகளை ஏற்படுத்துவதாக அமையவில்லை.

வாழ்க்கைச் செலவு இரண்டு அல்லது மூன்று மடங்காக அதிகரித்திருக்கின்ற அதேவேளை, மூன்று வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சிக்கு முன்னதாக பெற்ற அதே வேதனங்களையே உழைக்கும் மக்கள் இன்றும் பெறுகிறார்கள். பெரும்பாக பொருளாதாரப் பயன்களை சமுதாயத்தின் அடிமட்டத்தில் மக்களின் வாழ்க்கை நிலைவரங்களின் மேம்பாடாக மாற்றியமைப்பதில் கவனத்தைக் குவிக்க வேண்டிய தேவையை அரசாங்கம் உணர்ந்திருக்கிறது என்பதை ஜனாதிபதியின் உரைகள் வெளிக்காட்டுகின்றன.

இலங்கையில் வறுமை வீதம் 2022 ஆம் ஆண்டுக்கு பிறகு இரண்டு மடங்கிற்கும் கூடுதலாக அதிகரித்திருக்கிறது என்பதை ஆய்வுகள் தொடர்ச்சியாக காட்டுகின்றன. பொருளாதார நெருக்கடிக்கு முன்னதாக 11 சதவீதமாக இருந்த வறுமை தற்போது 25 சதவீதமாக இருக்கிறது. குறிப்பாக, சிறுவர்கள் மத்தியில் மந்தபோசாக்கு அச்சந்தரும் மட்டங்களை எட்டியிருக்கிறது. யூனிசெவ் வெளியிட்டிருக்கும் விபரங்களின் பிரகாரம் இலங்கையில் ஐந்து வயதுக்கும் குறைவான சிறுவர்களில் 18 சதவீதமானவர்கள் உருக்கல் நோயினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். உலக சுகாதார நிறுவனத்தின் நியமங்களின் பிரகாரம் இந்த வீதம் தெற்காசிய நாடுகளில் மிகவும் மோசமானதாக இருக்கிறது.

இலங்கை பெரும்பாலும் நகர மையங்களில் ஒப்பீட்டளவில் ஆடம்பரமாக வாழ்கின்ற ஒரு சிறுபான்மைக்கும் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கே போராடுகின்ற ஒரு பெரும்பான்மைக்கும் இடையில் பிளவுபட்ட ஒரு நாடாகவே இருந்து வருகிறது. பொருளாதாரப் பரப்பில் மாத்திரமல்ல, சமூக, கலாசார மற்றும் அரசியல் பரப்புகளிலும் இந்த இரு அடுக்கு கட்டமைப்பு இருக்கிறது. சுதந்திரத்துக்கு பிறகு இலங்கையின் வேறு எந்த தலைமைத்துவத்தை விடவும் தற்போதைய அரசாங்கத் தலைமைத்துவம் அடிமட்ட அடுக்கில் இருந்து இந்த இரட்டைக் கட்டமைப்பை அனுபவித்து வந்திருப்பதுடன் இந்த யதார்த்தத்தை மாற்றியமைக்க வேண்டும் என்ற பற்றுறுதியைக் கொண்டதாகவும் இருப்பதாக தெரிகிறது.

இந்த பரந்த பின்புலத்தில்தான் சமுதாயத்தின் சகல மட்டங்களையும் அரவணைக்கும் கோட்பாடு ஒரு மேலதிக பரிமாணத்தைப் பெறுகிறது. சகலரையும் அரவணைக்கும் சமுதாயம் ஒன்றைக் கட்டியெழுப்புவதற்கான முயற்சிகளை பொருளாதாரக் கொள்கைகளுக்கு அப்பாலும் விரிவுபடுத்த வேண்டியது அவசியமாகும். உத்தேச தேசிய ஊடகக் கொள்கை ஒன்று தொடர்பாக ஊடகத்துறை அமைச்சினால் அண்மையில் நடத்தப்பட்ட கலந்தாலோசனை ஒரு நல்ல உதாரணமாக அமையமுடியும். இந்த கலந்தாலோசனை இலங்கையில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் ஆதரவுடன் முன்னெடுக்கப்படுகின்ற தொடர்ச்சியான முன்முயற்சிகளின் ஒரு அங்கமாகும். கொள்கை வரைவுச் செயன்முறைகளில் சிவில் சமூகத்தின் பங்கேற்பை ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டம் ஊக்குவிக்கிறது.



**தேசியக்கொள்கையை வடிவமைப்பதில் பங்கேற்பதற்கு தங்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டிருப்தாக சகல சமூகங்களும் உணரக்கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.**

ஊடகக் கொள்கை தொடர்பான கலந்தாலோசனையில் மாற்றுத்திறனாளிகள் சங்கங்களினதும் மாறிய பாலினச் சமூகத்தினதும் பிரதிநிதிகளும் கூட கலந்துகொண்டு ஒதுக்கல் மற்றும் ஓரங்கட்டல் தொடர்பிலான தங்களது அனுபவங்களை விளக்கிக் கூறினர். பொதுத் தொடர்புகளைப் பெறமுடியாமல் இருப்பது, ஊடகங்களில் தங்களைச் சிறுபான்மையினர் என்று வர்ணிப்பது போன்ற சான்றுகளுடன் இவர்கள் தங்களது விளக்கங்களை அளித்தனர். சமூக ரீதியில், பொருளாதார ரீதியில், அரசியல் ரீதியில் பிரதான நீரோட்டத்தில் பங்கேற்பதில் தங்களுக்கு உள்ள விருப்பத்தை இந்த குழுக்கள் அடிக்கடி வெளிப்படுத்தி வந்திருக்கின்றன.

ஊடகத்துறை அமைச்சு அதன் கொள்கைத் திட்டத்தில் அவர்களது குரல்களையும் உள்ளடக்குவதில் காட்டியிருக்கும் திறந்த மனப்போக்கு வரவேற்கத்தக்க ஒரு பண்பாகும். ஆனால், இந்த கலந்தாலோசனையில் இன, மத சிறுபான்மைச் சமூகங்களைச் சேர்ந்தவர்கள் குறிப்பாக, நாட்டின் வடக்கு, கிழக்கு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் ஏறத்தாழ அறவே பங்கேற்காதமை முக்கியமான ஒரு குறைபாடாகும். ஊடகத்துறை அமைச்சின் கலந்தாலோசனையில் மாத்திரமல்ல மற்றைய கலந்தாலோசனைகளிலும் அவர்களின் பங்கேற்பு இருப்பதில்லை.

இந்த விடயத்தில் மாத்திரமல்ல, தேசிய கொள்கைகளை வகுப்பதற்கு முன்னெடுக்கப்படும் இதே போன்ற சகல முயற்சிகளிலும் வடக்கு, கிழக்கைச் சேர்ந்தவர்களின் பிரதிநிதித்துவம் இல்லாதமை குறித்து கருத்தூன்றிய வகையில் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும். ஏற்பாட்டாளர்கள் வடக்கு, கிழக்கைச் சேர்ந்த சிவில் சமூகக் குழுக்களுக்கு அழைப்பை விடுத்திருந்தார்கள். ஆனால், அவர்கள் பங்கேற்கத் தவறி விட்டார்கள். அத்தகைய பிரதிநிதித்துவம் இல்லாதமையை வெறுமனே போக்குவரத்து போன்ற நடைமுறைப் பிரச்சினையாகக் கருதி சாதாரணமான ஒன்றாக கருதக்கூடாது. அவர்களின் பிரசன்னம் இன்மையை பௌதீக தூரத்தை விடவும் ஆழமான அன்னியப்படுத்தலின் ஒரு அடையாளமாகவே பார்க்க வேண்டும்.

இலங்கையின் நவீன வரலாற்றுப் போக்கில், இந்த சமூகங்கள் தங்களின் கௌரவம், சமத்துவ உரிமைகள் மற்றும் சுயாட்சிக்காக அமைதிவழியிலும் ஆயுதமேந்தியும் போராட்டங்களில் ஈடுபட்டு வந்திருக்கின்றன. அவர்கள் சிங்கள பௌத்த பெரும்பான்மை இனத்தவர்களுடனும் அரசாங்கங்களுடனும் முரண்பட்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் நிரந்தரமான சிறுபான்மையினர் என்ற முறையில் வகை தொகையின்றி பாரபட்சங்களுக்கு உள்ளாக்கப்பட்டு வந்திருக்கிறார்கள். பரந்தளவிலான அவநம்பிக்கை உணர்வே சுதந்திரத்துக்கு பின்னரான இலங்கையின் வரலாற்றின் நீடித்த விளைவாக இருக்கிறது.

அரசாங்கத்தில் [illegible] செயன்முறைகளில் பங்கேற்பதன் மூலமாக அர்த்தபுஷ்டியான எந்த மாற்றத்துக்கும் வழிவகுக்கப் போவதில்ல என்ற ஐயுறவு மனப்பான்மையைக் கொண்டவர்களாக வடக்கு, கிழக்கைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம் சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் இருக்கிறார்கள். சகல தரப்புகளையும் அரவணைப்பது என்பது சில சந்தர்ப்பங்களில் எதிர்ப்பைச் சமாளிப்பதற்கான அல்லது மெய்யான அரசியல் சீர்திருத்தத்தை வேண்டி முன்வைக்கப்படும் கோரிக்கையை தளரச் செய்வதற்கான ஒரு வழிவகையாக அமைந்துவிடும் என்றும் அவர்கள் அஞ்சுகிறார்கள். சகல சமூகங்களையும் அரவணைப்பதாக கூறுவது பொறுப்புக்கூறலுக்கான தெளிவான பொறிமுறையும் சிறுபான்மையினரின் உரிமைகளுக்கு பாதுகாப்பும் இல்லாத பட்சத்தில், வெறுமனே ஒரு ஒப்பனையாகவே தோன்ற முடியும். சிறுபான்மைச் சமூகத்தவர்கள் நாடிய மாற்றுப்பாதை பெருமளவிலான சுயாட்சிக் கோரிக்கையேயாகும்.

மாகாணசபை முறையை உருவாக்கிய அரசியலமைப்புக்கான 13 வது திருத்தம் அந்த கோரிக்கைக்கான ஒரு நேரடிப் பதிலாகும். ஆட்சிமுறையை பன்முகப்படுத்துவதற்கும் சிறுபான்மைச் சமூகங்கள் அவர்களது சொந்த விவகாரங்களில் பெருமளவுக்கு கட்டுப்பாட்டைக் கொண்டிருப்பதற்கும் அந்த திருத்தம் கொண்டு வரப்பட்டது. ஆனால், அதிகாரப்பரவலாக்கல் உறுதிமொழி ஒருபோதும் முழுமையாக நிறை வேற்றப்படவில்லை. 2018 ஆம் ஆண்டுக்கு பிறகு மாகாணசபைகளுக்கு தேர்தல்கள் நடத்தப்படவில்லை. ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் ஆளுநர்களே மாகாண சபைகளை இப்போது நிருவகிக்கிறார்கள். இந்த மத்தியமயக் கட்டுப்பாடு தாங்கள் ஒதுக்கப்படுவதாக வடக்கு, கிழக்கு சமூகங்கள் மத்தியில் உள்ள உணர்வை மேலும் ஆழமாக்கியிருக்கிறது.

நீண்டகாலமாகத் தாமதிக்கப்பட்டுவரும் மாகாண சபை தேர்தல்களை விரைவாக நடத்துமாறு சிவில் சமூகக் குழுக்கள் அரசாங்கத்திடம் திரும்பத்திரும்ப வேண்டுகோள் விடுத்த வண்ணமிருக்கின்றன. தேர்தல்களை நடத்தாமல் இருப்பது அரசியலமைப்பு கடப்பாடுகளை மலினப்படுத்துவதுடன் உள்ளூார் மட்டத்தில் ஜனநாயக ஆட்சிமுறையை பலவீனப்படுத்துகிறது. இத்தகைய சூழ்நிலையில், ஓரங்கட்டப்பட்ட சமூகங்களின் குரல்கள் முக்கியமானவை என்று அவர்களை நம்ப வைப்பதோ அல்லது அரசாங்கத்தினால் ஏற்பாடு செய்யப்படுகின்ற கலந்தாலோசனைகளில் பங்கேற்பதனால் பயன் ஏற்படும் என்று நம்பவைப்பதோ பெரும் கஷ்டமான காரியமாகும். இதற்கு ஊடகக் கொள்கை கலந்தாலோசனை ஒரு நல்ல உதாரணமாகும்.

மாற்றுத் திறனாளிகளும் மாறியபாலின சமூகத்தவர்களும் உள்வாங்கப்பட்டது மெச்சத்தக்கது என்கிற அதே வேளை, இன, மத சிறுபான்மைச் சமூகங்களின் குரல்கள் இல்லாதமை அந்த கலந்தாலோசனைச் செயன்முறையின் உண்மையான தேசிய குணாம்சத்தைக் குறைத்துவிட்டது. இது வரையப்படுகின்ற கொள்கையின் நியாயப்பாட்டை மலினப்படுத்துகிறது. யதார்த்தங்களையும் சகல சமூகங்களினதும் குறிப்பாக, வரலாற்று ரீதியாக ஊடகங்களில் பிரதிநிதித்துவப்படுத்தப்படாமல் மௌனமாக்கப்பட்ட சமூகங்களின் தேவைகளையும் பிரதிபலிக்காத பட்சத்தில் தேசிய ஊடகக் கொள்கை பயனுறுதியுடையதாக இருக்க முடியாது.

ஊடகக்கொள்கை வரைவு வலிமையான அம்சங்கள் இருக்கின்றன. அது கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை ஒரு அரசியலமைப்பு வழியிலான ஒரு உரிமையாக அங்கீகரிப்பதுடன் ஊடகப் பன்மைத்துவம், ஊடக உடைமையின் பல்வகைமை மற்றும் ஆசிரியபீடச் சுதந்திரம் ஆகியவற்றை உறுதிப்படுத்துகிறது. அரசு தரப்பையும் சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களையும் உள்ளடக்கிய இணை ஒழுங்கமைப்பு வகைமாதிரி ஒன்றை அமைப்பதற்கான யோசனையையும் முன்வைக்கிறது. அந்த யோசனை நம்பகத்தன்மையுடன் நடைமுறைப்படுத்தப்பட்டால் ஊடக ஆட்சிமுறையில் அரசியல்மயமாக்கலை இல்லாமல் செய்வதற்கு உதவும்.

ஆனால், தேசிய ஐக்கியத்தையும் நல்லாட்சி முறையையும் கட்டியெழுப்புமுகமாக அரசாங்கம் அடையாள பூர்வமான அரவணைப்புக்கு அப்பால் செல்ல வேண்டியது அவசியமானதாகும். தேசியக்கொள்கையை வடிவமைப்பதில் பங்கேற்பதற்கு தங்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டிருப்தாக சகல சமூகங்களும் உணரக்கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும். அதிகாரப் பன்முகப்படுத்தல், சுயாதீன நிறுவனங்களை உறுதிப்படுத்தல், மனித உரிமைகளைப் பாதுகாத்தல், சட்டத்தின் பிரகாரம் தேர்தல்களை நடத்துதல் ஆகியவையும் இதில் அடங்கும். பேச்சுவார்த்தை, பரஸ்பர அங்கீகாரம், நீதியானதும் பன்முகத்தன்மை கொண்டதுமான சமுதாயம் ஒன் றைக் கட்டியெழுப்புவதில் பொதுவான பற்றுறுதி ஆகி யவற்றின் ஊடாகவே தேசிய ஐக்கியம் சாதிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரும்பும் மாற்றங்களை முடிக்க 15-20 வருட ஆட்சிக் காலத்தை ரில்வின் சில்வா நாடுகிறார்!

**பனங்காட்டான்**

ஊடக நிறுவனங்களில் புதிதாக செய்தியாளர்களாக நியம னம் பெறுபவர்களுக்கு பயிற்சிப் பட்டறை நடத்தப்படுவது வழமை. இதன்போது ஒரு விடயத்தை முக்கியமாக எடுத்துக் கூறுவார்கள்.

நாய் மனிதனைக் கடிப்பது செய்தியல்ல, மனிதன் நாயைக் கடிப்பதே செய்தி என்பது அந்தப் பொன்வாக்கியம். வழமையான செயற்பாடுகள் அல்லது முன்னரே தெரிந்திருந்த விடயங்கள் செய்திகளுக்குரியவையல்ல என்பதே இதன் அர்த்தம்.

கடந்த வாரம் இடம்பெற்ற தமிழரசுக் கட்சியின் முக்கிய கூட்டத்தைத் தொடர்ந்து ஊடகங்களுக்குத் தெரிவிக்கப்பட்ட கட்சியின் முடிவுகளில் ஒன்று, கஜேந்திரகுமார் தயாரித்த ஜெனிவாவுக்கான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கடிதம் தொடர்பானது இது. இக்கடிதத்தில் தமிழரசுக் கட்சி ஒப்பமிட மாட்டாது என்ற முடிவை அதன் பேச்சாளர் என்றும் பதில் செயலாளர் என்றும் சொல்லப்படும் சுமந்திரன் இங்கு அறிவித்தார்.


அநேகமாக அனைத்து ஊடகங்களிலும் இச்செய்தி வெளியானது. எனது பார்வையில் இந்தச் செய்தி - அதாவது தமிழரசுக் கட்சியின் முடிவு எதிர்பார்க்கப்படாத ஒன்றல்ல. கஜேந்திரகுமார் முன்னெடுக்கும் எந்த விடயத்திலும் தமிழரசுக் கட்சி இணைந்து செல்ல மாட்டாது என்பது அனைவருக்கும் தெரிந்தது. எனவே இக்கடிதத்திலும் அவர்கள் ஒப்பமிட மாட்டார்கள் என்பது முன்னறிந்த விடயம். சொல்லப்போனால், நாய் மனிதனைக் கடிப்பது போன்ற ஒரு விடயம் தான்.

கஜேந்திரகுமாரின் கடிதத்தில் தமிழரசுக் கட்சி ஒப்பமிடும் என்று முடிவெடுக்கப்பட்டிருந்தால் அது ஊடகங்களில் தலைப்புச் செய்திக்குரியது. ஆனால், கட்சி அவ்வாறு முடிவெடுக்காது என்பது ஏற்கனவே தெரிந்த விடயம். இந்தக் கடிதம் ஜெனிவாவுக்கு அனுப்பப்பட்டு விட்டது. ஆனாலும் கஜேந்திரகுமார் விடுவதாக இல்லை. இப்போதும் தமிழரசுக் கட்சி விரும்பினால் அவர்களைச் சந்திக்க தயாராக இருப்பதாக அவர் அறிவித்துள்ளார்.

இதனையும் தமிழரசுக் கட்சி ஏற்றுக் கொள்ளாது என்பது தெரியும். தமிழரசுக் கட்சி சார்பில் ஜெனிவாவுக்கு தனியான கடிதம் அனுப்பப்படுமென்று சுமந்திரன் அறிவித்துள்ளார். இதனை அவர் அறிவிக்கும்போது கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் அருகில் இருந்ததால், அவரை சாட்சியாக்க விரும்பி அவருடைய பெயரையும் ஓரிரு தடவை உச்சரித்துக் கொண்டார். ஆனால், சி.வி.கே. எந்தப் பக்கமும் தலையாட்டி ஆமா போடாது அசையாது அமர்ந்திருந்தார்.

இவ்விடயத்தில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய முக்கிய அம்சம் பெரும்பான்மை - சிறுபான்மை சம்பந்தமானது. தமிழரசுக் கட்சிதான் தமிழ் மக்களின் பெரிய கட்சி, வடக்கு கிழக்கின் சகல மாவட்டங்களிலும் இக்கட்சிக்கு எம்.பிக்கள் உள்ளனர். மிகக்கூடுதலான தமிழ் எம்.பி.க்களை கொண்ட கட்சியும் தமிழரசுதான், கடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் கூடுதலான உறுப்பினர்களைப் பெற்று பெரும்பாலான சபைகளை கைப்பற்றியதும் தமிழரசுக் கட்சியே.

இதனால், நெருக்கடியான இவ்வேளையில் மற்றைய தமிழ்த் தேசிய கட்சிகளையும் அணைத்துக் கொண்டு செல்ல வேண்டிய கடமை இவர்களுக்குண்டு.



**தமிழரசுக் கட்சியே தமிழரின் பெரிய கட்சி என்பதால் மற்றைய சிறிய கட்சிகள் தங்களுடன் இணையலாம் என்று பெரும்பான்மை - சிறுபான்மை சித்தாந்தம் சொல்கிறார் சுமந்திரன். விரும்பிய மாற்றங்களை ஏற்படுத்த 15-20 ஆண்டுகள் ஆட்சியில் இருக்க வேண்டுமென சீன கம்யுனிஸ்ட் கட்சி தம்மிடம் தெரிவித்ததாக கூறுகிறார் ஜே.வி.பி.யின் திசைகாட்டியான ரில்வின் சில்வா.**

ஆனால், தாங்களே பெரும்பான்மை என்பதால் அவர்கள் விரும்பினால் எங்களுடன் வரலாம் என்ற பாணியில் அறிவிப்பது மூத்த கட்சி ஒன்றுக்கு அழகல்ல. அப்படித்தான் இருக்க வேண்டுமென்றால், சிங்களத் தேசத்தவர்கள் தாங்களே பெரும்பான்மை இனத்தவர் என்று கூறிக் கொண்டு தாங்கள் சொல்வதை சிறுபான்மையினரான தமிழர் கேட்க வேண்டுமென்றும், வழங்குவதை பெற்றுக் கொள்ள வேண்டுமென்றும் சொல்வதை இது நியாயப்படுத்துவதாக அமையும்.

தமிழரசுக் கட்சி இன்னமும் தமிழ் மக்களிடையே செல்லுபடியானதாக இருப்பதற்கு அடிப்படையாக இரு காரணங்கள் உண்டு. இக்கட்சியை உருவாக்கி பதவி ஆசை இல்லாது தூய்மையான அர்ப்பணிப்புடன் இயங்கிய தந்தை எஸ்.ஜே.வி.செல்வநாயகம், கு.வன்னியசிங்கம், டாக்டர்.ஈ.எம்.வி.நாகநாதன், திருமலை இராஜவரோதயம், பட்டிருப்பு இராசமாணிக்கம் போன்றவர்களால் கட்டி வளர்க்கப்பட்டது. விடுதலைப் புலிகள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பை உருவாக்கியபோது அதில் இடம்பெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரதான அரசியல் அமைப்பாக தமிழரசுக் கட்சி இருந்ததால் அதற்கே முதலிடம் கொடுக்கப்பட்டு அக்கட்சிக்கே தலைமைப் பதவியும் வழங்கப்பட்டது.

இந்த இரண்டு காரணங்களுக்காகவே இன்றும் தமிழரசுக் கட்சியை முதலிடத்தில் மக்கள் நிறுத்தி வருகின்றனர். ஆனால், கடந்த இரண்டு தசாப்தங்களில் புதியவர்களின் பதவிப் போட்டியால் கட்சி சிதறுண்டு போகிறது. 22 எம்.பிக்களுடன் இருந்த கட்சிக்கு இப்போது எட்டுத்தான் மிஞ்சியுள்ளது.

நீதிமன்றத்தின் கட்டுக்குள் அகப்பட்டிருக்கும் கட்சிக்கு மீட்பராக எவரையும் காணவில்லை. ஒவ்வொருவரும் தாமே தலைவராக காணப்படுகின்றனர். தமிழரசுக் கட்சியை ஆங்கிலத்தில் 'பெடரல் பார்ட்டி' என்பர். இதன் அர்த்தம் சமஷ்டிக் கட்சி என்பது. இப்போது சமஷ்டியை வலியுறுத்தி நூறு நாள் மக்கள் போராட்டத்தை சிவஞானம் சிறீதரன் எம்.பி. ஆரம்பித்துள்ளார். வடக்கிலும் கிழக்கிலும் இப்போராட்டம் மக்களால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. கட்சியின் பதில் தலைவரையோ பதில் செயலாளரையோ எங்கும் காணவில்லை. கட்சியின் பிரதான கொள்கையான சமஷ்டியை இவர்கள் மறந்துவிட்டனரோ என கேட்க வேண்டியுள்ளது.

மாகாண சபைத் தேர்தல் என்பது தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் கானல் நீராகி வருகிறது. புதிய தேர்தல் முறைமை, அடுத்த ஆண்டில் தேர்தல், மாகாண சபை ஒழிக்கப்படாது என்ற உறுதிமொழிகளுக்குள் இலகுவாக அது மூழ்கடிக்கப்படுகிறது. எல்லாப் போட்டிகளிலும் தோல்வி கண்ட பின்னர் இப்போது மாகாண சபைத் தலைவர் பதவியில் போட்டியிடப் போவதாக சுமந்திரன் அறிவித்துள்ளார். இதுகூட கட்சியை மேலும் பிளவுபடுத்தும் செயல். பின்வரும் காலங்களில் இதுபற்றி மேலும் பேசலாம்.

பொதுவுடமை (கம்யுனிசம்) கட்சிகளின் கட்டமைப்பில் தலைவர் என்ற பதவி கிடையாது. இங்கு பொதுச்செயலாளரே கொள்கைகளை நெறிப்படுத்தும் பொறுப்பாளரும். இலங்கையில் இப்போது முதன்முறையாக ஆட்சி புரியும் ஜே.வி.பி. ஒரு பொதுவுடைமைக் கட்சி. இரண்டு தடவை (1971 மற்றும் 1987-1989) ஆயுதப்புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்ற முயன்று அரச பயங்கரவாதத்திடம் பல்லாயிரம் தோழர்களைப் பலிகொடுத்த அமைப்பு இது.

இப்போது தேசிய மக்கள் சக்தி என்ற மறுபெயரில் ஜனநாயக ரீதியாக ஆட்சியில் அமர்ந்துள்ளது. ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல், உள்ளாட்சித் தேர்தல் ஆகிய மூன்றிலும் சிங்கள மக்கள் தெரிவாக மட்டுமன்றி தமிழர் பிரதேசங்களிலும் கணிசமான ஆசனங்களை இவர்கள் பெற்றனர்.

தேசிய மக்கள் சக்தி என்ற பெயரில் இயங்கினாலும் இதன் இயங்குதளம் ஜே.வி.பி.தான். இதன் செயலாளர் மேஸ்திரி ரில்வின் சில்வாவே அனைத்தையும் தீர்மானிப்பவர். அதாவது இதன் திசைகாட்டி அவர்தான். நாடாளுமன்ற அரசியலில் 29 ஆண்டுகால அனுபவமும் அமைச்சர் பதவி ஆற்றலும் கொண்ட அநுர குமர திஸ்ஸநாயக்கவை பின்னாலிருந்து இயக்குபவரும் இவரே.

அண்மையில் தமது பட்டாளம் ஒன்றுடன் சீனாவுக்குச் சென்று வந்த இவர் கடந்த வாரம் கொழும்பில் இணையக் கலந்துரையாடல் ஒன்றில் பங்குபற்றிய போது முக்கியமான ஒரு விடயத்தை நாசூக்காக வெளிப்படுத்தினார். 'இலங்கையில் விரும்பிய மாற்றங்களைக் கொண்டு வர 15 - 20 ஆண்டுகள் ஆட்சியில் இருக்க வேண்டும்" (Chineese Communist Party told me that we would to be in power for 15 - 20 years to bring about the desired changes in Sri Lanka) என்று சீன கம்யுனிஸ்ட் கட்சி தம்மிடம் தெரிவித்த தாக கூறினார்.

இதனை ஏனோதானோ என்று ஒரு விட்டேந்தியாக ரில்வின் சில்வா தெரிவித்ததாக நினைக்கக்கூடாது. மகாகவி பாரதியார் கூறியது போன்று சிறு பொறியொன்றை அவர் ஊதி விட்டுள்ளார். சரியான நேரம் வரும்போது அது எவ்வாறு பற்றி எரியும் என்பது அவருக்குத் தெரியாததல்ல.

1970ல் ஆட்சிக்கு வந்த சிறிமாவோ பண்டாரநாயக்க புதிய அரசியலமைப்பின் வழியாக தமது ஆட்சிக் காலத்தை தேர்தலின்றி நீடித்தார். 1977ல் பிரதமராக ஆட்சிக்கு வந்து புதிய அரசியலமைப்பின் வழியாக ஜனாதிபதியான ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும் தமது ஆட்சிக் காலத்தை பொதுத் தேர்தல் இன்றியே நீடித்தார். இரண்டு தடவைகள் மட்டுமே ஜனாதிபதியாக ஒருவர் இருக்க முடியுமென்ற சட்டத்தை மாற்றி மூன்றாவது தடவையும் அப்பதவிக்கு போட்டியிட்டார் மகிந்த ராஜபக்ச.

இந்த வரிசையில் பார்க்கும்போது, இப்போதுள்ள அரசியல் சுவாத்தியம் ஜே.வி.பி.யின் மறுவடிவமான தேசிய மக்கள் சக்தியை அவர்கள் விரும்பும் காலம்வரை தேர்தல் இல்லாமலேயே ஆட்சியைத் தொடர வழிவகுக்கலாம். புரட்சிக்காரர்களுக்கு கதவை எவ்வாறு திறப்பதென்று எவரும் சொல்லிக் கொடுக்க வேண்டியதில்லை. ஜே.வி.பி.யின் மூத்தவரான ரில்வின் சில்வாவே (69 வயது) திசைகாட்டியின் திசைகாட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலாந்தன்

# மூடப்படும் பாடசாலைகள்!

வட மாகாணத்தில் 982 பாடசாலைகள் காணப்படும் நிலையில் அவற்றில் 70க்கும் மேற்பட்ட பாடசாலைகளை மூடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார். 10பிள்ளைகள் கல்வி கற்கும் 35 பாடசாலைகள் காணப்படுவதாகவும் 11-20 பிள்ளைகள் கல்வி கற்கும் 64 பாடசாலைகளும், 20-50 பிள்ளைகள் கற்கும் 171 பாடசாலைகளும் இருப்பதாகவும் 50-100 பிள்ளைகள் கற்கும் 174பாடசாலைகள் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பாடசாலைகள் ஏன் மூடப்படுகின்றன? எப்படிப்பட்ட பாடசாலைகள் மூடப்படுகின்றன? பெரும்பாலும் உள்ளூரில் காணப்படும் சிறிய பாடசாலைகள் தான் அதிகமாக மூடப்படுகின்றன. அவை மூடப்படுவதற்கு பல காரணங்கள் கூறப்படுகின்றன.முதலாவது காரணம், சனத்தொகை வீழ்ச்சி.இரண்டாவது காரணம், போட்டிப் பரீட்சை காரணமாக தேசிய மட்டப் பரீரசைகளில் உயர்ந்த அடைவைக் காட்டும் பாடசாலைகளை நோக்கி பிள்ளைகளை நகர்த்தும் ஒரு போக்கு.

எனினும் யுத்தம்தான் இதற்கு மூல காரணம் என்று ஒரு மூத்த கல்வி அதிகாரி தெரிவித்தார்.போர் காரணமாக ஏற்பட்ட இடப்பெயர்வுகள் புலப்பெயர்வுகள் போன்றவற்றால் சனத்தொகை வீழ்ச்சி அடைந்தது.போரினால் பாடசாலைகள் அழிக்கப்பட்டன. அல்லது சேதமடைந்தன. போர்க்காலத்தில் இடம்பெயர்ந்த ஒரு தொகுதி பாடசாலைகள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பவேயில்லை.

போட்டிப் பரீட்சை காரணமாக நகர்ப்புற பாடசாலைகளில் நோக்கிச் செல்லும் மோகம் அதிகரிக்கின்றது. தேசியமட்ட பரீட்சைகளில் உயர்ந்த பெறுபேறுகளை அடைவதற்காக பிள்ளைகளை பந்தயக் குதிரைகள் போல பழக்கி எடுக்கும் ஆசிரியர்களையும் பாடசாலைகளையும் நோக்கி அல்லது நகரங்களை நோக்கி பிள்ளைகள் நகர்கிறார்கள். இதனால் உள்ளூரில் காணப்படும் சிறிய பாடசாலைகள் கைவிடப்படுகின்றன.

வரையறைக்கப்பட்ட எண்ணிக்கையைவிடக் குறைந்தளவு பிள்ளைகளைக் கொண்ட ஒரு பாடசாலைக்கு வளங்களை விரயம் செய்ய முடியாது. எனவே சிறிய பாடசாலைகளை மூடுவது தவிர்க்கமுடியாதது என்று கல்வி அதிகாரிகள் தெரிவிக்கின்றார்கள். யப்பானில் ஒரு தொடருந்துப் பாதையில் ஒரே ஒரு பிள்ளை பாடசாலைக்குப் போக வேண்டும் என்பதற்காக ஒரு ரயில்வே ஸ்டேஷனை மூடாமல் வைத்திருப்பதாக ஒரு செய்தி உண்டு. அது யப்பானில். ஆனால் இலங்கையில் அதிலும் போரால் எல்லா விதத்திலும் பாதிக்கப்பட்ட தமிழ்ப் பகுதிகளில் மிகச் சில பிள்ளைகளுக்காக அளவுக்கு அதிகமான வளங்களைக் குவிப்பதற்கு கல்விக் கட்டமைப்பும் தயாரில்லை.

இவ்வாறு பாடசாலைகள் அதிகமாக மூடப்படக்கூடிய வாய்ப்புகளைக் கொண்ட பிரதேசங்களில் அதாவது பிள்ளைகளின் தொகை குறைவாக உள்ள பகுதிகளில் பிள்ளைகளை ஒரு மையத்தில் இணைத்து, வளங்களையும் ஒரு மையத்தில் இணைத்து, கொத்தணிப் பாடசாலைகளை உருவாக்கிய பின் அப்பாடசாலைகளை நோக்கி பிள்ளைகளை ஏற்றி இறக்குவதற்கு உரிய வாகன ஏற்பாடுகளை செய்யலாம் என்று ஓய்வுபெற்ற கல்வி நிர்வாகி ஒருவர் தெரிவித்தார்.

வனியா வடக்கு வலையத்தில் அவ்வாறு புலம்பெயர்ந்த தமிழ் அமைப்பு ஒன்றின் உதவியோடு வாகன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தீவுப் பகுதியில் சில ஆண்டுகளுக்கு முன் திறக்கப்பட்ட ஒரு கிறிஸ்தவப் பாடசாலையும் அவ்வாறு வாகனத்தை விட்டு ஊர் ஊராக பிள்ளைகளை ஏற்றி இறக்குகிறது. அதில் மத மாற்ற உள்நோக்கங்கள் இருப்பதாக ஒரு பகுதி இந்துக்கள் மத்தியில் சந்தேகங்கள்




"
தமது நாட்டிலேயே வாழ வேண்டும், தமது தாய் நிலத்தைக் கட்டியெழுப்ப வேண்டும், தனது அறிவையும் அனுபவத்தையும் தனது தாய் நிலத்துக்காக அர்ப்பணிக்க வேண்டும், தமது வேரிலே நிலைத்திருந்து தமது சமூகத்துக்குப் பூத்துக் காய்க்க வேண்டும் என்ற இலட்சியப் பற்றை இளைய தலைமுறைக்கு ஊட்டக் கூடிய எத்தனை தலைவர்கள் தமிழ் மக்கள் மத்தியில் உண்டு?

உண்டு. அதே சமயம் கோவில்களைப் புனரமைப்பதற்குக் கோடி கோடியாகச் செலவழிக்கும் பக்தர்களும் அறக்கட்டளைகளும் தமது ஊர்களில் உள்ள பிள்ளைகளை ஏற்றி இறக்குவதற்கு வாகன ஏற்பாடுகளையும் செய்யலாம்.

வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் மட்டும் 50 பாடசாலைகள் இதுவரை மூடப்பட்டு விட்டன,அவற்றில் பெரும்பாலானவை ஒரு காலகட்டத்தில் நவீன யாழ்ப்பாணத்தைச் செதுக்கிய கல்விச்சூழலைக் கட்டமைத்தவை.

கடந்த இரு நூற்றாண்டுகளில் யாழ்ப்பாணத்தில் கட்டப்பட்ட மிஷன் பாடசாலைகளுக்கு போட்டியாகவும் எதிராகவும் இந்து மறுமலர்ச்சியாளர்களும் அறக்கட்டளைகளும் கட்டியெழுப்பிய பாடசாலைகள் யாழ்பாணத்தின் மூலை முடுக்கெல்லாம் காணப்பட்டன.

ஊரின் ஒரு பகுதியில் ஓர் அமெரிக்க மிஷன் பாடசாலை அல்லது ரோமன் கத்தோலிக்க பாடசாலை காணப்படுமாக இருந்தால் அதற்குப் போட்டியாக சற்றுத் தள்ளி ஒரு சுதேச பாடசாலை கட்டப்படும். அதற்கு சரஸ்வதி, சன்மார்க்கா, சைவப்பிரகாசா என்று ஏதாவது ஒரு இந்து மதம் சார்ந்த பெயர் வைக்கப்படும். ஊருக்குள் குறுகிய தூரத்தில் இவ்வாறு பாடசாலைகள் கட்டப்படுகையில் பெற்றோர் தங்கள் பிள்ளைகளை அங்கே போய்ப் படிக்குமாறு உந்தித் தள்ளினார்கள். இவ்வாறு போட்டிக்குப் பள்ளிக்கூடம் கட்டும் ஒரு போக்கின் விளைவாகவும்தான் நவீன யாழ்ப்பாணம் மேலெழுந்தது.

இனப்பிரச்சினைக்கு அமெரிக்க மிஷனும் ஒருவிதத்தில் காரணம் என்று முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி கூறியிருக்கிறார். அரசாங்கம் தரப்படுதலை அறிமுகப்படுத்திய பொழுது அதனைத் தமிழர்கள் இன ஒடுக்குமுறையாக வியாக்கியானப்படுத்தினார்கள் என்ற பொருள்பட அவருடைய விளக்கம் அமைந்திருந்தது. மிஷன் பாடசாலைகளின் உழைப்பினால் யாழ்ப்பாணத்தில் கல்வி கற்றவர்களின் தொகை அளவுப் பிரமாணத்தைவிட அதிகமாக இருந்தது என்று அவர் விளங்கி வைத்திருந்திருக்கக் கூடும்.

இவ்வாறு போட்டிக்கு கட்டப்பட்ட பாடசாலைகளில் ஒருபகுதி இப்பொழுது மூடப்பட்டு வருகின்றது. கந்தர்மடத்தில் ஒரு பாடசாலை. சைவப்பிரகாசா வித்தியாசாலை. இந்த பாடசாலைக்கு ஈழப் போர் வரலாற்றில் முக்கியத்துவம் உண்டு. 1983ஆம் ஆண்டு நடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இந்த பாடசாலை ஒரு வாக்களிப்பு நிலையமாக இருந்தது. அங்கே காவலுக்கு நின்ற படை வீரர்கள் மீது விடுதலைப் புலிகள் இயக்கம் தாக்குதல் நடத்தியது. அதில் சிப்பாய்கள் கொல்லப்பட்டார்கள். ஈழப் போரில் முதல்முதலாக ஒரு ரைஃபிள் கைப்பற்றப்பட்ட தாக்குதல் அது. அந்தப் பாடசாலையின் கழிப்பறைச் சுவரில் அந்தச் சுவரைத் தாண்டிக் குதித்துத் தப்ப முயன்ற ஒரு சிப்பாயின் ரத்தத்தில் தோய்ந்த கை அடையாளங்கள் பதிந்திருந்தன. அந்தப் பாடசாலை சில ஆண்டுகளுக்கு முன்னர் மூடப்பட்டு விட்டது.

தமிழ் மக்கள் தமது ஜனத்தொகை தொடர்பாக சிந்திக்க வேண்டிய கால கட்டம் எப்பொழுதோ வந்து விட்டது. ஒன்றுக்கு மேற்பட்ட பிள்ளைகளைப் பெறுமாறு குடும்பங்களை ஊக்குவிக்க வேண்டிய காலம் எப்பொழுதோ வந்து விட்டது. அவ்வாறு அதிகம் பிள்ளைகளைப் பெறும் குடும்பங்களுக்கு ஊக்குவிப்புத் தொகையைக் கொடுக்கத் தேவையான கட்டமைப்புகளை தமிழ் மக்கள் உருவாக்க வேண்டும். அரசற்ற தரப்பாகிய தமிழ் மக்கள் இந்த விடயத்தில் புலம்பெயர்ந்த தமிழர்களை எவ்வாறு ஒருங்கிணைக்கலாம் என்றும் சிந்திக்கலாம்.

கல்வித்துறையில் புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகம் தாராளமாக உதவி வருகிறது. பல தனிநபர்களும் தன்னார்வ நிறுவனங்களும் பரவலாகத் தொண்டு செய்து வருகிறார்கள். தாம் படித்த பாடசாலையை மேம்படுத்த வேண்டும் என்று தாகத்தோடு பழைய மாணவர்கள் பல பாடசாலைகளுக்கு காசை அள்ளி வழங்குகிறார்கள். தமது கிராமத்தின் கல்வி நிலையை மேம்படுத்துவதற்காக தமது முகத்தைக் காட்டாமலேயே அமைதியாக உதவிகளை செய்து கொண்டிருக்கும் பலரை நான் அறிவேன்.

புலம்பெயர்ந்த தமிழர்கள் சிலர் பாடசாலைகளில் பழைய மாணவர் சங்கங்களின் மீது அளவுக்கு மிஞ்சி செல்வாக்கு செலுத்துவதும் அங்கே குழப்பங்களை ஏற்படுத்துவதும் தொடர்பான குற்றச்சாட்டுகள் உண்டுதான். ஆனால் போர்க்காலத்திலும் 2009க்குப் பின்னரும் ஈழத் தமிழர்கள் மத்தியில் குறிப்பாக கல்வித்துறையில் புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகத்தின் உதவி மகத்தானது.

அதேசமயம் புலப் பெயர்ச்சி தொடர்ந்து நிகழ்திறது. தமது முதல் பட்டப்படிப்பை முடித்த பலருக்கும் புலப்பெயர்ச்சிதான் அடுத்த கவர்ச்சியான தெரிவாகக் காணப்படுகிறது. புலம்பெயர்ந்த தமிழர்களின் வாழ்க்கை ஒரு பகுதி இளையோருக்கு கவர்ச்சியான முன் உதாரணமாக மாறிவிட்டது. இதனால் தொடர்ச்சியாக புலப்பெயர்ச்சி நிகழ்ந்து கொண்டேயிருக்கிறது. இதுவும் தமிழ்ச் சனத்தொகையைக் குறைக்கின்றது.


தமது நாட்டிலேயே வாழ வேண்டும், தமது தாய் நிலத்தைக் கட்டியெழுப்ப வேண்டும், தனது அறிவையும் அனுபவத்தையும் தனது தாய் நிலத்துக்காக அர்ப்பணிக்க வேண்டும், தமது வேரிலே நிலைத்திருந்து தமது சமூகத்துக்குப் பூத்துக் காய்க்க வேண்டும் என்ற இலட்சியப் பற்றை இளைய தலைமுறைக்கு ஊட்டக் கூடிய எத்தனை தலைவர்கள் தமிழ் மக்கள் மத்தியில் உண்டு? இதனால் சனத்தொகை மேலும் குறைந்துகொண்டே போகிறது.

கடந்த நாடாளுமன்ற தேர்தலில் யாழ்ப்பாணத்துக்கு ஒரு ஆசனம் குறைந்து விட்டது. இவ்வாறாக சனத்தொகை வீழ்ச்சியின் பின்னணியில், ஒரு காலம் போட்டிக்கு பாடசாலைகளைக் கட்டிய ஒரு சமூகம் இப்பொழுது பாடசாலைகளை மூடிக்கொண்டிருக்கிறது. சில மாதங்களுக்கு முன்பு தேசிய அபாயகரமான ஔடதங்கள் சபை அதிகாரிகளுடனான சந்திப்பின்போது வட மாகாண ஆளுநர் ஒரு விடயத்தைப் பரிந்துரைத்திருந்தார். வடக்கில் போதைப்பொருள் புனர்வாழ்வு மையங்களை உருவாக்குவதற்கு போதிய இடவசதிகள் இல்லையென்றால் அவசரத் தேவைக்கு ஏற்கனவே மூடப்பட்டுள்ள பாடசாலைகளில் பொருத்தமானவற்றை பயன்படுத்தலாமா என்ற பொருள்பட அப்பரிந்துரை அமைந்திருந்தது. ஒரு காலம் போட்டிக்குப் பாடசாலைகளைக் கட்டிய ஒரு சமூகத்தில் இப்பொழுது போதைப்பொருளுக்கு அடிமையானவர்களை பராமரிப்பதற்கு கைவிடப்பட்ட பாடசாலைகள் பரிந்துரைக்கப்படும் ஒரு நிலை?.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச் சீர்திருத்த முன்மொழிவுகளில் சிறிய பாடசாலைகளின் எதிர்காலம்?

கந்தையா அருந்தவபாலன்



தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்மொழிந்துள்ள பாடசாலைக் கல்விக்கான புதிய சீர்திருத்தங்கள் அடுத்த கல்வியாண்டிலிருந்து படிப்படியாக நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்தச் சீர்திருத்தங்களுள் சிறிய பாடசாலைகளை மூடுதல் அல்லது ஒன்றிணைத்தல் என்பது முக்கியமானதொரு முன்மொழிவாக உள்ளது. அத்துடன் தேசியப்பாடசாலைகள் தவிர்ந்த ஏனையவற்றை கொத்தணிப் பாடசாலைகளாகக் கட்டமைப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் கல்விக்கட்டமைப்பில் தற்போது சிறிய பாடசாலைகள் பல்வேறு விடயங்களில் பிரச்சினைக்குரியவையாக மாறி வருகின்றன. இங்கு சிறிய பாடசாலைகள் என்று குறிப்பிடப்படுபவை மிகக்குறைந்த எண்ணிக்கையிலான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளாகும். முன்னர் கிராமிய மற்றும் புறநகர் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பெரிதும் உறுதுணையாக இருந்த இப்பாடசாலைகள் பலவும் இன்று தேடுவாரற்றதொரு நிலைக்கு மாறிவிட்டன. 2023 ஆம் ஆண்டில் நாட்டில் இதுபோன்ற 94 பாடசாலைகளில் தரம் ஒன்றுக்கு எந்தவொரு பிள்ளையும் சேரவில்லை என்பது இப்பாடசாலைகளின் இன்றைய நிலையை எடுத்துக்காட்டும். மேலும் நூற்றுக்கணக்கான பாடசாலைகளில் பத்துக்கும் குறைவான பிள்ளைகளே அவ்வாண்டில் தரம் ஒன்றில் இணைந்திருந்தனர். இவ்வாறான பாடசாலைகளால் மாணவர்களின் கல்வித்தரம் பாதிப்படைவது மட்டுமன்றி, ஆசிரியர், மாணவர் உளநலப் பாதிப்பு, வளங்களின் வீண்விரயம், அரச செலவு அதிகரிப்பு போன்ற பல பிரச்சினைகள் எழுகின்றன. இவற்றைக் கருத்திற் கொண்டே இவ்வாறான பாடசாலைகளை மூடுவதற்கும், ஒன்றிணைப்பதற்கும், மீளமைவிடங்களுக்கு நகர்த்துவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்நிலைமைக்காரண காரணங்கள் எவை? இதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் யாவை?

நாடு முழுவதிலுமுள்ள பத்தாயிரத்துக்கு மேற்பட்ட அரசபாடசாலைகளில் 115 பாடசாலைகளில் பத்துக்கும் குறைவான மாணவர்கள் உள்ளனர். 50 மாணவர்களுக்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள் 1506. இது மொத்தப்பாடசாலைகளில் 15 வீதமாகும். அத்துடன் 3144 பாடசாலைகளில் 100 இலும் குறைவான பிள்ளைகளே உள்ளனர். இது மொத்தப் பாடசாலை எண்ணிக்கையில் கிட்டத்தட்ட மூன்றிலொரு பங்காகும். இதைவிடக் கூடுதலான பாதக நிலைமை வடமாகாணத்தில் காணப்படுகின்றது. வடக்கிலுள்ள 982 பாடசாலைகளில் 35 இல் பத்துக்கும் குறைவான மாணவர்களே உள்ளனர். அதேபோல 11-20 இடையில் 64 பாடசாலைகளும், 20-50 இடையில் 171 பாடசாலைகளும், 50-100 இடையில் 174 காடசாலைகளும் உள்ளன. இந்த வகையில் வடக்கில் 100 இற்கும் குறைவான மாணவர் எண்ணிக்கையைக் கொண்ட பாடசாலைகள் எண்ணிக்கை 444 ஆகும். இது கிட்டத்தட்ட மொத்தப்பாடசாலைகளில் 50 வீதத்துக்கும் சற்றுக் குறைவானதொரு அளவாகும். நாட்டில் 100 இலும் குறைந்த மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள் கிட்டத்தட்ட 31 வீதமாகவிருக்கும்போது அது வடக்கில் 45 வீதமாக உள்ளது. இதற்கான காரணங்கள் எவை?

> **பிள்ளைகளுக்கான சிறந்த கல்வி என்பது ஒரு கூட்டு முயற்சி. இதைக் குடும்பம், பாடசாலை, சமூகம் என்பன இணைவதன் மூலமே பெறமுடியும். ஆனால் இன்று குடும்பமும் சமூகமும் தமது பொறுப்பை முழுமையாகப் பாடசாலைகள் மீது சுமத்திவிட்டு தப்ப முயற்சிக்கின்றன.**

நாடு முழுமைக்குமாக பிறப்பு வீதவீழ்ச்சி, மாணவர்கள் கிராமத்திலிருந்து நகரப்பாடசாலைகளுக்கும், நகரத்திலிருந்து மாநகரப் பாடசாலைகளுக்கும் நகர்தல், நகர - மாநகரப் பாடசாலைகளின் வீக்கம்,மக்களின் புலப்பெயர்வு, சர்வதேசப் பாடசாலைகளின் வளர்ச்சி போன்ற பலகாரணிகள் இந்நிலைமையைத் தோன்றுவித்துள்ளன. இந்நிலைமைகள் யாவும் வடக்குக்கும் பொருந்தும் என்பதுடன் மேலும் சில சிறப்புக் காரணிகளும் உள்ளன. குறிப்பாக நீண்டகால யுத்தமும் உயிரிழப்புகளும், செங்குத்தான புலப்பெயர்வு போன்றன வடக்குக்கான சிறப்புக் காரணிகளில் முக்கியமானவை.

இலங்கையின் சனத்தொகைக் கட்டமைப்பு வளர்ச்சியடைந்த நாடொன்றுக்கு இணையானதாக கடந்த சில தசாப்தங்களாகவே இருந்து வருகிறது. பிறப்பு, இறப்பு வீத வீழ்ச்சி, சனத்தொகை வளர்ச்சி 0-1 வீத இடையில் இருந்து வருதல், அதனால் பிள்ளைகள் மற்றும் ஆற்றலுள்ள குடித்தொகையின் அளவு குறைதலும் முதியோர் எண்ணிக்கை அதிகரித்தலும் இதன் பொதுவான இயல்புகளாகும். அண்மிய ஆண்டுகளில் இலங்கையின் சனத்தொகை வளர்ச்சி வீதம் சராசரி 0.5 வீதம் ஆகும். 2023 இல் இது எதிர்க்கணியமாகவும் இருந்தது குறிப்பிடத்தக்கது. பிறப்பு வீதத்தில் ஏற்பட்டு வரும் வீழ்ச்சியே இதற்கான பிரதான காரணம். இது தலைமுறை மாற்றத்தின் விளைவு. ஒருகாலத்தில் ஒருவருக்கு 8-10 பிள்ளைகளாக இருந்து அது 5-6 ஆகக் குறைந்து அது மேலும் 3-4 ஆகக் குறைந்து இன்று 1-2 ஆக உள்ளது. எதிர்காலத்தில் இதில் மேலும் வீழ்ச்சியை எதிர்பார்க்க முடியும். இதனால் பாடசாலைகளில் இணைந்து கொள்ளும் பிள்ளைகளின் எண்ணிக்கை குறைவது ஆச்சரியமான விடயமல்ல.

நாட்டின் பிறப்புவீத வீழ்ச்சியின் தாக்கம் நாட்டின் சகல பாடசாலைகளின் மாணவர் எண்ணிக்கையிலும் வீழ்ச்சியைப் பதிவு செய்திருக்க வேண்டும் ஆனால் அவ்வாறு இல்லை. ஒருபுறத்தில் சிறிய மற்றும் நடுத்தர பாடசாலைகளில் மாணவர் எண்ணிக்கை வீழ்ச்சியடைய நகர மற்றும் மாநரப் பிரபல பாடசாலைகளில் மாணவர் எண்ணிக்கை கணிசமான உயர்வைப் பதிவு செய்து வருகிறது. நாட்டில் மூன்றிலொரு பங்கு பாடசாலைகளில் 100 க்கும் குறைவாக மாணவர் இருக்கும் அதேவேளை 3000 க்கும் மேற்பட்டளவு மாணவரைக் கொண்ட 105 பாடசாலைகளும் இங்குதான் இருக்கின்றன. 3000-4000 இடைப்பட்ட மாணவர் எண்ணிக்கையைக் கொண்ட 73 பாடசாலைகளும் 4000 மேற்பட்ட எண்ணிக்கையைக் கொண்ட 32 பாடசாலைகளும் நாட்டில் உள்ளன. கிட்டத்தட்ட 4 இலட்சம் மாணவர்கள் அதாவது மொத்த மாணவர் தொகையில் 10 வீத மாணவர்கள் மொத்தப் பாடசாலைகளில் 1 வீதமான பாடசாலைகளில் குவிக்கப்பட்டுள்ளனர். நவோதய, மத்திய, தேசிய பாடசாலைகள் என அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலைகளாகத் தரமுயர்த்தப்பட்டு வளங்கள் அதிகரிக்கப்பட்டபோதிலும் 15- 20 கிலோ மீற்றருக்கு அப்பாலுள்ள பாடசாலகளுக்கு மாணவரை ஏற்றுமதி- இறக்குமதி செய்வதில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. இங்கு மாநகரம் நகரத்தைச் சுரண்ட நகரம் கிராமத்தைச் சுரண்டும் நிலையே காணப்படுகிறது. இதில் அதிகளவு கவலைப்படவேண்டிய விடயம் என்னவெனில் ஆரம்பப் பிரிவுகளுக்கான மாணவர்களைக்கூட அவர்களின் தூக்கம் சரியாகக் கலையாத நிலையில் பெற்றோர்கள் பாடசாலை வாகனங்களில் ஏற்றி அனுப்புவதுதான்.

இவ்வாறு ஒருபுறத்தில் கிராமங்களிலிருந்து நகரங்களுக்கும் நகரங்களிலிருந்து மாநகரத்துக்கும் மாணவர்கள் ஓட மறுபுறத்தில் அரசபாடசாலைகளைப் புறமொதுக்கி கணிசமான மாணவர்கள் சர்வதேசப் பாடசாலைகளை நோக்கி ஓடுவதும் அதிகரித்து வருகிறது. நாட்டில் அண்மைக்காலத்தில் பரவலாக மூலை முடுக்கெல்லாம் சர்வதேசப் பாடசாலைகள் முளைத்து வருவதுடன் அவை குறிப்பிடத்தக்கவகையில் வளர்ந்தும் வருகின்றன. எடுத்துக்காட்டாக தெரிந்தெடுத்த சில நகரங்களில் மட்டும் தனது கிளைகளைக் கொண்ட லைசியம் சர்வதேசப் பாடசாலையில் மட்டும் தற்போது 25000 மாணவர்கள் கல்வி கற்று வருகிறார்கள். பிறப்பு வீத வீழ்ச்சியினால் மாணவர் எண்ணிக்கை இயல்பாக மட்டுப்படுத்தப்படும் அதேவேளை நகர, மாநகர பிரபல பாடசாலைகளில் மாணவர் வீக்கம், சர்வதேசப் பாடசாலைகளின் வளர்ச்சி என்பன சிறிய பாடசாலைகளின் எண்ணிக்கையைப் பெரியதாக்குகின்றன.

சிறிய பாடசாலைகளின் பெருக்கம் பௌதிக வளங்களில் மட்டுமன்றி ஆசிரிய வளத்தையும் வீண் விரயமாக்குவதுடன் அப்பாடசாலகளில் கற்கும் மாணவர்களின் கல்வித்தரத்திலும் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. எடுத்துக் காட்டாக நாட்டில் சராசரியாக ஒரு ஆசிரியருக்கு 16.3 மாணவர்கள் என்ற விகிதம் நிலவும் போது சிறிய பாடசாலைகளில் அது 4-10 ஆகக் காணப்படுகிறது. நாட்டிலுள்ள 450 சிறிய பாடசாலைகளில் ஆசிரிய- மாணவ விதம் 4 ஆக உள்ளது. சில பாடசாலைகளில் 4 மாணவர்க்கு 4 ஆசிரியர் உள்ளனர். ஏனைய மாவட்டங்களைவிட வடக்கில் இவ்விகிதம் இன்னும் குறைவாக உள்ளதையும் காணமுடிகிறது. அதிலும் குறிப்பாக நாட்டில் யாழ்ப்பாண மாவட்டத்திலேயே அதிகுறைந்த விகிதம் உள்ளது. இம்மாவட்டத்தில் 11 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர். அதேபோல மன்னார், வவுனியா, முல்லைத்தீவில் தலா 12 ஆகவும் கிளிநொச்சியில் 14 ஆகவும் இவ்விகிதம் உள்ளது.

இந்நிலையில் சிறிய பாடசாலைகளை மீள் கட்டமைப்புச் செய்வது அதாவது மூடுதல், இணைத்தல், அமைவிடத்தை மாற்றுதல் என்பன தவிர்க்க முடியாத ஒன்றாகும். அரச செலவுகளைக் கட்டுப்படுத்துவது என்பது இதற்கான முக்கிய காரணிகளில் ஒன்று என்றாலும் வேறு பல நியாயமான காரணங்களும் உள்ளன. இந்தவகையில் நாட்டில் 3000 பாடசாலைகள் மூடப்படுவதற்கான ஏதுநிலைகள் காணப்படுகின்றன. இதனுள் வடக்கில் குறைந்தது 70 பாடசாலைகள் உள்ளன. 600-700 மாணவர்களைக் கொண்ட பிரபல ஆரம்பப் பாடசாலையிலிருந்து 200-300 மீற்றருக்குள் 10-12 மாணவர்களுடன் இயங்கும் பாடசாலைகளும் இங்குண்டு. இதனால் சிறிய பாடசாலைகள் மூடப்படுவது தவிர்க்க முடியாததொன்றாக உள்ளது. ஏலவே இவ்வாறான பல பாடசாலைகள் செயலிழந்துவிட்டன. நாட்டில் கடந்த ஆண்டில் மட்டும் 100 பாடசாலைகள் பிள்ளைகள் இல்லாது தாமாகவே தமது கதவை மூடிவிட்டன.

பிரச்சினைகளுக்குரிய சிறிய பாடசாலைகள் மூடப்படுவதோ அல்லது ஒன்றிணைப்பதோ தவறானதன்று. ஆனால் அவ்வாறான பாடசாலைகளில் தற்போது கல்வி கற்றுவரும் எந்தவொரு பிள்ளையினதும் கல்வி நடவடிக்கைகள் எந்தவகையிலும் பாதிக்கப்படக்கூடாது என்பது

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய - அமெரிக்க வரி முட்டுக்கட்டை: புதுடில்லியின் தெரிவுகளும் ஆபத்துகளும்

இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான வர்த்தகப் பேச்சுவார்த்தைகளில் இன்னமும் மூன்று வாரங்களில் உடன்பாடு ஒன்று காணப்படாவிட்டால், இந்திய இறக்குமதிப் பொருட்கள் மீது 50 சதவீத வரி விதிக்கப்பட்டிருக்கும் நிலையில், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் வர்த்தகத் தாக்குதலினால் படுமோசமாகப் பாதிக்கப்படும் நாடுகளில் ஒன்றாக இந்தியா விளங்கும் ஆபத்து இருக்கிறது.

**மேலும் பேச்சுவார்த்தை**


ட்ரம்ப் நிருவாகத்துடன் வர்த்தக உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடக்கூடிய முதல் நாடுகளில் ஒன்றாக இந்தியா விளங்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், இந்தியாவின் பண்ணை மற்றும் பால் உற்பத்தித்துறையை திறந்துவிடுவது மற்றும் ரஷ்ய எண்ணெய் கொள்வனவு தொடர்பாக ஏற்பட்ட முரண்பாடுகள் ஐந்து சுற்றுகளுக்கு பிறகு பேச்சுவார்த்தைகள் தோல்வி கண்டன.

இந்தியாவில் இருந்து அமெரிக்காவில் இறக்குமதியாகும் பொருட்களுக்கு 50 சதவீத வரி விதிக்கப்பட்டதை இந்தியா மிகவும் கடுமையாக ஆட்சேபித்திருக்கிறது. இந்த வரிவிதிப்பினால் வர்த்தகம் முடங்கி விடக்கூடும். என்றாலும், அந்தரங்க மான பேச்சுவார்த்தைகளில் சில வேறுபாடுகளுக்கு தீர்வைக் காணலாம் என்று இந்திய அதிகாரிகள் நம்பிக்கை கொண்டவர்களாக இருக்கிறார்கள். அமெரிக்க வர்த்தகக் குழு ஒன்று இம்மாத இறுதியில் இந்திய தலைநகருக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படு கிறது.

ஆனால், பிரதமர் நரேந்திர மோடி கடந்த வியாழக்கிழமை (வரிகள் பற்றி எதையும் குறிப்பிடாமல்) நாட்டின் விவசாயிகள், பண்ணைத்துறை மற்றும் மீனவர்களின் நலன்களை விட்டுக் கொடுக்காதமைக்காக "பாரிய விலையைச் செலுத்துவதற்கு" தயாராயிருப்பதாக கூறினார். ஆனால், வாதுமைப் பருப்பு மற்றும் பாலாடைக்கட்டி போன்ற சில அமெரிக்க பண்ணை, பால் உற்பத்தித்துறை பொருட்களுக்கான வரிகளைக் குறைப்பதற்கு தயாராயிருப்பதாக இந்திய அதிகாரிகள் அறிவித்திருக்கிறார்கள்.

**ரஷ்ய எண்ணெய் இறக்குமதிகளை குறைத்தல்**

உலகின் மூன்றாவது மிகப்பெரிய எண்ணெய் இறக்குமதி மற்றும் பாவனை நாடான இந்தியா, தடைவிதிப்புகள் அல்லது வேறு காரணங்களின் விளைவாக



ரஷ்யாவில் இருந்து எண்ணெயை இறக்குமதி செய்வது நடைமுறைச் சாத்தியம் இல்லாமல் போகுமானால், மாற்று மூலங்களில் இருந்து தேவைகளை நிறைவேற்ற முடியும் என்று நம்பிக்கை கொண்டிருப்பதாக முன்னர் கூறியது. 2022 ஆம் ஆண்டில் தொடங்கிய உக்ரெயின் போருக்கு முன்னர் ரஷ்ய எண்ணெயை சிறியளவிலேயே இந்தியா வாங்கியது. ஆனால், இந்தியா அதன் பழைய வர்த்தக, பாதுகாப்பு பங்காளி நாடான ரஷ்யாவிடமிருந்து அதன் எண்ணெய் இறக்குமதியில் மூன்றில் ஒன்றுக்கும் கூடுதலான பங்கை இப்போது பெறுகிறது.

இந்தியன் ஓயில், இந்துஸ்தான் பெற்றோலியம், பாரத் பெற்றோலியம் மற்றும் மங்களூர் பெற்றோ கெமிக்கல் போன்ற இந்திய அரச எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனங்கள் விலைக்கழிவு குறைந்துவிட்ட காரணத்தாலும் ட்ரம்பிடமிருந்து நெருக்குதல் அதிகரித்தாலும் ரஷ்ய எண்ணெயை வாங்குவதை நிறுத்தியதாக கடந்த மாத பிற்பகுதியில் ராய்ட்டர்ஸ் செய்திச் சேவை அறிவித்தது ஆனால், ரஷ்ய எண்ணெய் சந்தையில் இல்லாவிட்டால், உலகில் பொருட்களின் விலைகள் அதிகரிக்கும் என்று அதிகாரிகள் எச்சரிக்கை செய்தனர்.

ரஷ்யாவைத் தவிர, ஈராக், சவூதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் ஆகியவை இந்தியாவுக்கான பெரிய எண்ணெய் விநியோக நாடுகளாக விளங்குகின்றன. ஒவ்வொரு மாதமும் கூடுதலான விநியோகத்துக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டால் அதை நெகிழ்வுத்தன்மையுடன் பரிசீலிக்கக்கூடிய ஏற்பாடுகளுடன் வருடாந்த உடன்படிக்கையின் கீழ் இந்த நாடுகள் இந்தியாவுக்கு எண்ணெயை விநியோகிக்கின்றன. ஒட்டு மொத்தத்தில் அமெரிக்கா உட்பட சுமார் 40 நாடுகளிடமிருந்து இந்தியா எண்ணெயை வாங்குகிறது.

**வளரும் நாடுகளுடன் ஒன்றுபடுதல்**

இந்தியாவுடன் சேர்த்து ட்ரம்பின் வரிகளின் மற்றைய பெரிய இலக்காக பிரேசில் இருக்கிறது. சீனா, ரஷ்யா மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளையும் உள்ளடக்கிய "பிறிக்ஸ்" அமைப்பில் இந்தியாவும் பிரேசிலும் அங்கம் வகிக்கின்றன. அந்த அமைப்பின் தற்போதைய தலைவராக இருக்கும் பிரேசில் ஜனாதிபதி லாயிஸ் இனாசியோ லூலா டி சில்வா, அமெரிக்க வரிவிதிப்புகள் தொடர்பிலான பிறிக்ஸின் பிரதிபலிப்பு குறித்து வியாழக்கிழமை மோடியுடனும் அடுத்து சீனாவின் சி ஜின்பிங் மற்றும் ஏனைய தலைவர்களுடன் பேசியதாக ராய்ட்டர்ஸுக்கு கூறினார்.

அமெரிக்காவுடன் உறவுகளைச் சீர்செய்ய வேண்டிய தேவை இந்தியாவுக்கு இருக்கின்ற அதேவேளை, ஆபிரிக்க ஒன்றியம், பிறிக்ஸ் உட்பட ட்ரம்பின் வரிவிதிப்பினால் மோசமாகப் பாதிக்கப்படுகின்ற ஏனைய நாடுகளுடன் கூடுதலான அளவுக்கு பேச்சுவார்த்தைகளை நடத்தப்போவதாக இந்திய அரசாங்க வட்டாரம் ஒன்று கூறியது. ரஷ்யாவுடனும் சீனாவுடனும் ஏற்கெனவே இந்தியா சில சந்திப்புக்களை நடத்தியிருக்கிறது.

இவ்வருடம் பிற்பகுதியில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் புதுடில்லிக்கு செய்யவிருப்பதாக எதிர்பார்க்கப்படும் விஜயத்துக்கு முன்னதாக இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மாஸ்கோவுக்கு சென்றிருந்தார். வெளியுறவு அமைச்சரும் அங்கு போகிவிருக்கிறார். "சிறப்புரிமைக்குரிய மூலோபாய கூட்டுப் பங்காண்மை" (Privileged strategic partnership) ஒன்றின் வடிவில் பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து இரு நாடுகளும் ஆராய்ந்திருப்பதாக வியாழக்கிழமை ரஷ்யா கூறியது.

2020 ஆம் ஆண்டில் எல்லையோரத்தில் இடம்பெற்ற மோசமான மோதலைத் தொடர்ந்து பல வருடங்களாக நிலவிய பதற்ற நிலையில் ஒரு மாற்றமாக, இந்தியா சீனாவுடனும் ஊடாட்டங்களை மேம்படுத்தியிருக்கிறது. பிராந்திய பாதுகாப்பு மகாநாடொன்றுக்காக சில வாரங்களில் மோடி சீனாவுக்கு விஜயம்

(14ஆம் பக்கம் பார்க்க)

# இஸ்ரேலை இனிமேலும் நிபந்தனையற்ற முறையில் ஆதரிக்க முடியாத நிலையில் மேற்கு நாடுகள்!

ஸ்ரான்லி ஜொனி

இஸ்ரேல் காசாவில் போர்நிறுத்தம் ஒன்றுக்கு இணக்கி, பெருமளவு மனிதாபிமான உதவிகள் செல்வதற்கு அனுமதிக்காவிட்டால், இரு அரசுகள் விதிமுறையின் அடிப்படையில் நீண்டகால சமாதானம் நோக்கிச் செயற்படுவதில் உறுதிப்பாட்டை காண்பிக்காவிட்டால், எதிர்வரும் செப்டெம்பரில் ஐக்கிய நாடுகள் பொதுச்சபை கூட்டத்தொடரில் தனது அரசாங்கம் பாலஸ்தீனத்தை அங்கீகரிக்கும் என்று பிரிட்டிஷ் பிரதமர் கெய்ர் ஸ்ராமெர் கடந்தவாரம் அறிவித்தார்.

செப்டெம்பரில் பாலஸ்தீனத்தின் அரசு அந்தஸ்தை பாரிஸ் அங்கீகரிக்கும் என்று பிரெஞ்சு ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் பிரகடனம் செய்த சில தினங்களில் ஸ்ராமெரின் அறிவிப்பு வந்தது. தங்களுக்கும் அதே நோக்கம் இருப்பதாக கனடாவும் போர்த்துக்கலும் கூட அறிவித்தன.

காசாவில் 21 மாதகால போர் தொடர்ந்து கொண்டிருக்கும் நிலையில், இஸ்ரேல் அதன் மிகப்பெரிய இராஜதந்திர நெருக்கடிகளில் ஒன்றுக்கு முகங்கொடுக்கிறது. இஸ்ரேலின் பாரம்பரியமான நேச அணிகளான மேற்குலகின் பல நாடுகள் பாலஸ்தீனத்தின் அரசு அந்தஸ்து தொடர்பில் அனுகூலமான நிலைப்பாடுகளை கடைப்பிடிக்கத் தொடங்கியிருக்கின்றன.

ஐக்கிய நாடுகள் சபையின் 193 உறுப்பு நாடுகளில். 147 நாடுகள் ஏற்கெனவே பாலஸ்தீன அரசை அங்கீகரித்துவிட்டன. இதுவரை பலம் பொருந்திய மேற்கு நாடுகள் அவ்வாறான அங்கீகாரத்தை எதிர்த்து வந்தன. இஸ்ரேல் - பாலஸ்தீன முரண்நிலைக்கு காணப்படக்கூடிய இறுதி இராஜதந்திர தீர்வின் ஒரு அங்கமாகவே அத்தகைய அங்கீகாரம் அமையவேண்டும் என்று அந்த நாடுகள் காரணமும் கூறின. ஆனால், அந்த நிலைப்பாடு தற்போது மாற்றமடையத் தொடங்கியிருக்கிறது.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகளில் ரஷ்யாவும் சீனாவும்





ஏற்கெனவே பாலஸ்தீனத்தை அங்கீகரித்துவிட்டன. பிரான்ஸும் ஐக்கிய இராச்சியமும் தற்போது அறிவித்திருப்பதன் பிரகாரம் செப்டெம்பரில் பாலஸ்தீனத்தை அங்கீகரித்தால், இஸ்ரேலின் நெருங்கிய நேச அணியும் காப்பாளருமான அமெரிக்கா பாதுகாப்புச் சபையில் தனிமைப் படுத்தப்பட்டுவிடும். முன்னேறிய பொரு ளாதார நாடுகளின் ஜி - 7 குழுவின் உறுப்பினர்களாகவும் இருக்கும் பிரான்ஸும் ஐக்கிய இராச்சியமும் பாலஸ் தீனத்தை அங்கீகரித்தால், அது ஏனைய நாடுகள் மீது செல்வாக்கைச் செலுத்தி அவையும் அங்கீகரிக்கக் கூடும்.

குறிப்பாக, இஸ்ரேல் - பாலஸ்தீன பிரச்சினையில் பிரிட்டனுக்கு இருக்கின்ற மையப் பாத்திரத்தை அடிப்டையாகக் கொண்டு நோக்கும்போது அதன் நகர்வு வரலாற்று ரீதியான கனதியைக் கொண்டிருக்கிறது. 1917 பல்ஃபோர் பிரகடனத்தில், பாலஸ்தீனத்தில் யூத தாயகம் ஒன்றை நிறுவ வேண்டும் என்ற சியோனிசவாதிகளின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட முதலாவது பெரிய வல்லரசு பிரிட்டனேயாகும்.

**பல்ஃபோர் பிரகடனம் என்றால் என்ன?**

பிரிட்டனின் வெளியுறவு அமைச்சரான சேர் ஆர்தர் பல்ஃபோர் 1917 நவம்பர் 2 ஆம் திகதி பிரகடனத்தை வெளியிட்டு அதை பிரிட்டிஷ் யூத சமூகத்தின் தலைவரும் சியோனிசவாதியுமான வோல்டர் றொத்சைல்டுக்கு அனுப்பினார். முதலாவது உலகப் போருக்கு மத்தியில் எழுதப்பட்ட அந்த கடிதத்தில் பல்ஃபோர் பின்வருமாறு குறிப்பிட்டார்.

"யூத மக்களுக்காக பாலஸ்தீனத்தில் தேசிய தாயகம் ஒன்று அமைக்கப்படுவதை மாட்சிமை தங்கிய மன்னரின் அரசாங்கம் அனுகூலமான முறையில் நோக்குவதுடன் அந்த குறாக்கோள் சாதிக்கப்படுவதற்கு வசதியாக அதனால் இயன்ற முயற்சிகளைச் செய்யும்."

ஐரோப்பாவில் இருந்த யூதர்கள் ஏற்கெனவே பாலஸ்தீனத்துக்கு புலம்பெயரத் தொடங்கி விட்டார்கள். 19 ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் முதலாவது உலகப் போரின் முடிவு வரை, பாலஸதீனம் ஒட்டோமன் சாம்ராச்சியத்தின் ஒரு பகுதியாகவே இருந்தது. பல்ஃபோர் பிரகடனம் செய்யப்பட்ட நேரமளவில் பாலஸ்தீனத்தில் சுமார் 60 ஆயிரம் யூதர்கள் (மொத்த சனத்தொகையில் 9 சதவீதத்துக்கும் அதிகமானவர்கள்) இருந்தார்கள். "யூதப் பிரச்சினைக்கு" ஒப்பேறக்கூடிய ஒரே தீர்வு பாலஸ்தீனத்தில் தேசிய தாயகம் ஒன்றை அமைப்பதேயாகும் என்று சியோனிசத் தலைவர்கள் வாதிட்டனர்.

**போருக்கு பின்னர் பிரிட்டன் என்ன செய்தது?**

"பாலஸ்தீனத்தில்" யூத தாயகம் ஒன்றுக்கு ஆதரவு வழங்குவதற்கு பிரிட்டன் உறுதியளித்த அதேவேளை, ஒட்டோமன்களுக்கு எதிராக அரபுக்கள் கிளர்ச்சி செய்தால் அராபியர்களின் சுதந்திரத்துக்கும் ஆதரவளிப்பதாகவும் அது உறுதியளித்தது. ஆனால், பிரிட்டனும் பிரான்ஸும் போர் முடிவடைந்ததும் ஒட்டோமன் நிலப்பிராந்தியங்களை பிரிப்பதற்கு இரகசிய உடன்படிக்கை ஒன்றை (சைக்ஸ் - பிக்கொற் உடன்படிக்கை) ஏற்கெனவே செய்திருந்தன.

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்பது ஆண்டுகளின் பின்னர் ஹிரோஷிமா:

# உலகின் முதல் அணுகுண்டு விழுந்த நாள்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

மனித குல வரலாற்றில் நிகழ்ந்த உலகின் முதல் அணுகுண்டு தாக்குதல் நடத்தப்பட்ட மிக கொடூரமான இந்த சம்பவம், உலகளாவிய ஆயுதக் குறைப்பு மற்றும் அமைதி ஆகிய முயற்சிகளுக்கு வழிவகுத்தது. இதுவே, அணுசக்தி இல்லாத உலகம் என்ற எண்ணத்தை நோக்கி நகரவைத்தது. ஆனாலும் இந்த எண்ணங்கள் சாத்தியமானதா என்பதில் சந்தேகமே மிஞ்சுகிறது.

இரண்டாவது உலகப் போரின் பின்னர் காலப்போக்கில் அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவது பற்றிய கவலை ஒரு பெரிய உலகளாவிய பிரச்னையாக உருவெடுத்தது. தற்போது ஒவ்வொரு ஆண்டும் ஹிரோஷிமா மற்றும் நாகசாகி அணுகுண்டு தாக்குதலுக்கான தினத்தில் அதில் பாதிக்கப்பட்டவர்களின் நினைவாக கௌரவிப்பதுடன், அமைதியை முன்னெடுப்பதற்காக பல்வேறு நிகழ்வுகளை ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன. இந்த வருடமும் பல நாடுகளில் அமைதி வேண்டி பல நகரங்கள் கவனயீர்ப்பு நிகழ்வுகள் நடைபெற்றன.

**ஹிரோஷிமா - நாகசாகி கற்றுத் தரும் பாடம்:**


உலக வரலாற்றில் அதிக சேதத்தையும், அதிக படிப்பினையையும் கற்றுக் கொடுத்தது இரண்டாம் உலகப் போரே. சூரியன் உதிக்கும் நாடு எனப் பெயர் பெற்ற ஜப்பான், இத்தாலி ஜெர்மனியுடன் கைகோத்து உலக நாடுகளை அச்சுறுத்தி வலம் வந்தன.

1941 டிசம்பர் 11 வரை அமெரிக்கா மறைமுகமாக பிரிட்டனுக்கு உதவினாலும் நேரடியாகக் களத்தில் இறங்கவில்லை. அமெரிக்காவுக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுக்க நினைத்த ஜப்பான் அமெரிக்க போர்க் கப்பல்கள் அணிவகுத்து நிறுத்தப்பட்டிருந்த துறைமுகத்தை சிதைத்து விட்டால் அமெரிக்காவை ஒடுக்கிவிடலாமென நினைத்து ஜப்பானிய போர் விமானங்கள் குண்டுமழை பொழிய 2,000-க்கும் மேற்பட்ட வீரர்கள் உயிரிழந்தனர். இதன் பின்தான் நேரடியாகப் போரில் குதித்தது அமெரிக்கா.

இந்த தாக்குதலின் பின்னரே 1942-ம் ஆண்டு அணுகுண்டு தயாரிக்கும் மான்ஹாட்டன் திட்டத்தை ரகசியமாகச் செயல்படுத்தியது. 1940-ம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட புளூட்டானியம் அமெரிக்க அணுகுண்டு தயாரிப்புக்கு உதவியது. யுரேனியத்தை நியூட்ரான்களின் தாக்குதலுக்கு உட்படுத்துவதன் மூலம் புளூட்டோனியம் பெறப்பட்டது.

மூன்று ஆண்டுகளில் 1945-ம் ஆண்டு அணுகுண்டை முதலில் சோதித்துப் பார்த்தது அமெரிக்கா. எப்படியாவது ஜெர்மனிக்கு முன் கண்டுபிடித்தவிட வேண்டும் எனும் யூகம் வெற்றியைத் தந்தது. ஒரு சாதாரண குண்டைவிட பத்து இலட்சம் மடங்கு சக்தி வாய்ந்ததாக அது இருந்தது.

1945இல் சோவியத் படைகளிடம் ஹிட்லர் தோல்வியுற்ற பின் ஜெர்மனியும் சரணடைந்தது. ஜப்பானுக்கு 1945 ஆகஸ்ட் 3-ம் தேதி காலக் கெடுவாக அமெரிக்கா விதித்தது. அதைப் புறக்கணித்ததால் அணுகுண்டைப் பயன்படுத்தி ஜப்பானை பணியவைக்க அதிபர் ட்ரூமன் முடிவெடுத்தார்.



**அணுகுண்டை எங்கு வீசுவது?**

ஜப்பான் மீது அணுகுண்டை பிரயோகிக்க முடிவெடுத்த பின் எங்கு வீசுவது என்ற கேள்வி எழுந்தது. மக்கள் நடமாட்டம் இல்லாத பகுதி, நகர மையப்பகுதி, அரண்மனைகள், ஆலயங்கள் என விவாதித்து இறுதியில் நாகசாகி, கொகுரா, ஹிரோஷிமா, கியோட்டோ, நீகேடா எனும் ஐந்து நகரங்கள் தேர்வாகின.

சான்பிரான்ஸிஸ்கோவிலிருந்து இன்டியானா பொலிஸ் கப்பல் மூலம் யுரேனிய குண்டிற்கான மூலப்பொருள்கள் வந்தடைந்தது. ஹிரோஷிமா ஹோன் சூ தீவில் அமைந்துள்ள நகரம் ஹிரோஷிமா. 73 சதுர கிலோமீட்டர் நிலப்பரப்பில் 2 லட்சத்துக்கும் மேல் மக்களைக் கொண்ட நகரம்.

1945-ம் ஆண்டு ஆகஸ்ட் 6-ம் நாள் காலை எப்போதும் போல் விடிந்தது அம்மக்களுக்கு. காலை 8.15 மணிக்கு என்ன நடக்கப் போகிறதென தெரியாமல் மக்கள் எப்போதும் போல் இயங்கிக் கொண்டிருந்தனர். வானில் மூன்று விமானங்கள் பறந்தன.

ஹிரோஷிமாவில் வானிலை தெளிவாக இருப்பதாகத் தகவல் கிடைத்தவுடன் கர்னல் டிப்பெட்ஸூம், உடன்




**எண்பது வருடங்களுக்கு முன்பாக, 1945 ஆகஸ்ட் 6ம் திகதி உலக வரலாற்றில் யாரும் மறக்க முடியாத உலகின் முதல் அணுகுண்டு தாக்குதல் நடத்தப்பட்ட நாளாகும். இத்தாக்குதலின் பின்னரும், 'மீண்டெழுதல்" என்று சொல்லுக்குப் பெயர் போன ஜப்பானில், இன்று அதே ஹிரோஷிமா மற்றும் நாகசாகி இரண்டும் உயர் வளர்ச்சி அடைந்த நகரங்களாக தற்போது இருக்கின்றன.**

ராபர்ட் லூயிஸூம் உலகின் முதல் அணுகுண்டை பிரயோகிக்கப் போகிறோம் என்ற இறுமாப்புடன் பறந்தனர்.

நிலத்தில் வெடிக்காமல் 1,850 அடி உயரத்திலேயே வெடித்தன. விமானிகள் பாதுகாப்புக் கண்ணாடிகளை அணிந்து பார்வையிட்டனர். எனினும், பேரொளிக்குப் பின் எங்கும் புகை மண்டலமாகவே இருந்தது.1 கி.மீ பரப்பிலிருந்த ஆயிரக்கணக்கான கட்டடங்கள் விழுந்தன. ஹிரோஷிமாவில் இருந்த 60,000 கட்டடங்கள் சேதமடைந்தன. இந்த தாக்குதலில் 1,40,000 பேர் உடனடியாய் இறந்தனர். குண்டு வெடித்த மையத்தில் பாரிய வெப்பக் கதிர் நிலவியதால் உடல்கருகி இறந்தனர். ஒன்றரை கிலோமீட்டர் தூரத்துக்கு வெப்பம் இருந்தது. 16 மணி நேரம் கழித்து அமெரிக்கா அணுகுண்டு வீசியதை அறிவித்தது. அதுவரை என்ன வகை குண்டென்றே யாருக்கும் தெரியவில்லை. குண்டு வெடித்த துயரம் அடங்கியவுடன் கதிர்வீச்சு ஆரம்பித்து. இதில் பல ஆயிரம் பேர் மாண்டனர். நகரை விட்டு தள்ளி இருந்தவர்களும் தப்பவில்லை.



**அடுத்த இலக்கு நாகசாகி:**

ஹிரோஷிமா பேரழிவுக்குப் பின் ஆகஸ்ட் 9-ம் நாள் டோக்கியோவில் ஜப்பான் தலைமை குழு கூடி நேச நாடுகளிடம் சரணடைய விவாதித்தனர். சரணடைய காலதாமதம் ஆனதால் அமெரிக்கா, நாகசாகியில் ஆகஸ்ட் 9-ம் தேதி காலை 11 மணிக்கு வட் மான் என்றும் புளூட்டானியம் குண்டை வீசியது.

அதே அளவு உயிர்சேதம் இங்கும் நிகழ்ந்தது. ஜப்பான் நிலைகுலைந்து போனது. இதற்குப் பின்னும் சரணடையாவிட்டால் செப்டம்பரிலும் அக்டோபரிலும் மீண்டும் குண்டு வீச இரு திட்டங்கள் வைத்திருந்தது அமெரிக்கா.

ஆனால், ஜப்பான் 1945 ஆகஸ்ட் 15-ம் நாள் மன்னர் ஹிரோஹிடோ ரேடியோ மூலம் தன்னம்பிக்கை உரையாற்றினார். செப்டம்பர் 2-ம் தேதி போர்நிறுத்தத்தில் கையெழுத்திட்டது. உயிர்தப்பியவர்கள் மரணத்திலிருந்து தப்பித்தாலும் கதிரியக்கத்தால் ஏற்பட்ட பாதிப்புதான் அதிகம். பல குழந்தைகள் பிறப்பிலேயே ஊனமாகப் பிறந்தனர். தழும்புகளுடன் இன்னும் வாழ்கின்றனர். இருநகரமும் அணு ஆயுதத்தால் உருவாகும் பேரழிவை உலகுக்கு உணர்த்தும் வரலாறாக உள்ளது.

**அமெரிக்கா எச்சரிக்கை இன்றி வீசிய அணுகுண்டு:**

1945-ல் ஆகஸ்ட் 6-ம் தேதி ஜப்பான் மக்கள் எதிர்பாராத சமயத்தில், எந்தவொரு எச்சரிக்கை அறிவிப்பும் விடுக்காமல், ஹிரோஷிமாவில் 'லிட்டில் பாய்' என்ற பெயரில் முதல் அணுகுண்டை போட்டது என்றும் குற்றச்சாட்டும் உள்ளது.

1939இல் தொடங்கிய இரண்டாம் உலகப் போர், 1945இல் முடிவை நோக்கி நகர்ந்துகொண்டிருந்த நேரம் அது. ஆனால் இடைப்பட்ட இந்த ஆறாண்டு காலமும், நாசி நாடுகள் அணியில் இடம்பெற்றிருந்த ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகளும், நேச நாடுகள் அணியில் இடம்பெற்றிருந்த பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா ஆகிய நாடுகளுக்கும் கடுமையான போர் நடைபெற்றது.

இதில், சோவியத் யூனியனும் ஜெர்மனிக்கு எதிராக நேச நாடுகளுடன் இணைந்து போரிட்டது. இந்தக் கடும் போரில் இலட்சக்கணக்கான உயிர்கள் மடிந்தனர்.

ஆனால் 1945 மே மாதம், ஹிட்லரின் ஜெர்மனி நாஜி படை ரஷ்யாவிடம் சரணடைந்ததையடுத்து பெரும்பாலான பகுதிகளில் போர் முடிந்திருந்தது.

ஆனால், ஆசியாவில் போர் நீண்டுகொண்டிருந்தது. அதனால், ஜப்பான் மீது அணுகுண்டு வீசி போரை முடிவுக்கு கொண்டுவர முடிவெடுத்தது அமெரிக்கா.

இந்தத் தாக்குதலுக்குப் பின்னர் ஜப்பான் வேறுவழியில்லாமல், நேச நாடுகள் அணியிடம் சரணடையவே,




இரண்டாம் உலகப் போர் முடிவுக்கு வந்தது. ஆனால், அமெரிக்காவின் அணுகுண்டு தாக்குதலால் ஏற்பட்ட உயிரிழப்பு, கதிர்வீச்சு பாதிப்பு ஆகியவற்றால் அந்த ஆண்டின் இறுதியில் பலி எண்ணிக்கை மட்டும் 1,40,000-ஆக அதிகரித்தது.

குறிப்பாக, அந்த அணுகுண்டு தாக்குதலின் கதிர்வீச்சு பாதிப்புக்குள்ளானவர்களின் சந்ததியினர் தலைமுறை தலைமுறையாக உயிரியல் குறைபாட்டுடன் பிறந்தனர்.

இயற்கை பேரிடராக இருந்தாலும், மனிதனின் செயற்கை பேரிடராக இருந்தாலும் 'மீண்டெழுதல்' என்று சொல்லுக்குப் பெயர்போன ஜப்பானில், இன்று அதே ஹிரோஷிமா மற்றும் நாகசாகி இரண்டும் வளர்ந்த நகரங்களில் ஒன்றாக தற்போது உருவெடுத்திருக்கிறது. மேலும்,

அணுகுண்டு தாக்குதலில் இறந்த ஆத்மாக்களுக்காக அர்ப்பணிக்கப்பட்ட நினைவுச் சின்னங்கள் மற்றும் அருங்காட்சியகங்கள் அங்கு அமைக்கப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# தலதா பெரஹெராவை பார்வையிட்டார் ஜனாதிபதி

கண்டி, ஓக. 10

கண்டியில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க சிறீ தலதா மாளிகையின் வருடாந்த எசல பெரஹெராவின் இறுதி ரந்தோலி பெரஹெரா வெள்ளிக்கிழமை இரவு பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் முன்னிலையில் கோலாகலமாக நடைபெற்றது.

இதில், ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க கலந்துகொண்டார்.

ஜனாதிபதியுடன் இணைந்து புத்தசாசன மத மற்றும் மற்றும் கலாசார விவகார அமைச்சர் ஹினிதும சுனில் செனவி, விவசாயம், கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டி. லால்காந்த, மத்திய மாகாண ஆளுநர் சரத் அபேகோன் மற்றும் வெளிநாட்டுத் தூதுவர்கள் குழுவினரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (எ)

# மட்டக்களப்பில் போயா தினத்தில் மதுபானம் விற்பனை, பெண் கைது

கொழும்பு, ஓக. 10

போயா தினத்தில் சட்டவிரோதமாக மதுபானம் விற்பனை செய்த குற்றச்சாட்டில் மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் பிரிவிலுள்ள புன்னைச்சோலை பிரதேசத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டார்.

புன்னைச்சோலை பகுதியில் சட்டவிரோதமாக மதுபானம் விற்பனை செய்யப்படுவதாக பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து, பெரும் குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி, பொலிஸ் பரிசோதகர் எஸ். சஞ்ஜீவ தலைமையிலான பொலிஸ் குழுவினர், குறித்த வீட்டில் திடீர் சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

இதன்போது, அந்த வீட்டில் சட்டவிரோதமாக மதுபானம் விற்பனை செய்து கொண்டிருந்த பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து 60 கால் போத்தல்கள் கொண்ட மதுபானங்களும் விற்பனையின் மூலம் பெறப்பட்ட 4490 ரூபாய் பணமும் பறிமுதல் செய்யப்பட்டன.

கைது செய்யப்பட்ட பெண்ணை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# இந்திய - அமெரிக்க வரி முட்டுக்கட்டை...

(12 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்யவிருக்கிறார். அந்த மகாநாட்டில் சீன ஜனாதிபதி சி ஜினபிங்கும் ரஷ்ய ஜனாதிபதி புட்டினும் மோடியும் ஒன்றாகச் சந்திக்கின்றனர். இந்த விஜயம் 2018 ஆம் ஆண்டுக்கு பிறகு இந்திய பிரதமர் சீனாவுக்கு மேற்கொள்ளும் முதல் விஜயமாக அமையும். இந்திய பாதுகாப்பு அமைச்சரும் வெளியுறவு அமைச்சரும் அண்மையில் சீனாவுக்கு செனறிருந்தனர்.

**பேச்சுக்கள் தோல்வி கண்டால் இந்தியாவுக்கு என்ன விளைவு?**

2025 மார்ச்சில் முடிவடைந்த நிதியாண்டில் இந்தியா அமெரிக்காவுக்கு (ஆடைகள், மருந்து வகைகள், இரத்தினக் கற்கள், ஆபரணங்கள் மற்றும் பெற் றோகெமிக்கல் வகைகள் உட்பட) சுமார் 87 பில்லியன் டொலர்கள் பெறுமதி யான பொருட்களை ஏற்றுமதி செய்திருக்கிறது. இந்த ஏற்றுமதிகள் இந்தியா வின் நிகர உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 2 சதவீதமாகும்.

இந்திய பொருட்கள் மீதான உத்தேச 50 சதவீத வரி விதிப்பு நடைமுறைப்படுத் தப்படுமானால், வேறுபட்ட தீர்வைக் கட்டமைப்பு ஒன்றுக்கு உள்ளாக்கப்படும் மருந்து வகைகள் மாத்திரமே இந்தியாவில் இருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் ஒரே உற்பத்திகளாக இருக்கக்கூடும்.

இங்கு பாதிக்கப்படப்போவது வர்த்தகம் மாத்திரமல்ல. தொழில்நுட்பத் துறைசார் நிபுணர்களுக்கான வேலை விசா, நிறுவனங்களின் செயற்பாடுகளை வெளிநாடுகளுக்கு மாற்றுதல் போன்ற துறைகளுக்கும் இந்த பதற்றநிலையின் தாக்கம் பரவும். அமெரிக்காவின் விசா செயற்திட்டங்கள், மென்பொருள் மற்றும் வர்த்தக சேவைகளை கைமாற்று தல் போன்றவற்றினால் பெருமளவுக்கு பயனைப் பெற்றுவந்த நாடாக இந்தியா விளக்குகிறது. (டெக்கான் ஹெரால்ட்)

# இஸ்ரேலை இனிமேலும்....

(12 ஆம் பக்கத் தொடர்ச்சி)

போருக்கு பிறகு பிரிட்டன் நாடுகள் கழகத்தின் ஆணையின் கீழ் பாலஸ்தீனத் தில் காலனித்துவ நிருவாகம் ஒன்றை நிறுவியது. அடுத்து வந்த தசாப்தங்களில் பாலஸ்தீனத்தை நோக்கிய யூதப் புலம் பெயர்வு தீவிரமடைந்தது. பாலஸ்தீனத் தில் இருந்த யூத சமூகம், தொழிற்சங்கங்கள் மற்றும் தொழிற்துறைகள் தொடக்கம் பரா இராணுவக் குழுக்கள் மற்றும் நிருவாகக் கட்டமைப்புக்கள் வரை தங்களது சொந்த நிறுவனங்களைக் கட்டியெழுப்பத் தொடங்கியது. இரண் டாவது உலகப் போர் முடிவுக்கு வந்த நேரமளவில் பாலஸ்தீனத்தில் சனத் தொகையின் 30 சதவீதத்தினராக யூதர்கள் அதிகரித்து விட்டனர்.

1930 களின் இறுதிப்பகுதியில், நாடு கள் கழகத்தின் கீழான ஆணை நடை முறைப்படுத்த முடியாதது என்ற முடிவுக்கு வந்த பிரிட்டன் பாலஸ்தீனம் பிரிக்கப்படுவதை ஆதரித்தது. போருக்கு பிறகு பிரிட்டன் (1948 மே 15 காலாவதி யாகவிருந்த) ஆணையை முடிவுக்குக் கொண்டுவரும் அதன் நோக்கத்தை ஐக்கிய நாடுகளுக்கு அறிவித்தது. மே 14 சியோனிசத் தலைவர்கள் ஒருதலைப்பட்சமாக இஸ்ரேலிய அரசைப் பிரகடனம் செய்தனர். சில நிமிடங்களுக்குள் அந்த அரசை அமெரிக்கா அங்கீகரித்தது. அந்த அரசுப் பிரகடனம் உடனடியாகவே முதலாவது அரபு - இஸ்ரேல் போரை மூளவைத்தது.

**ஏன் இப்போது பிரிட்டன்பாலஸ்தீனத்தை அங்கீகரிக்கப்போகிறது?**

நெருக்கடியில் பிரிட்டன் வகித்த வரலாற்று ரீதியான பாத்திரத்தை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது பல்ஃபோர் பிரகடனம் வெளியி டப்பட்டு 108 வருடங்களுக்கு பிறகு பாலஸ்தீன அரசக்கு பிரிட்டன் வழங்கக் கூடிய ஒரு அங்கீகாரம் மிகப்பெரிய அடையாள பூர்வமான முக்கியத்து வத்தை பெறுகிறது. அத்தகைய அங்கீகாரம் இஸ்ரேலின் பாலஸ்தீன ஆக்கிரமிப்பு மீது உடனடியான தாக்கம் எதையும் ஏற்படுத்தாமல் இருக்கலாம் என்ற போதிலும், இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனம் தொடர்பிலான லண்ட னின் கொள்கையில் ஒரு மாற்றத்தை பிரதிபலிக்கிறது என்பது தெளிவானது.

பாலஸ்தீனர்களை இனப்படுகொலை செய்வதாக குற்றச்சாட்டுகளுக்கு இஸ்ரேல் முகங்கொடுக்க வேண்டியிருக்கிறது. காசா அழிவுகளினதும் பட்டினியில் வாடும் சிறுவர்களினதும் படங்கள் வெளிவந்து கொண்டிருக்கின் றன. இஸ்ரேலை நிபந்தனையற்ற முறை யில் தொடர்ந்தும் ஆதரிப்பது மேற்கு நாடுகள் பலவற்றைப் பொறுத்தவரை நியாயப்படுத்த முடியாததாக மாறி விட்டது. (தி இந்து)

# கல்விச் சீர்திருத்த...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

மிகமுக்கியமானது. அருகிலுள்ள இன்னொரு பாடசாலையில் எந்தவொரு சிரமமுமின்றி கல்வியைப் பெறுவதற்கான வாய்ப்பும் அதனை அடைவதற்கான வசதிகளும் அப்பிள்ளைகளுக்கு வழங்கப்படவேண்டும். பாடசாலையொன்று மூடப்படும்போது அங்குள்ள பிள்ளைகள் கல்வியைக் கைவிடுவது அல்லது எதிர்காலத்தில் பாடசாலையில் இணையாதிருப்பது போன்ற நிலைமை ஏற்படுமானால் நிச்சயமாக அப்பாடசாலை தொடர்ந்து இயக்கப்படவேண்டும். இவ்விடயத்தில் வேறு எந்தக்காரணியும் முதன்மை பெறமுடியாது. அடிப்படைக் கல்விக்கான வாய்ப்பு என்பது ஒவ்வொரு பிள்ளையினதும் அடிப்படை உரிமை. அது இலங்கையின் அரசியலமைப்பினால் உறுதிசெய்ப்பட்டதொன்று. அதனை வழங்கவேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு.

தற்போது மூடப்படக்கூடிய நிலையிலுள்ள பாடசாலைகளில் கணிசமானவற்றை தொடர்ந்து சிறப்பாக இயங்கவைக்க முடியும். இது அப்பாடசாலைச் சமூகத்தின் கைகளில் பெருமளவில் தங்கியுள்ளது. பிள்ளைகளின் தொடக்கநிலைக் கல்விக்கு எப்போதும் அருகிலுள்ள பாடசாலைகளே மிகப்பொருத்தமானவை. பிள்ளைகளின் உள, உடல் ஆரோக்கியத்துக்கு மட்டுமன்றி தான்வாழும் சமூகத்துடன் இசைவாக்கம் பெறுவதற்கும் சமூகக் கட்டுப்பாடுகளை உள்வாங்குவதற்கும் அது வழிவகுக்கும். அத்துடன் பிள்ளைகள்மீதும் பாடசாலை மீதும் சமூக உறுப்பினர்களின் கண்காணிப்பும் கரிசனையும் அதில் உயர்வாக இருக்கும். எதிர்கால ஆரோக்கியமான சமூகமொன்றைக் கட்டியெழுப்ப இது அவசியமானது. பிரபல பாடசாலைகள் மீதான மோகம், தரம் ஒன்றிலிருந்தே பிரத்தியேகக் கல்வி, எல்லாவற்றுக்கும் பிரத்தியேகக் கல்வி போன்ற மாயை அகற்றப்படவேண்டும். ஐந்தாந்தர புலமைப் பரீட்சை உட்பட பொதுப்பரீட்சைகளில் பிரபலமற்ற உள்ளூர்ப் பாடசாலைகள் உயர்ந்த சாதனைகள் படைப்பது கண்முன்னே நடக்கும் சூழ்நிலையிலும் கண்ணை மூடிக்கொண்டு அதனைத்தாண்டி பெற்றோர் ஓடநினைக்கும் மனப்பாங்கு மாறவேண்டும்.

பிள்ளைகளுக்கான சிறந்த கல்வி என்பது ஒரு கூட்டு முயற்சி. இதைக் குடும்பம், பாடசாலை, சமூகம் என்பன இணைவதன் மூலமே பெறமுடியும். ஆனால் இன்று குடும்பமும் சமூகமும் தமது பொறுப்பை முழுமையாகப் பாடசாலைகள் மீது சுமத்திவிட்டு தப்ப முயற்சிக்கின்றன. அதனால்தான் பிரபல பாடசாலைகளை நோக்கிப் பெற்றோர் படையெடுக்கின்றனர். இதுவே இன்றைய இளஞ்சமூகத்தில் காணப்படும் பல்வேறு பிரச்சினைகளுக்கு மூலகாரணம் என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும். மிக அருகிலுள்ள பாடசாலையில் தனது தொடக்கநிலைக் கல்விக்குள் புகுந்து பிள்ளையின் வயதும் அறிவும் விரிவதுபோன்று அடுத்துவரும் இடைநிலைக்கும் உயர்நிலைக்கும் படிப்படியாக நெருங்கிய பாடசாலைகளை நோக்கி நகர்வதே ஆரோக்கியமானது. இதனையே எமது முன்னோர்கள் பின்பற்றினார்கள். வசதிகளும் வாய்ப்புகளும் கிடைக்கிறது என்பதற்காக தவறான பாதைகளில் பயணஞ் செய்யவேண்டிய அவசியமில்லை. அருகிலுள்ள பாடசாலைகளை ஒவ்வொருவரும் நம்பி அவற்றின் வளங்களை அதிகரிக்க முயல்வதே உகந்தது. இவ்வாறான பாடசாலைகளில் கற்பிக்கும் அந்தந்த ஊர்களைச் சேரந்த ஆசிரியர்களும் ஊர்ப் பெரியவர்களும் தமது பிள்ளைகளை அதே பாடசாலையில் இணைப்பதன் மூலம் ஏனைய பெற்றோருக்கு நம்பிக்கையை வழங்க முடியும். பல பாடசாலைகள் மூடப்படுவதற்கு அரசாங்கமல்ல நாங்களே காரணம் என்பதை முதலில் புரிந்து கொள்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12அரசியல்...

ஜயசேகர, ரிஷாத் பதியுதீன் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான ரமேஷ் பத்திரன, ஷெஹான் சேமசிங்க, லசந்த அழகியவன்ன, மயந்த திஸாநாயக்க, அனுர பிரியதர்ஷன யாப்பா, சுசில் பிரேமஜயந்த, பாட்டலி சம்பிக்க ரணவக்க உள்ளிட்ட பலர் கலந்துகொண்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ)

## இலங்கையர்...

எண்ணிக்கை 109 ஆகக் காணப்பட்ட நிலையில், 2024 ஆம் ஆண்டு 107 ஆகக் குறைவடைந்துள்ளது.

கடந்து ஆண்டில், இலங்கை, அமெரிக்கா, ரஷ்யா, பிலிப்பைன்ஸ், பிரிட்டன், ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் கனடா ஆகிய நாடுகளிலேயே, இந்திய நாட்டவர்கள் அதிகளவில் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர்.

இதன்படி, இலங்கையில், கடந்த 2022ஆம் ஆண்டு 14 தாக்குதல் சம்பவங்களும், 2023 ஆம் ஆண்டு 30 தாக்குதல் சம்பவங்களும், 2024 ஆம் ஆண்டு 13 தாக்குதல் சம்பவங்களும் பதிவாகியுள்ளன. (அ)

## மாகாண...

அரசாங்கத்துக்கு பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் உள்ளது. எனவே, அதற்குரிய ஏற்பாடுகளை செய்ய முடியும்.

எதிரணிகள் ஒன்றிணைந்து கோரினால் தேர்தலை நடத்தத் தயார் என அரச தரப்பில் கூறப்பட்டது. ஒன்றாக அல்ல தனித்து போட்டியிடுவதற்குகூட நாம் தயார். முடிந்தால் மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு அரசாங்கத்துக்கு சவால் விடுக்கின்றோம்.

அரசாங்கம் கூறுவதை நம்புவதற்கு மக்கள் தயாரில்லை என்பது தேர்தல் மூலம் நிரூபணமாகும்.- என குறிப்பிட்டார். (அ)

## தலைமறை...

அடங்கும் என்று சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த இடங்களில் எதற்கும் அவர் சென்றதாக எந்த தகவலும் இல்லாததால், அவர் நாட்டை விட்டுத் தப்பிச் செல்வதைத் தடுக்க சிறப்பு பாதுகாப்பு ஏற்பாடுகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

தென் மாகாணத்தில் உள்ள பல விகாரைகள் மற்றும் பல குடியிருப்பு வளாகங்களில் உள்ள வீடுகளில் மறைந்திருக்க அதிக வாய்ப்புள்ளதால், கொழும்பு குற்றப்பிரிவு அதிகாரிகள் தற்போது அந்த இடங்களையும் கண்காணித்து வருகின்றனர். எங்கள் மக்கள் சக்தி கட்சியின் பொதுச் செயலாளர் வேதினிகம விமல திஸ்ஸ தேரர் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக அத்துரலிய ரத்ன தேரர் கைது செய்யப்பட உள்ளார்.

மேலும், 2020 ஆம் ஆண்டில் அக்கட்சி பெற்ற தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை அத்துரலிய ரத்ன தேரர் பெற்றிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

கடந்த காலங்களில் நிலுவையில் இருந்த இந்த விசாரணை, கொழும்பு குற்றப் பிரிவின் புதிய பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் இந்திக லொக்குஹெட்டியின் நியமனத்துடன் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது.

கொழும்பு குற்றப் பிரிவில் இது போன்ற பல குற்ற விசாரணைகள் நிலுவை யில் இருப்பதாகவும் அந்த விசாரணைகள் அனைத்தும் இப்போது தொடங்கப் பட் டுள்ளதாகவும் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவு வெளிப்படுத்தியுள்ளது.

சில குற்றங்களில் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளின் தொடர்பும் வெளிப்படுத்தப்பட்டு வருவதாகவும் பல்வேறு குற்றங்களில் ஈடுபட்ட கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளுக்குக் கடந்த காலங்களில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பதவிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. (அ)

## தமிழ்...

பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஐ.நா சம்பந்தப்பட்ட விடயத்தில் தமிழ்த் தேசிய கட்சிகள், சிவில் அமைப்புக்கள் என பலரும் ஒன்றிணைந்து கடிதமொன்றை அனுப்பும் முயற்சியை நாங்கள் முன்னெடுத்திருந்தோம்.

அதாவது தமிழ் மக் கள் மீதான இனப்படு கொலைக்கு சிறிலங்காவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்த வலியுறுத்தி கட்சிகள், சிவில் அமைப்புக்கள் என பலரது இணக்கத்துடன் கடிதத்தையும் தயாரித்து ஐ.நாவுக்கு அனுப்பியுள்ளோம்.

இந்தக் கடிதத்தில் உள்ள விடயங்களில் தமிழரசுக் கட்சியும் இணக்கம் தெரிவித்து தாமும் கையொப்பம் வைப்பதாக தெரிவித்திருந்தது. அதற் கமைய ஆரம்பகட்ட பேச்சுக்களும் நடைபெற்றன. எனினும் இறுதியில் தமிழரசுக் கட்சி பொய்களை கூறியுள்ளது.

இதனால் இரு தரப்புக்கும் இடையில் ஒரு புரிந்துணர்வு ஏற்படுத்தும் முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டன. குறிப்பாக இந்த கடிதத்துடன் தான் இணங்குவதாகவும் கட்சித் தலைவர் தான் குழம்புவதாகவும் எப்படியாயினும் யாழில் நடக்கும் கூட்டத்தில் பேசி ஒரு முடிவுக்கு கொண்டு வருவோம் எனவும் அக்கட்சியின் செயலாளர் சுமந்திரன் கூறினார்.

அவ்வாறாயின் இக் கடிதத்தை மேலும் பலப்படுத்துவதாக இருந்தால் பரவாயில்லை எனவும், அதில் வெட்டி திருத்தம் என்றால் தாமதம் ஏற்படும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டது. மேலும் கடிதத்தின் தரத்தை குறைக்க முடியாது. தரத்தைக் கூட்டுவதாக இருந்தால் தாமதித்தாலும் பரவாயில்லை எனவும் கூறப்பட்டிருந்தது.

ஆனால் யாழில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டம் முடிவடைந்த பின்னர் நடத்திய ஊடக சந்திப்பின் போது இதுவரை எங்களுக்குள் பேசப்பட்ட விடயங்களுக்கு மாறாக அப்பட்டமான பொய்களை சுமந்திரன் சொல்லியுள்ளார்.

எனவே திட்டமிட்ட பொய்களை குற்றச்சாட்டுக்களை விடுத்து இனத்திற்காக இணங்கி செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயம்-என்றார். (அ)

## புலமைப்...

அறிவுறுத்தும் வகையில், பரீட்சை கள் ஆணையாளர் நாயகம் ஏ.கே.எஸ். இந்திகா குமாரி தலைமையில் இன்று காலை ஊடகவியலாளர் சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது கருத்து வெளியிட்ட பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,

பரீட்சை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. அனைத்து மாணவர்களும் காலை 8.30 மணிக்குள் அந்தந்த பரீட்சை நிலையங்களுக்கு

சமூகமளிக்க வேண்டும். மாணவர்கள் காலை 9 மணிக்குள் பரீட்சை மண்டபத்திற்குள் அமர வேண்டும்.

இரண்டாம் பகுதி வினாத்தாள் முதலில் மாணவர்களுக்கு வழங்கப்படும். இரண்டாம் பகுதி வினாத்தாள் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி 10.45 மணிக்கு நிறைவடையும்.

அதன் பிறகு அரை மணி நேரம் இடைவேளை வழங்கப்படும்.

முதலாம் பகுதி வினாத்தாள் காலை 11.15 மணிக்கு வழங்கப்படும். இந்த வினாத்தாள் ஒரு மணி நேரம் கொண்டதாகும்.

குறித்த வினாத்தாள் மதியம் 12.15 மணிக்கு நிறைவடையும்.

பரீட்சை இடம்பெறும் சந்தர்ப்பங்களின் போது ஏதேனும் அவசர நிலைகள் ஏற்பட்டால், 117 என்ற துரித இலக்கத்திற்கு அழைத்து முறைப்பாடு அளிக்கலாம். இதற்காக விசேட திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது - என்றார். (அ)

## முகாமுக்கு அழைத்து...

(வயது 32) என்ற 7 மாத குழந்தையின் தந்தையே உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருபவை வருமாறு,

முத்துஐயன்கட்டு - ஜீவநகர் பகுதியில் அமைந்திருந்த இலங்கை இராணுவத்தின் தேசிய காவல்படை (எஸ். எல். என். ஜி.) 13ஆவது பிரிவின் முகாம் அங்கிருந்து அகற்றப்படுகிறது. அகற்றப்படும் முகாமிலிருக்கும் சில பொருட்களை இராணுவத்தினர் கிராம இளைஞர்களில் சிலருக்கு வழங்கி அவற்றை விற்று, வரும் பணத்தில் அவர்களைக் கொண்டே போதைப்பொருட்களை வாங்கியுள்ளனர் என்று கூறப்படுகிறது. இந்தச் செயல் அண்மைநாட்களாக தொடர்ச்சியாக இடம்பெற்று வந்துள்ளது.

இந்த நிலையில், கடந்த வியாழக்கிழமை இரவு 7 மணியளவில் உயிரிழந்த இளைஞரை தொலைபேசியில் அழைத்த இராணுவத்தினர், அன்றிரவு முகாமுக்கு வந்து தாம் தரும் பொருட்களை விற்றுத் தருமாறு கூறியுள்ளனர்.

இதன்படி, 5 இளைஞர்கள் முகாமுக்கு சென்றுள்ளனர். இவர்கள் பொருட்களை பெற்றுக்கொண்டிருந்த போது, பல இராணுவத்தினர் இணைந்து பொல்லுகள், கம்பிகளால் இளைஞர்களை தாக்கியுள்ளனர். தாக்குதலையடுத்து தப்பியோடிய இளைஞர்களை துரத்தித் துரத்தித் தாக்கியுள்ளனர்.

இந்த நிலையில், இளைஞர்கள் மூவர் குளத்தில் குதித்து தப்பியோடியுள்ளனர். இருவர் இராணுவத்தினரிடம் அகப்பட்டுக் கொண்டனர்.

தப்பியோடிய இளைஞர்களின் தகவலின் அடிப்படையில், முகாம் பகுதியில் மக்கள் கூடினர். இதைத் தொடர்ந்து, இராணுவத்திடம் அகப்பட்ட ஓர் இளைஞர் படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டார். அவர் முல்லைத்தீவு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

மற்றைய இளைஞர் ஒருவர் காணாமல் போயிருந்தார். அவரை இராணுவத்தினர் கொன்றுவிட்டனர் என்று உறவினர்கள் குற்றஞ்சாட்டியிருந்தனர். அத்துடன், சந்தேகத்தில் குளத்தில் தேடுதல் நடத்தினர். எனினும், குளத்தில் எந்தத் தடயமும் கிடைக்கவில்லை.

இந்த நிலையில், நேற்றுக் காலை முத்துஐயன்கட்டு குளத்திலிருந்து காணாமல் போன இளம் குடும்பஸ்தரின் சடலம் காணப்பட்டது. இது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு வருகை தந்த முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி த. பிரதீபனின் கட்டளைக்கமைய சடலம் மீட்கப்பட்டு உடல்கூராய்வுக்காக மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது.

இராணுவத்தினரால் இளைஞர்கள் தாக்கப்பட்டு காயப்படுத்தப்பட்டதுடன் கொலை செய்யப்பட்டமை அந்தப் பகுதி மக்களிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

இதையடுத்து, இந்தச் சம்பவம் குறித்து விசாரிக்க கிளிநொச்சியிலிருந்து விசேடமாக நியமிக்கப்பட்ட பொலிஸ் உயர் அதிகாரி தலைமையில் மாங்குளம், ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் உள்ளிட்ட குழு நியமிக்கப்பட்டது. இந்தக் குழுவினர் நேற்றைய தினம் இராணுவ முகாமுக்குள் சென்றது. முகாமுக்குள் சென்ற பொலிஸ் குழு அங்கிருந்து வெளியேறியபோது அந்தப் பகுதியில் கூடிய மக்கள் படுகொலையான இளைஞருக்கு நீதிகோரி போராடினர். இதன்போது, பொலிஸ் அதிகாரிகளுக்கும் மக்களுக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. இதையடுத்து, தாம் சிப்பாய் ஒருவரை கைது செய்துள் ளனர் என்றும் மேலும் சிலரை கைது செய்யவுள்ளோம் என்றும் கூறிய பொலி ஸார் தமது கடமையை செய்ய விடுமாறு கோரினர். இதைத் தொடர்ந்து மக்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

இதைத் தொடர்ந்து, 4 இராணுவத்தினர் ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்துக்கு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர். விசாரணை முடிவில் அவர்களில் இருவர் கைது செய்யப்பட்டனர்.

படுகாயமடைந்த இளைஞர் வழங்கிய தகவலின் அடிப்படையில் இளைஞர்களுக்கும் இராணுவத்தினருக்கும் இடையிலான தொலைபேசி அழைப்புகளை அடிப்படையாகக் கொண்டே 3 சிப்பாய்களும் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதனிடையே, கைது செய்யப்பட்ட சிப்பாய்கள் மூவரும் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு, நீதிவானின் கட்டளையின்பிரகாரம் எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், தாக்குதல் சம்பவம் தொடர்பில் பொலிஸ் விசேட குழு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது.(

## புதிய...

மக்கள் சக்தி உறுதியளித்திருந்தது.

ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் ஒன்றரை மணிநேரம் உரையாற்றினார். எனினும், புதிய அரசியலமைப்பு பற்றி அவர் வாய் திறக்கவில்லை.

எனவே, புதிய அரசியலமைப்புக்குரிய சட்டமூலத்தை தயாரிப்பதற்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவொன்றை அமைக்குமாறு யோசனை முன்வைக்கப்படவுள்ளது. இது தொடர்பில் எமது கட்சி முடிவெடுத் துள்ளது.

அரசாங்கத்தன் இறுதி காலகட்டத்தில் புதிய அரசியலமைப்புக்குரிய பணியை முன்னெடுக்க முடியாது. அரசுக்குரிய செல்வாக்கும் இருக்கும் போதே அதற்குரிய பணி ஆரம்பிக்கப்படவேண்டும். " - என அஜித் பி பெரேரா எம்.பி. மேலும் குறிப்பிட்டார். (அ)

## பழைய...

தொடர்ந்தும் காலம் தாழ்த்தப்பட்டுக் கொண்டிருக்கின்றமை தொடர்பில் கடுமையான எதிர்ப்பினை வெளியிடுகின்றோம். எமது அரசியலமைப்பிற்கமைய மாகாணசபைத் தேர்தல்கள் நிச்சயம் நடத்தப்படவேண்டும். அரசியலமைப்பு திருத்தமொன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து இதனை இடைநிறுத்தி வைத்திருக்கின்றனர்.

எனவே தற்போது அந்த அரசியலமைப்பு திருத்தத்தினை மீளப் பெற்றால் அரசாங்கம் கூறுவதைப் போன்று மாகாணசபைத் தேர்தலை பழைய முறைமையில் நடத்த முடியும். எனவே புதிதாக எதனையும் செய்ய வேண்டிய தேவை இல்லை. இந்த அரசாங்கத்தினால் குறித்த அரசியலமைப்பு திருத்தம் முன்வைக்கப்படவில்லை.

எனினும் தற்போதைய அரசாங்கத்தால் அதனை மீளப் பெறுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும். அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டால் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதிலும் எந்தத் தடையும் இல்லை.

மாகாணசபைகளை செயற்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். பொது மக்களால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளாலேயே மாகாண சபைகள் நிர்வகிக்கப்பட வேண்டும். ஆனால் தற்போது ஜனாதிபதியின் பிரதிநிதிகளாக ஆளுநர்கள் மாகாண சபைகளை ஆட்சி செய்கின்றனர். அது தவறாகும்.

அவசர நிலைமைகளின் போது, தவிர்க்க முடியாத சூழ்நிலைகளின் போது இவ்வாறான நிர்வாகம் இடம்பெறலாம். ஆனால் அதற்காக பல ஆண்டுகளாக இவ்வாறு மாகாண சபைகளில் ஆளுநர் ஆட்சி இடம்பெறு வதற்கு இடமளிக்க முடியாது.

பழைய முறைமையின் கீழ் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்தால் ஐக்கிய மக்கள் சக்தி அதற்கு முழுமையான ஒத்துழைப்பினை வழங்கும். எனவே முடிந்தளவு விரைவாக தேர்தலை நடத்தி மக்கள் ஆட்சிக்கு இடமளிக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம் - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

# புதிதாக குற்றச்செயல்களில் ஈடுபடும் இளைஞர்கள் எண்ணிக்கை அதிகரிப்பு!

கொழும்பு, ஓக. 10

**இதுவரை குற்றச் செயல்களில் ஈடுபடாத இளைஞர்கள் அவ்வாறான செயல்களில் ஈடுபடுவது தற்போது அதிகரித்து வருவதாக இலங்கை பொலிஸ் பயிற்சி கல்லூரியின் வெளி விரிவுரையாளரும் குற்றவியல் நிபுணருமான டி.எம்.எஸ். தம்மிக்க பண்டார தெரிவித்துள்ளார்.**

கடந்த காலங்களில் துப்பாக்கிச் சூடு மற்றும் போதைப்பொருள் தொடர்பான குற்றங்கள் குறித்து நடத்தப்பட்ட ஆய்வுகள் இந்த போக்கை உறுதிப்படுத்தியுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

ஒவ்வொரு மாதமும் சுமார் 40 இளைஞர்கள் புதிதாக குற்றச் செயல்களில் ஈடுபடுவதாகவும், கடந்த சில மாதங்களில் 40-50 புதிய குற்றவாளிகள் உருவாகும் நிலை பதிவாகியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இவர்களில் பெரும்பாலானோர் இளம் தலைமுறையைச் சேர்ந்தவர்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் நிகழும் குற்றங்களை சர்வதேச மட்டத்துடன் ஒப்பிடும்போது, அவை குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் காட்டுவதாகவும், இது இலங்கையின் பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் சமூக வளர்ச்சிக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் அவர் எச்சரித்துள்ளார்.

மேலும், குற்றச் செயல்களில் ஈடுபடும் இளைஞர்கள் ஆய்வுகளுக்குப் பின்னர் முதல் தர குற்றவாளிகளாக சிறையில் அடைக்கப்படுகின்றனர் எனவும் இது சமூகத்திற்கும் நாட்டுக்கும் பயங்கரமான பேரிழப்பாகும் எனவும் ஒரு நிரபராதியை சிறையில் அடைத்து, மறுவாழ்வு செய்யும் செயல்பாட்டில், அவர் சமூகத்தில் பெயர் தெரியாத நபராக மாறுகிறார் எனவும் இது நாட்டின் முன்னேற்றத்திற்கு பெரும் தடையாக உள்ளது எனவும் தம்மிக்க பண்டார கவலை தெரிவித்தார்.

குறிப்பாக, இலங்கை பொருளாதார ரீதியாக நிலையற்ற தன்மையில் இருந்து மீண்டு வரும் இந்த சூழலில், குற்றச் செயல்களின் அதிகரிப்பு நாட்டிற்கு சர்வதேச அளவில் மிகப்பெரிய பாதகமாக அமையும் என்றும் அவர் வலியுறுத்தினார். (அ)

## மன்னாரில் 7ஆவது நாளாக தொடர்கின்றது போராட்டம்

மன்னார், ஓக. 10

மன்னாரில் மக்களின் எதிர்ப்பை மீறி 2வது கட்டமாக முன்னெடுக்கப்பட்டு வரும் காற்றாலை மின் கோபுரம் அமைக்கும் நடவடிக்கை மற்றும் கனிய மணல் அகழ்வு போன்றவற்றிக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் தொடர்ச்சியாக மன்னார் பஜார் பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டம்

நேற்று 7 ஆவது நாளாக தொடர்ந்தது. குறித்த போராட்டத்திற்கு வலுசேர்க்கும் வகையில் நேற்று மன்னார் பேசாலை கிராம மக்கள் கலந்து கொண்டு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மன்னார் நகர சுற்று வட்டத்தில் இருந்து பதாகைகளை ஏந்தியவாறு மாவட்ட செயலக பிரதான வீதியூடாக சென்று மீண்டும் நகர சுற்று வட்ட பகுதியை சென்றடைந்தனர். பின்னர் நகர சுற்றுவட்ட பகுதியில் தமது போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# வெளிநாட்டு சுற்றுலாவிகளை ஈர்க்கும் தாளையடி கடற்கரை!

### அத்தியாவசிய தேவைகள் இல்லாமையால் சிரமம்

யாழ்ப்பாணம், ஓக. 09

வடமராட்சி கிழக்கு தாளையடி கடற்கரையில் தற்பொழுது வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் அதிகம் ஈர்த்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சுற்றுலாக்கு பிரசித்தி பெற்ற நாடுகளில் ஒன்றான இலங்கைத்தீவில் மே, ஜூன், ஜூலை, ஓகஸ்ட் போன்ற மாதங்களில் வெளிநாட்டு சுற்றுலா வாசிகள் அதிகளவு வருவது வழமை.

இலங்கை தீவில் இயற்கை அமைவிடம், வரலாற்று இடங்கள், போர்க்காலத்தில் பாதிக்கப்பட்ட இடங்கள் என்பவற்றை பார்வையிட்டு தமது விடுமுறை காலத்தை மகிழ்ச்சியுடன் கழித்து வருகின்றனர்.

அவ்வாறே வடக்கு மாகாணத்தில் தற்பொழுது கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண மாவட்ட எல்லையில் அமைந்துள்ள தாளையடி கடற்கரை இயற்கை அழகுடன் அமைதியான தோற்றத்தில் பல வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை தன் வசப்படுத்தி வருகின்றது.

எனினும் தாளையடி கடற்கரையில் சுற்றுலா வாசிகள் தமது விடுமுறை காலங்களை கழிப்பதில் பல பிரச்னைகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

கடற்கரையில் பொதுவான மலசலகூடம் இன்மை, தங்கும் விடுதிகள் இன்மை, பயணிகளை கவரும் வர்த்தக நிலையங்கள், உணவகங்கள் இன்மை போன்ற குறைபாடுகள் காணப்படுகின்றன.

இதேவேளை உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலா வாசிகள் போதைப் பொருட்களை கடற்கரையில் பாவித்தபின் அதன் போத்தல்கள், தகரங்களை அவ்விடத்தில் வீசுவதால் சூழலின் அழகு பாதிக்கப்படுவதுடன் சூழல் மாசடைகின்றது.

எனவே தாளையடி கடற்கரையை அபிவிருத்தி செய்து சுற்றுலா வாசிகளின் சுகாதாரத்துக்கும் சுதந்திரமான நடமாட்டத்துக்கும் தேவைகளுக்கும் ஏற்றவகையில் மாற்றியமைக்க வழி வகுக்கவேண்டும்.

அவ்வாறு தாளையடி கடற்கரை அனைத்து வசதிகளுடன் காணப்பட்டால் இன்னும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்து சுற்றுலாத்துறையை மேம்படுத்த உதவும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## நுவரெலியா நோக்கி சுற்றுலாப் பயணிகள்!

கொழும்பு, ஓக. 10

நாட்டில் பல்வேறு பாகங்களிலிருந்து இயற்கை எழில்மிகு நுவரெலியா நகரை நோக்கி உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலா பிரயாணிகள் படையெடுத்துள்ளனர்.

நீண்ட வார விடுமுறையையொட்டியும் ,தற்போது அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளில் விடுமுறை வழங்கப்பட்டுள்ள நிலையிலும் நுவரெலியாவிலுள்ள பல , பிரசித்தி பெற்ற சுற்றுலாத் தளங்களை நாடி வருகை தரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது இதனால் , உணவகங்கள் மற்றும் தங்கும் விடுதிகள் முழுவதும் நிரம்பி காணப்படுகின்றன.

பொதுவாக நுவரெலியாவிற்கு வரும் சுற்றுலா பயணிகளில் பெரும்பாலானோர் கிரகரி வாவி கரையில் சுற்றுலா பயணிகளை கவரும் களியாட்ட நிகழ்வுகளிலும் , துவிச்சக்கர வண்டிச் சவாரி, படகு சவாரி மற்றும் மட்டக் குதிரை சவாரி செய்யும் இடத்திலும் பெருந்தொகையான சுற்றுலாப் பயணிகள் அதிகரித்துள்ளனர். இதில் படகு சவாரியில் அதிகம் நாட்டம் காட்டி வருகின்றனர்.

ஒவ்வொரு தொடர் விடுமுறையிலும் நுவரெலியாவிற்கு சர்வதேச உல்லாசப் பயணிகள் மாத்திரமன்றி, உள்ளூர் உல்லாசப் பயணிகளும் பெருமளவில் வருகை தந்து தங்களுடைய விடுமுறையை போக்கி வருகின்றமை வழமையாகும் இதனால் சுற்றுலா பகுதிகளில் மிகுந்த சுறுசுறுப்பாகவே காணப்படுகின்றன. (அ)

# 7 மாதங்களில் 44 யானைகள் சுட்டுக் கொலை!

கொழும்பு, ஓக. 10

இந்த வருடத்தில் கடந்த ஏழு மாதங்களில் 44 யானைகள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2024 ஆம் ஆண்டு 84 யானைகள் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டுள்ளதாகவும் இது மனித - யானை மோதலையும் சட்டவிரோத வேட்டையின் தாக்கத்தையும் எடுத்துக் காட்டுவதாக அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டில் மொத்தம் 248 யானைகள் பல் வேறு காரணங்களால் மரணித்துள்ளன.

இதில் மின்சா ரம் தாக்கி 38 யானைகளும் ரயிலில் சிக்கி 13 யானை களும் மரணித்துள்ளன.

இதனால் காட்டு யானைகளின் எண்ணிக்கையைப் பாதுகாக்க ஒரு சிறப்புச் செயல் திட்டத்தைத் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கவன்திஸ்ஸ போன்ற நன்கு அறியப்பட்ட யானைகளைப் பாதுகாப்பதற்கும், மரணங்களின் ஆபத்தான அதிகரிப்புக்குப் பின்னால் உள்ள காரணங்களைச் சமாளிப்பதற்கும் இத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

வலுவான நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், நாட்டின் யானைகளின் எண்ணிக்கை ஆபத்தான விகிதத்தில் தொடர்ந்து குறைந்து கொண்டே போகும். (அ)

### எதிர்கால சந்ததியினரை

## இயந்திரமயப்படுத்தும் சீர்திருத்தங்கள் ஏன்?

கொழும்பு, ஓக. 10

கல்விச் சீர்திருத்தத்தை நிகழ்காலத்துக்கு தேவையான வகையில் முன்னெடுப்பதில் தவறில்லை. ஆனால், அந்த சீர்திருத்தங்கள் எவ்வாறு இடம்பெற வேண்டும் என்பது தொடர்பில் நாம் அவதானம் செலுத்த வேண்டும். எதிர்காலச் சந்ததியினரை இயந்திரமயப்படுத்தும் வகையிலான கல்விச் சீர்திருத்தங்கள் சிறந்தவையல்ல என ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

கண்டியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

கல்விச் சீர்திருத்தம் என்ற பெயரில் மாணவர்களின் மனநிலையை மாற்றுவதற்கான முயற்சிகள் இடம்பெறுவதாகவே தற்போது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

கல்விச் சீர்திருத்தங்கள் தொடர்பில் அரசாங்கம் யாருடன் கலந்தாலோசித்திருக்கிறது? இதற்காக அரசாங்கம் முன்வைக்கும் ஆதாரம் என்ன? கல்விச் சீர்திருத்தத்துக்கான அறிக்கையை அரசாங்கம் தயாரித்திருக்கிறது என்றால் அதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார். இதற்கு அரசாங்கத்தின் தரப்பில் வழங்கப்படும் பதில் என்ன? என்றும் திஸ்ஸ அத்தநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார். (எ)

## 2.4மில்லியன் ரூபாய் மதிப்புள்ள பீடி இலைகளுடன் ஒருவர் கைது!

கொழும்பு, ஓக. 10

மினுவாங்கொடை, யட்டியான பகுதியில் 850 கிலோகிராம் பீடி இலைகளுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நீர்கொழும்பு, இராணுவ குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நடத்திய தேடுதல் நடவடிக்கையின்போது குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டதுடன் அவரிடம் இருந்து 2.4 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள 28 பைகளில் அடைக்கப்பட்ட 850 கிலோகிராம் பீடி இலைகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. நீர்கொழும்பு கடற்கரை வீதி பகுதியில் குறித்த பீடி இலைகள் லொறியொன்றில் கொண்டு செல்லப்பட்ட போதே பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

குறித்த சம்பவம் தொடர்பில், மினுவாங்கொடை யட்டியான பகுதியைச் சேர்ந்த 23 வயது சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (அ)

## குற்றச் செயல்களில் ஈடுபட்ட 710 பேர் கைது!

கொழும்பு, ஓக. 10

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் பொலிஸாரால் நடத்தப்பட்ட விஷேட சுற்றிவளைப்பின் போது குற்றச் செயல்களில் ஈடுபட்ட சந்தேகத்தின் பேரில் 710 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சுற்றிவளைப்பில் 27,388 பேர் ஈடுபடுத்தப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

குற்றச் செயல்களுடன் நேரடியாக தொடர்புடைய 17 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 204 சந்தேகநபர்கள் இந்த சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மதுபானம் அருந்திய நிலையில் வாகனம் செலுத்திய 58 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் முறையற்ற விதத்தில் வாகனங்களை செலுத்திய 26 பேர் உட்பட போக்குவரத்து விதிகளை மீறிய 2,992 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 10.07.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org